கல்கி



ALKI செப்டம்பர் 14, 1952 4 அணா


கல்கி பொருளடக்கம்

கலை 12
இதழ் 7

1952 செப்டம்பர் 14

நந்தன ஆவணி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


செப்டம்பர் 13உ
தமிழ் நாடெங்கும்
பி. எஸ். சரோஜா
சத்யன் • குமாரி
எம். என். நம்பியார்
குமாரி தங்கம்
கே. ராமசாமி
பங்கஜவல்லி
நடிக்கும்
நீலா புரொடக்ஷன்ஸ்
பிரியசகி
தமிழ்
வசனம். பாடல்கள்
கம்பதாஸன்
பின்-பாட்
பி.லீலா·ஜிக்கி·மோதி
ஸ்டுடியோ
மெர்ரிலாண்ட்
திருவனந்தபுரம்
டைரக்ஷன்
ஜி. ஆர். ராவ்
EP
விவரங்களுக்கு: பி.சுப்ரமணியம், ஸிடி தியேட்டர்ஸ் லிமிடெட், திருவனந்தபுரம்.

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 7

மிஞ்சிப்போன லஞ்ச ஊழல்!

லஞ்ச ஊழல் எவ்வளவு பயங்கரமானது? ஒரு தேச நிர்வாகத்தில் அது புரையோட விட்டு விட்டால் அந்த நாட்டின் கதி என்ன ஆகும்?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் என்ன என்பதை, எகிப்து தேசத்தின் இன்றைய நிகழ்ச்சிகள் உலகத்துக்கு நிரூபித்திருக்கின்றன.

ஆறு வாரங்களுக்கு முன், எகிப்தின் இராணுவத் தலைவர்களில் ஒருவரான ஜெனரல் நாஜிப் உருவாக்கிய புரட்சி சில மணி நேரத்துக்குள் ஆச்சரியகரமாக வெற்றி பெற்றது. அதன் பலனாக எகிப்து மன்னர் பரூக் முடி துறந்து வெளி நாட்டில் போய் அடைக்கலம் புகுந்தார்.

"தேசத்தில் குழப்பத்தைத் தடுத்து, ஒழுங்கை நிலை நிறுத்துவதுடன் என் கடமை முடிந்து விட்டது; எகிப்து அரசியலில் தலையிடும் உத்தேசம் எனக்கு இல்லை" என்று ஜெனரல் நாஜிப் அப்போது பிரகடனம் செய்தார்

அவருடைய அழைப்புக்கு இணங்க அலி மேஹர் எகிப்து மந்திரி சபையை அமைத்தார். ஏற்கெனவே பரூக் மன்னருக்கும் தமக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாகப் பிரான்ஸில் வசித்துக் கொண்டிருந்த வப்துக் கட்சித் தலைவர் நஹாஸ் பாஷா எகிப்துக்கு ஓடோடியும் வந்தார்.

மன்னர் முடி துறந்ததுடன் எகிப்தில் குழப்பம் அடங்கி மறுபடியும் அமைதி நிலவலாம் என்று அப்போது பலரும் கருதினர்.

ஆனால் அவர்கள் எண்ணியபடி எகிப்தில் அமைதி ஏற்படவில்லை. அன்றிலிருந்து நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி, இன்று எகிப்தின் சரித்திரமே கண்டிராத அரசியல் கொந்தளிப்பில் வந்து முடிந்திருக்கிறது.

அதன் விளைவாக, பரூக் மன்னர் முடி துறந்தபின் பிரதம மந்திரி பதவியேற்ற அலி மேஹர் அப்பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

ஜெனரல் நாஜிபைப் பிரதம மந்திரியாகக் கொண்டு பதினாறு பேர்கள் அடங்கிய புதிய மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது.

ஆறு வாரங்களுக்கு முன் தாம் அரசியலில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கூறிய ஜெனரல் நாஜிப் இப்போது எகிப்து அரசியல் தலைவர்களுக்கெல்லாம் தலைவராகி விட்டார்! எகிப்தின் சர்வாதிகாரியாகி விட்டார்!

* * *

எகிப்து நிர்வாகத்தில் புரையோடிய லஞ்ச ஊழலுக்குக் காரண புருஷர்களான சர்க்கார் அதிகாரிகள், தலைவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஜெனரல் நாஜிப், அலி மேஹர் பிரதம மந்திரி பதவி ஏற்றதும் கட்டளையிட்டார்.

அதற்கிணங்க, பலர்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது. அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல தலைவர்கள் கட்சிகளிலிருந்து விலக்கப் பட்டனர்.

எகிப்தில் உடனடியாகச் சில புரட்சிகரமான சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஜெனரல் நாஜிப் உத்தர விட்டார்.

எகிப்தில் உள்ள நிலங்களில் பெரும் பகுதியும் ஒரு சிலருக்குச் சொந்தமாக இருக்கிறது. அதைக் குடியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் மேற்படி சீர்திருத்தங்களில் ஒன்று.

அத்தகைய சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் அவசரப் படக்கூடாது; அவசரப் பட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை சீர்குலையும் என்று பிரதம மந்திரி அலி மேஹர் கருதினர். இந்த அபிப்பிராயத்தை ஜெனரல் நாஜிப் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனாலேயே அலி மேஹர் மந்திரி சபை மறைந்து நாஜிப் மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது.

ஜெனரல் நாஜிப் பிரதம மந்திரி பதவியை ஏற்றதும், எகிப்து சர்க்கார் நிர்வாகத்தில் லஞ்ச ஊழலுக்குக் காரணமாக இருந்ததாகக் கருதப்படும் ஐம்பது பேர்களுக்கு

மேற்பட்ட பிரபல தலைவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். மாஜி மந்திரிகளில் பலர் கைதி யாகி யிருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர பல பிரபல தலைவர்கள் வெளி நாடுகளில் அஞ்ஞாதவாசம் செய்து வருகிறார்கள்.

ஏற்கெனவே பல தடவை எகிப்தின் பிரதம மந் திரியாக இருந்த நஹாஸ் பாஷா கூட அவரது வீட்டிலே காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்!

நஹாஸ் பாஷா சுதந்திர எகிப்தின் தந்தை; ஜக்லூல் பாஷாவின் பிரதம சீடர்; எகிப்தின் அடிமைத்தளையைத் தகர்த்து எறிந்து அந்த நாட் டுக்குச் சுதந்திரம் சட்டுக் கொடுத்த மாபெரும் வப்துக் கட்சியின் இணையற்ற தலைவர்; எகிப்து மக்களிடையே மிகுந்த செல்வாக்கு உள்ளவர்.

அப்பேர்ப்பட்ட நஹாஸ் பாஷா உள்பட பெரும்பாலான தலைவர்களும் காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்றால், எகிப்து நாட்டின் கொந்தளிப்பு எல்லை கடந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மிதமிஞ்சிப் போன லஞ்ச ஊழலே அந்த நாட்டை இன்றைய அலங்கோலமான நிலைக் குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

* * *

எகிப்தில் இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் புரட்சியையும் குழப்பத்தையும் கவனிப்பவர்கள், அந்த நாட்டில் கொந்தளிப்பு அடங்கி அமைதி ஏற்படுவதற்குச் சமீப காலத்தில் வழி உண்டா என்றே நினைப்பார்கள்.

செல்வாக்குள்ள பிரபல தலைவர்கள் மீதும் முன் னாள் மந்திரிகள் மீதும் வழக்குத் தொடர்ந்து முடிவு காண்பது எளிதான காரியமல்ல.

எது எப்படியாயினும் இன்னும் சில மாதங்கள் வரையில் எகிப்தில் பார்லிமெண்டு ஆட்சி முறை இருக்க முடியாது.

எகிப்தின் புதிய பிரதம மந்திரியும் பிரதம தளபதியுமான ஜெனரல் நாஜிப் சர்வாதிகார ஆசை கொண்டு நிதான புத்தியை இழந்து விடா மல் இருக்க வேண்டும்.

மிகுந்த செல்வாக்குள்ள பல தலைவர்களின் எதிர்ப்பைச் சமாளித்தாக வேண்டும்.

சக்தியும் செல்வமும் படைத்த நிலச் சொந்தக் காரர்களின் எதிர்ப்பு காரணமாக, எகிப்தின் பொருளாதார நிலைமை சீர்குலைந்து விடாமல் புரட்சிகரமான நிலச் சீர்திருத்தங்களை அமுலுக் குக் கொண்டுவர வேண்டும்.

பிரிட்டனுக்கும் எகிப்துக்குமிடையே புகைந்து கொண்டிருக்கும் பிரச்னைகளை முற்ற விடாமல் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி மகத்தான பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஜெனரல் நாஜிப் வெற்றி பெற்றாலன்றி, எகிப்தின் எதிர்காலம் என்னவாகும் என்பது பற்றி இப் போது எதுவும் சொல்வதற்கில்லை.

"டில்லியில் விஷமம் செய்ய முடியாது!"

இந்திய சர்க்காரின் தொழில் இலாகா மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி சிறந்த அறிவாற்றல் உள்ளவர். ஏற்கெனவே பெரிய மனுஷர். ஆகை யால் ராஜாஜியைத் தாக்கித்தான் பெரிய மனுஷர் ஆகவேண்டும் என்ற அவசியம் மற்றும் சிலரைப் போல் அவருக்கு இல்லை.

ஆயினும் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய் திருந்த போது அவர் பேசிய பேச்சுக்கள் சிலருக்கு அர்த்தமாகவில்லை. "எதற்காக இப்படிப் பேசு கிறார்!" என்று விளங்கவும் இல்லை.

போகிற போக்கில் ஒரு விசித்திரமான விஷயம் சொல்லிவிட்டுப் போனார். "டில்லியில் நேருவின் மந்திரி சபையில் நான் இருக்கிறேன். ஆகையால் அங்கே என்னால் விஷமம் ஒன்றும் செய்து விடாது!" என்றார். இது நமது மனக்குழப்பத்தை இன்னும் அதிகமாக்கிற்று. "டில்லியில்தான் விஷமம் செய்ய முடியவில்லையே! சென்னையி லாவது விஷமம் செய்து விட்டுப் போவோம்!" என்று எண்ணினாரா, என்ன! இதையும் நம்மால் நம்ப முடியவில்லை.

ஸ்ரீ டி. டி. கே. யின் அபிமானிகளுக்கும் நண்பர் களுக்கும் அவர் கூறியவற்றில் இரண்டு விஷ யங்கள் தொல்லையை அளித்தன. சென்னையில் நாம் உணவுக் கண்ட்ரோலை நீக்க வேண்டுமென்று தவங்கிடந்தோம். ராஜாஜி அதை நீக்கித்தொலைத் தார். அதனால் இம் மாகாணத்தில் ஏற்பட்டிருக் கும் குதூகலத்தைச் சொல்ல முடியாது.

"நீங்களும் கண்ட்ரோலை நீக்கக் கூடாதா!" என்று சென்னை வர்த்தகர்கள் கேட்டார்கள். "நாங்களும் வாலிழந்த நரியைப் போல் ஆக வேண்டுமா!" என்று ஸ்ரீ டி. டி. கே. திருப்பிக் கேட்டார். இதிலிருந்து கண்ட்ரோலைச் சென்னை சர்க்கார் நீக்கியதனால் வால் இழந்த நரியாகி விட் டார்கள் என்றும், கண்ட்ரோலை எடுத்தது பிசகு என்றும், அந்த முறை தோல்வி அடைந்துவிட்ட தென்றும் ஸ்ரீ டி. டி. கே. கருதுவதாக ஏற்பட் டது. இதையெல்லாம் நாம் அடியோடு மறுக்கி றோம். பொதுமக்களும் மறுக்கிறார்கள். ஆனால் இத்தகைய அபிப்பிராயத்தை மத்திய சர்க்காரின் பொறுப்புள்ள மந்திரி ஒருவர் கூறியது விஷமக் காரர்களுக்கு இடம் கொடுத்ததாகும். ஆங்காங்கு வியாபாரிகள் தானியங்களைப் பதுக்கவும், விலையை அளவுக்கு அதிகமாகத் தூக்கவும் இடம் ஏற்படும். ஏழை மக்கள் கஷ்ட மடைவார்கள்.

மத்திய சர்க்காரின் உணவு மந்திரி கித்வாயும் நிதி மந்திரி தேஷ்முக்கும் சென்னைக்கு வந்து பார்த்து "கண்ட்ரோல் ரத்து வெற்றிகரமாய் நடக்கிறது" என்று சொல்லி யிருக்கும்போது, ஸ்ரீ டி. டி. கே. இப்படிச் சொல்வானேன்! டில்லி யில் விஷமம் செய்ய முடியவில்லை, இங்கேயாவது செய்யலாம் என்பது காரணமா!

அவர் கூறிய ஆட்சேபத்துக்குரிய மற்றொரு விஷயம் கைத்தறித் தொழிலைப் பற்றியது. சில நாளைக்கு முன்னால் ராஜாஜி "புடவை வேஷ்டி உற்பத்தியைக் கைத்தறிகளுக்கு ஒதுக்கி விட வேண்டும். கைத்தறியைக் காப்பாற்ற அதுதான் வழி!" என்றார். ஸ்ரீ டி. டி. கே. இதை மறுத்து "அவ்விதம் செய்தால் இந்தியர்கள் நிர்வாண இயக்கத்தை மேற்கொள்ள வேண்டியதுதான்!" என்றார். அதற்கு ஆதாரமாகப் புள்ளி விவரங் களைக் குறிப் பிட்டார். அப்புள்ளி விவரங்கள் தவறானவை என்று சமீபத்தில் ராஜாஜி எடுத்துக் காட்டி யிருக்கிறார். "இந்தியா தேசத்துக்கு வேண் டிய வேஷ்டிகளும் சேலைகளும் கைத்தறிகளே தயாரிக்க முடியும்" என்று அத்தொழிலில் தேர்ந்த நிபுணர்கள் புள்ளி விவரங்களுடன் எடுத் துக் காட்டியிருக்கிறார்கள்.

"இந்த விவாதத்தில் எங்கள் சொந்த விஷயத்தைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். நாங்களே தீர்த்துக் கொள்வோம்" என்கிறார் ராஜாஜி. ரொம்ப சரி; அவர்களது சொந்த பிரேக அம்சத்தைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும்.

ஆனால் பொறுப்புள்ள மந்திரிகள் கஷ்டப்படும் ஏழைகளிடம் அநுதாபம் இல்லாமல் இவ்விதம் பேசுவதினால் ஏற்படும் விபரீத விளைவுகளைப் பற்றித்தான் கவலைப்படுகிறோம்.

சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால் சில மந்திரிகள் இப்படியெல்லாம் யோசனையில்லாமல் பேசி வந்தார்கள். அதன் பயனைப் பொதுத் தேர்தலில் ஸ்ரீ டி. டி. கே. கூட அனுபவித்தார். தேர்தல் பிரசாரத்தின் ஆரம்பத்தில் அவர் அலட்சியமாகவே இருந்தார். வர வர எதிர்ப்பு எவ்வளவு கடுமையானது என்பதை உணர்ந்தார். தேர்தல் முடிவில், சொற்ப வோட்டுகளினால்தான் ஸ்ரீ டி. டி. கே. வெற்றியடைய முடிந்தது.

இன்னும் இம்மாகாணத்தில் பல காங்கிரஸ் அபேட்சகர்கள் படுதோல்வி அடைந்தார்கள்.

இதன் பயனாக மாகாணமே நாசமடையும் என்ற நிலைமை ஏற்பட்டது. ராஜாஜி முன்வந்து காப்பாற்றினார்; இன்னமும் சில காலம் அவர் காப்பாற்றியே யாகவேண்டும்.

இதையெல்லாம் நினைத்துப் பாராமல் ஸ்ரீ டி. டி. கே. 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்று பேசிவிட்டுப் போனதுபற்றி வருந்துகிறோம்.

"செய்யக்கூடிய விஷமத்தை டில்லியிலேயே செய்யட்டும்; சென்னைக்கு வந்து செய்ய வேண்டாம்" என்று கேட்டுக் கொள்கிறோம்.

அவருடைய பிரசித்தி பெற்ற அறிவாற்றலையும் வாசாத் திறமையையும் வேறு நல்ல காரியங்களில் உபயோகிக்கும்படியும் கோருகிறோம்.

பாரதியாரின் அமர ஜயந்தி

மகாகவி பாரதியார் அமரரான செப்டம்பர் 11-ந் ஜயந்தி தினத்தை இத் தமிழ்நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். தமிழர்கள் உள்ள இடமெல்லாம் கொண்டாடுகிறார்கள்.

பாரதி சங்கத்தார் நடத்தும் விழா சென்னை நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. பல வித்வான்களின் இன்னிசைக் கச்சேரிகளும் பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. ஜார்ஜ் டவுன் கச்சாலீசுவரர் கோவிலுக்கு முன்னுள்ள மைதானத்தில் அலங்காரப் பந்தலில் விழா கொண்டாடப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை யொட்டிப் பாரதி சங்கத்தின் காரியதரிசி, கவி பாரதியாரின் அருமையான பாடல்களிலிருந்து பொறுக்கு மணிகள் பல அடங்கிய சிறிய நூல் ஒன்றை, "ஜய பேரிகை" என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார். அட்டை, கவியரசரின் உருவத்துடனும் கண் கவரும் வனப்புடனும் திகழ்கிறது. பாரதி விழா நடத்துவோருக்கும் பாரதி கவிதைப் பிரசாரத்துக்கும் மிக உபயோகமான பிரசுரம். விலை நாலு அணா. பாரதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை என்ற விலாசத்திலும், காரியதரிசி, பாரதி சங்கம், 15, கோவிந்து தெரு, தியாகராயநகர் என்ற விலாசத்திலும் மேற்படி புத்தகம் கிடைக்கும்.

அதிகமான பிரதிகள் மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்குக் கமிஷன் தள்ளுபடி உண்டு என்று அறிவிக்கப் படுகிறது.

நகர சபைத் தேர்தல்கள்

சென்னை மாகாண மெங்கும் நகர சபைத் தேர்தல்கள் நடத்தப்படி சென்னை சர்க்கார் உத்தரவு இட்டிருக்கிறார்கள். இன்னும் தேர்தலைத் தள்ளிப் போடுவது ஜனநாயகத்துக்கு முரணாகும் என்றுதான் நடத்தச் சொல்லியிருக்கிறார்கள்.

பல இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்; இன்னும் பல இடங்களில் நிறுத்தப் படவில்லை.

இப்படிப் பல இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் நிறுத்தப்படாததிலிருந்து காங்கிரஸ் ஸ்தாபனம் சென்னை மாகாணத்தில் இன்னும் நல்ல முறையில் திருத்தி அமைக்கப்பட வில்லை, புத்துயிர் பெறவில்லை என்று வெளியாகிறது.

சென்னை அரசாங்க இயந்திரத்துக்கு ராஜாஜி செய்த உதவியைப்போல் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கும் யாராவது செய்தால்தான் இம்மாகாணம் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைய முடியும். நிற்க.

காங்கிரஸ் அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடங்களி லெல்லாம் அவர்களை ஆதரிப்பதே வாக்காளர்களின் தலையான கடமையாகும்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பற்றி மேலே சொன்னதின் கருத்து, பல தொகுதிகளில் அபேட்சகர்களை நியமிப்பதில் தவறுகள் ஏற்பட்டிருக்கும் என்று ஊகிக்கலாம். ஆனால் நகரசபைகளுக்குப் போகிறவர்கள் பிரமாதமான நன்மையோ, தீங்கோ, ஜனங்களுக்குச் செய்துவிட முடியாது.

அப்படிச் சாதாரணமாகப் போகிறவர்கள், காங்கிரஸ் அபேட்சகர்களாகவே இருந்தால், அதனால் சில நன்மைகள் நிச்சயம் உண்டு. ராஜாஜியின் கரங்களுக்கு வலுக் கொடுத்ததாகும்.

ராஜாஜி மற்ற அவசர வேலைகளை முடித்துக்கொண்டு நகரசபைச் சீர் திருத்தத்தில் கவனம் செலுத்தினாரானால் எல்லாம் சரியாகிவிடும். அச்சமயம் நகர சபைகளில் கூடுமான இடங்களிலெல்லாம் காங்கிரஸ் மெஜாரிட்டி இருப்பது மிக்க அநுகூலமாயிருக்கும்.

முக்கியமாக, மாகாணத் தலைநகரமான சென்னையின் கார்ப்பொரேஷனில் காங்கிரஸ் பெரும்பான்மையோராயிருப்பது மிக அவசியம். இல்லாவிடில் சென்னை மாகாணத்தின் கௌரவம் மறுபடியும் பறி போவதாகிவிடும்.

பொதுத் தேர்தல் இம்மாகாணத்தில் எந்த நிமிஷத்திலும் மறுபடி நடத்த வேண்டி வரலாம். அதில் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்தாக வேண்டும்.

ஆதலின் அபேட்சகர்களின் குறைநிறைகளையும் தாரதம்மியங்களையும் மறந்து விட்டு, இந்த நகர சபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே வோட்டுக் கொடுக்கும்படி நகர சபை வோட்டர்களை மன்றாடி வேண்டிக் கொள்கிறோம்.

அவசரப் பிரயாணம்

ரா. கி.

இந்தப் பத்திரிகையில் அடிக்கடி தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றி அதிகம் எழுதுவதாகச் சிலபேர்கள் புகார் கூறுவதுண்டு. அந்தப் புகாரில் உண்மை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால், ஆதிகாலத்தில் அகஸ்தியர் செய்த வேலைதான். அந்தப் பொல்லாத முனிவர்,

'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்ட' துடன் நிற்கவில்லை. அவர் கையிலிருந்த குண்டிகையில் தண்ணீரைக் கொண்டு வந்தார். அதைக் குடகு நாட்டில் கவிழ்த்து விட்டார். அகஸ்தியருடைய மண் பாண்டத்திலிருந்து பெருகிய தண்ணீர் குடகு மலை நாட்டைக் கடந்து, மைசூர் பீட பூமியைக் கடந்து, சேலம் திருச்சி ஜில்லாக்களையும் தாண்டி தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வந்து பற்பல நதிகளாகவும் வாய்க்கால்களாகவும் பிரிந்து பாய்ந்து அந்த ஜில்லாவைத் தென்னாட்டின் நெற்களஞ்சியம் ஆக்கியது!

அந்த நெற்களஞ்சியம் பத்திரமாகப் பாதுகாக்கப் படுவது தமிழ் மக்கள் அனைவரும் சிரத்தை கொள்ள வேண்டிய காரியம் ஆயிற்று. ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் காவிரி நதிக்குக் கரை எடுத்துக் கல்லணை கட்டிய சோழ மன்னர்களிலிருந்து நேற்றைய தினம் 'அவசர விவசாயப் பாதுகாப்புச் சட்டம்' செய்த ராஜாஜி சர்க்கார் வரையில் தஞ்சை ஜில்லாவுக்கு முக்கியம் தந்து தீரவேண்டியதாயிற்று.

தமிழரசுக் கழகத் தலைவர் ஸ்ரீ சிவஞான கிராமணியாரைப் பார்த்து நான் சில நாளைக்கு முன்பு "ஐயா! தாங்கள் தமிழரசு இயக்கத்தைப் பலப்படுத்த விரும்பினால் தஞ்சை ஜில்லாவில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்!" என்றேன்.

"அது எப்படி! தமிழரசின் தலைநகரம் சென்னை அல்லவோ! சென்னை நகரத்தைத்தானே ஆந்திரர்கள் பங்கு போட விரும்புகிறார்கள்! ஆகையால் தமிழரசு இயக்கத்தைச் சென்னை நகரில் அல்லவா பலப்படுத்த வேண்டும்!" என்றார் ஸ்ரீ ம. பொ. சி.

"எப்படிப் பலப்படுத்துவீர்கள்! அரிசிச் சோறு இல்லாமல் இந்த நாளில் எந்த இயக்கத்தையாவது பலப்படுத்த முடியுமா! சென்னை நகருக்கு வேண்டிய அரிசி ஆந்திர நாட்டிலிருந்து வர வேண்டியிருக்கும் அவல நிலை நீங்க வேண்டாமா! தஞ்சை ஜில்லாக்காரர்கள் மனது வைத்து நெல் விளைவை 100-க்கு 25 பங்கு விதம் பெருக்கினால் தமிழ் நாட்டில் அரிசிப் பஞ்சம் தீர்ந்துவிடும். சென்னை நகருக்கு வேண்டிய அரிசியையும் தஞ்சை ஜில்லாவிலிருந்து தருவித்துக் கொள்ளலாம். ஆகையால் தஞ்சை ஜில்லாவில் சற்றுக் கவனம் செலுத்துங்கள்!" என்றேன்.

இதை அவர் ஒப்புக் கொண்டாரா, இல்லையா, என்பதைப் பற்றி அப்போது நான் திட்டமாக அறிய முடியவில்லை.

ஆனால் தஞ்சாவூர் அவசரச் சட்டம் நிறைவேற்றிய கையோடு ராஜாஜி தஞ்சாவூர் ஜில்லாவில் அவசரப் பிரயாணம் செய்யப் புறப்பட்டபோது, சென்னையைச் சேர்ந்த ஸ்ரீ ம. பொ. சி.யும், கோயமுத்தூர் ஸ்ரீ சி. பி. சு.வும் சேர்ந்து புறப்பட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளித்தது. தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லா ஒரு தனி முக்கியம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நண்பர்கள் இப்போதாவது ஒப்புக் கொண்டார்கள் அல்லவா! ஒப்புக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது!

* * *

தஞ்சை ஜில்லா விவசாயப் பாதுகாப்புக்காக ராஜாஜி செய்த சட்டத்தை 'அவசரச் சட்டம்' என்று சொல்லுவதைக் காட்டிலும், அதைத் தொடர்ந்து அவர் செய்த தஞ்சாவூர்ப் பிரயாணத்தை 'அவசரப் பிரயாணம்' என்று கூறுவது மிக்க பொருத்தமாயிருக்கும். ஒரு சனிக்கிழமை மாலையில் சட்டம் சென்னையில் வெளியாயிற்று. அடுத்த செவ்வாய்க்கிழமை காலையில் ராஜாஜி தஞ்சாவூர் சென்று இறங்கிவிட்டார். இடையில் ஞாயிற்றுக்கிழமையும் விநாயக சதுர்த்தியும் குறுக்கிட்டபடியால் பத்திரிகைகளும் செவ்வாய்க்கிழமைதான் போய்ச் சேர்ந்தன. ஆகையால் அவசரச் சட்டத்தின் ஷரத்துக்களை அப்போதுதான் தஞ்சாவூர்க்காரர்கள் தெரிந்து கொண்டனர். ராஜாஜியின் வருகை பற்றியும் பெரும்பாலோர் அவர் வந்த பிறகுதான் தெரிந்து கொண்டனர். வேண்டுமென்றே ராஜாஜி இவ்விதம் ஏற்பாடு செய்து கொண்டார். அதாவது அவசரச் சட்டத்தைப் படித்ததும் தஞ்சாவூர்க்காரர்களின் மனத்தில் முதலில் உண்டாகும் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் நேர்முகமாக அறிந்துகொள்ள விரும்பினார்: விஷமக்காரர்களும் குழப்பக்காரர்களும் பற்பல அபிப்பிராயங்களைத் தெரிவித்து விஷமமும் குழப்பமும் உண்டாக்குவதற்கு முன்னால், சட்டத்தைப் படித்ததும் ஜனங்களுக்கு ஏற்பட்ட ஸ்வச்சமான அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினார். ஆதலின் தஞ்சை ஜில்லாவுக்கு அவசரப் பிரயாணம் கிளம்பினார். அந்த ஜில்லாவைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர்கள் இந்த அவசரப் பிரயாணத்தை ஆதரிக்கவில்லை. "ஒரு வாரம் அவகாசம் கொடுத்துவிட்டு வாருங்கள்; தஞ்சை மக்கள் எத்தகைய மகத்தான வரவேற்பு அளிக்கிறார்கள் என்று பாருங்கள்" என்றார்கள். இதன் பயன், இன்னும் ஒரு மணி நேரம் முந்திப் புறப்பட்ட ரயிலில் ராஜாஜியும் புறப்பட்டதுதான்!

அவசரச் சட்டத்தினால் முக்கியமாகப் பாதிக்கப் பட்டவர்கள் தஞ்சை மிராசுதார்கள் அல்லவா! அவர்களுடைய சொத்துரிமையில் இந்த அவசரச் சட்டம் குறுக்கிட்டது என்பதைப் பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

ஆகையால் ராஜாஜி தஞ்சைப் பிரயாணத்தில் முதன் முதலாக மிராசுதார்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க விரும்பினார்.

அத்தகைய மிராசுதார் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஜில்லா கலெக்டர் ஸ்ரீ பழனியப்பா முன்னேற்பாடு செய்திருந்தார். காலை ஒன்பது மணிக்குத் தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில் மிராசுதார் கூட்டம் நடந்தது. ஜில்லாவின் பல பகுதிகளிலிருந்தும் பிரபல மிராசுதார்கள் பலரும் சிறிய மிராசுதார்களின் பிரதிநிதிகள் பலரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

தஞ்சை மிராசுதார்களைப் பற்றி யார் என்ன வேணுமானாலும் சொல்லட்டும். அவர்களில் மிகப் பெரும்பாலோர் தேச பக்தர்கள். தேசப் பொது நலத்தில் அக்கறை கொண்டவர்கள் என்பதைப்

பற்றி எனக்கு எப்போதும் சந்தேகம் இருந்த தில்லை. அந்த நம்பிக்கை இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே உறுதிப்பட்டு விட்டது.

ராஜாஜியையும் அவசரச் சட்டத்தையும் சேர்த்து வரவேற்புக் கூறினர், வடபாதிமங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார். தஞ்சை ஜில்லாவிலேயே பெரிய மிராசுதார் இவர். ஆகையினால் அவசரச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப் படுகிறவர்களில் ஒருவர். அத்துடன், இவருக்கு நிலம் உள்ள கிராமங்களில் இந்த வருஷம் வரைக்கும் உழவர் தகராறு கிடையாது; கம்யூனிஸ்ட் கிளர்ச்சியும் இல்லை. ஆகையால் அவசரச் சட்டத்தின் தேவையை நேர்முகமாக இவர் உணர்வதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. ஆனாலும் ஜில்லாவின் நிலைமையையும் மாகாணத்தின் நன்மையையும் முன்னிட்டு இச்சட்டம் அவசியமானதென்பதை ஒப்புக் கொண்டார். கூடியவரையில் இரு சாராருக்கும் நியாயம் வழங்குவதாகச் சட்டம் அமைந்திருக்கிறது என்றும், சில்லறை அம்சங்களில் உள்ள ஆட்சேபங்களை எடுத்துச் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறினர். "ராஜாஜி சர்க்காரிடம் நமக்கு நியாயம் கிடைக்காவிட்டால் வேறு எந்த சர்க்காரிடம் கிடைக்கப் போகிறது?" என்று ஸ்ரீ தியாகராஜ முதலியார் கூறிய போது, அச்சபையிலே எழுந்த கரகோஷ ஆரவாரத்தைக் கேட்டவர்கள், தஞ்சாவூர் மிராசுதார்களைப் பற்றி ஒருநாளும் குறைவாக நினைக்க முடியாது.

ஸ்ரீ தியாகராஜ முதலியார் இவ்வாறு ஆரம்பித்து வைத்த கூட்டம் குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவய்யர் நன்றி கூறியதோடு முடிந்தது. அவசரச் சட்டத்தினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்களில் குன்னியூர் ஐயரும் ஒருவர். இவருடைய கிராமங்களில் கம்யூனிஸ்ட் தொந்தரவு மிக அதிகம். இது காரணமாக, பழைய உழவர்கள் பலரை வெளியேற்றிப் புதிய ஆட்களைக் கொண்டு வந்து விவசாயம் நடத்தி வருகிறார். அவசரச் சட்டத்தின் பிரகாரம் பழைய ஆட்களுக்கு நிலத்தைத் திரும்ப சாகுபடிக்குக் கொடுக்க வேண்டியதாகும். இது மனதுக்கு எவ்வளவு சங்கடந்தரும் விஷயம் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா! ஆயினும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவரான ஸ்ரீ சாம்பசிவய்யர் தமது சொந்த விவகாரத்தை அறவே மறந்துவிட்டு, அவசரச் சட்டத்தை உற்சாகமாக வரவேற்று ராஜாஜிக்கு நன்றி கூறினர். "ராஜாஜி அளித்திருக்கும் இந்த அவசரச் சட்டத்தை ஆண்டவனின் அனுக்ரகச் சட்டமாக வரவேற்கிறேன்" என்று பக்தி உணர்ச்சி ததும்பக் கூறினர். இந்த இரு பிரமுகர்களும் ராஜாஜியைத் தொடர்ந்து சென்று மற்ற ஊர்களில் நடந்த பொதுக் கூட்டங்களிலும் விவசாயப் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

வடபாதிமங்கலம் முதலியாரும் குன்னியூர் ஐயரும் காங்கிரஸ் வாதிகள். ஆகையால் இவர்கள் அவசரச் சட்டத்தை ஆதரித்தது ஒருவாறு எதிர்பார்க்கக் கூடியதேயாகும். ஆனால் நெடும்பலம் ஸ்ரீ சாமியப்ப முதலியாரும் ஆதரவு தந்தது எதிர்பாராத ஆச்சரியமாயிருந்தது. தஞ்சை ஜில்லா நிலச்சுவான்தார் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ சாமியப்ப முதலியார். இந்தச் சங்கத்தார் சிலநாளைக்கு முன்பு நிறைவேற்றிய தீர்மானங்களை இப்பத்திரிகையில் கண்டித்து எழுதியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். ஆகையால் ஸ்ரீ சாமியப்ப முதலியாரின் ஆதரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஸ்ரீ முதலியார் மிக சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசினர். "தஞ்சாவூர் மிராசுதார்கள் என்றால் ஏதோ ராட்சதர்கள் என்பதுபோல் நினைத்துக்கொண்டு சிலர் பேசுகிறார்கள். நாங்கள் ராட்சதர்கள் அல்ல. எல்லாரும் அவரவர்களுடைய உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முயலவில்லையா! அதுபோல் நாங்களும் முயல்கிறோம்" என்று ஆரம்பித்துப் பேசினர். "அவசரச் சட்டத்தைப் பற்றி இங்கே ஆட்சேபம் எதுவும் சொல்வதில் பயனில்லை. நாம்

ஏமாந்த ஓநாய்!



என்ன கேட்டாலும் அதற்கு ராஜாஜி சரியானபடி பதில் சொல்லி நம்மை உட்கார வைத்துவிடுவார். ஆகையால் எங்கள் சந்தேகங்களையும் ஆட்சேபங்களையும் எழுதி அனுப்புகிறோம். ராஜாஜி கவனித்து அவசியமான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். பொதுவாக இச்சட்டம் இந்த ஜில்லாவுக்கு நன்மையான சட்டம். ஆகையால் இச் சட்டத்துக்கு என் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

''இங்கே ஆட்சேபங்களைச் சொல்வதில் பயனில்லை'' என்று ஸ்ரீ சாமியப்ப முதலியார் குறிப்பிட்டதன் காரணம் என்னவெனில், அவருக்கு முன் பேசியவர்கள் சிலர் அநாவசியமாகச் சில பிரச்னைகளைக் கிளப்பி, அவற்றுக்கு ராஜாஜியின் பதில்களை வாங்கிக் கட்டிக் கொண்டதுதான்.

ராஜாஜி அன்று சிறிது கோபமாகவே பேசினார். இதற்குக் காரணமாயிருந்தது ''ஹிந்து'' பத்திரிகையில் அன்று வந்திருந்த தலையங்கம். அவசரச் சட்டத்தை மேற்படி தலையங்கம் பலமாகத் தாக்கி எழுதியிருந்தது. ராஜாஜியும் அதைப் பலமாகக் கண்டித்தார். ''ஹிந்து பத்திரிகையின் தலையங்கத்தில் எழுதியிருப்பதெல்லாம் சுத்தத் தப்பு. அதன்படி நடந்தால் தஞ்சை ஜில்லாவுக்கே அனர்த்தம் உண்டாகும். ஆகையால் அந்தத் தலையங்கத்தைப் படித்து உங்கள் மனத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்!'' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். ''ஹிந்து'' பத்திரிகையின் தலையங்கத்தை அவ்வளவு முக்கியமாகக் கருதியபடியால்தான் ராஜாஜியின் கண்டனமும் அத்தனை வன்மையாக வந்தது.

கேள்வி கேட்டவர்களில் ஒருவர் ராஜாஜியின் கோபத்தை அதிகமாக்கி விட்டார்.

''பண்ணையாட்கள் மூன்று மாதம் வேலை செய்துவிட்டு, அதன் வருமானத்தைக் கொண்டு, ஒரு வருஷம் சாப்பிட வேண்டும் என்று பார்க்கிறார்கள். இது எப்படி முடியும்!'' என்றார்.

இந்தக் கேள்வி சபையிலிருந்த பலருக்குங்கூட அநாவசியமான வம்புக் கேள்வியாகத் தோன்றியது. ராஜாஜியின் பதிலும் 'சுடச் சுட' வந்தது.

''மிராசுதார்களாகிய நீங்கள் மட்டும் வருஷம் முழுவதும் வேலை செய்கிறீர்களா! என்னவேலை செய்கிறீர்கள்!'' என்று கேட்டார். பின்னர், ''பண்ணையாட்கள் வயலில் வேலையில்லாத நாட்களில் சாப்பிட வேண்டாமா! சாப்பிடாமல் பட்டினி கிடந்தால் அடுத்த வருஷம் உங்கள் வயலில் வந்து எப்படி வேலை செய்வார்கள்! அல்லது வேறு இடங்களுக்கு வேறு வேலைக்குப் போய்விட்டால், உங்களுக்கு வேண்டும்போது மட்டும் திரும்பி வருவார்களா!'' என்று ராஜாஜி கூறியதைச் சபையிலிருந்த மிராசுதார் அனைவருமே ஆமோதித்தார்கள். உண்மையில், தஞ்சை ஜில்லாவின் பண்ணையாள் முறையே வருஷம் முழுவதும் உழவர்களுக்கு ஜீவனோபாயம் அளிப்பதற்காக ஏற்பட்டதுதான். வேலையுள்ள நாட்களில் தேவைக்குக் கொஞ்சம் அதிகமாகக் கூலி கிடைத்தால்தானே, வேலையில்லாத நாட்களில் உயிரை வைத்துக் கொண்டிருக்க முடியும்!

ராஜாஜி மேற்கண்டவாறு கூறியது, சில பத்திரிகைகளில், கேள்வியைக் குறிப்பிடாமல் பதில் மாத்திரம் பிரசுரமாயிற்று. இதிலிருந்து ''வேலையில்லாத நாட்களுக்கும் ராஜாஜி கூலி கொடுக்கச் சொல்லுகிறாரே! இது எப்படி முடியும்!'' என்ற ஐயம் மேற்படி கூட்டத்தில் இல்லாதவர் பலர் மனத்தில் உண்டாகிச் சங்கடப்படுத்தி வந்தது. அதை, இந்த வாரத்தில் அவசரச் சட்டத்தின் திருத்தச் சட்டம் தெளிவாக்கியிருக்கிறது.

ஸ்ரீ சாமியப்ப முதலியாரின் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதையும் இச்சமயம் குறிப்பிட வேண்டும். மிராசுதார்களின் சார்பாகவும், உழவர்களின் சார்பாகவும் நேரில் கூறப்பட்டவை, எழுதி அனுப்பப்பட்டவை ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து, சந்தேகத்துக்கிடமாயிருந்த அம்சங்களை நன்கு தெளிவுபடுத்தித் திருத்தச் சட்டம் வெளியாகியிருக்கிறது.

* *

மிராசுதார்களை அந்த மட்டோடு விட்டுவிட்டு, தஞ்சை ஜில்லா பொது மக்களை இனிக் கவனிக்கலாம். ''மகத்தான — பிரமாதமான — வரவேற்பு வேண்டியதில்லை'' என்பதற்காகவே ராஜாஜி அவசரப் பிரயாணம் வைத்துக் கொண்ட போதிலும், தஞ்சை ஜில்லா மக்கள் இந்த விஷயத்தில் ராஜாஜியின் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. காலை பதினொரு மணிக்கு, படை படைக்கும் வெய்யிலில், தஞ்சாவூர் மைதானத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், தஞ்சை மக்களின் உற்சாகத்துக்கு அறிகுறியாக இருந்தார்கள். அநேகர் கூட்டத்தின் ஓரங்களில் குடைபிடித்துக் கொண்டு நின்றார்கள். ராஜாஜி வரும் வரையில் ஸ்ரீ சி. பி. சுப்பையா, ஸ்ரீ இராமமணியார், கீழ்மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் ஆகியவர்களின் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள். ராஜாஜி வந்ததும் மகத்தான வரவேற்பு அளித்து மகிழ்ந்தார்கள்.

அன்று மாலை 4 மணிக்கு மன்னார்குடியிலும் 6 மணிக்குத் திருத்துறைப் பூண்டியிலும் இரவு 9 மணிக்குத் திருவாரூரிலும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அவசர சட்டத்தைப் பற்றியோ அதன் ஷரத்துக்களைப் பற்றியோ அவ்வளவாகச் சிரத்தை கொண்டவர்களாகத் தோன்றவில்லை. அவசரச் சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கே அவர்களுக்கு அவகாசம் இருக்கவில்லை. ''மகான் ராஜாஜி வருகிறார்; அவரைத் தரிசித்து மகிழ வேண்டும்'' என்ற எண்ணத்துடன் வந்தவர்களாகவே தோன்றினார்கள். இல்லாவிடில், திருவாரூர்க் கோயில் பிராகாரத்தில் தமிழ் விழாவுக்கு வந்திருந்ததுபோல் பெருந்திரளான ஜனங்கள் கூடியிருந்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்! அவர்களிலே சுமார் ஐயாயிரம் ஸ்திரீகள் இருந்தார்கள். ஒலிபெருக்கி சரிவர வேலை செய்யவில்லை. ஆயினும் மாலை 6 மணிக்கு வந்தவர்கள் இரவு 9 மணிக்கு ராஜாஜி வரும் வரையில் காத்திருந்து, அவர் வந்ததும் தங்கள் மகத்தான குதூகலத்தை வெளியிட்டார்கள்.

திருவாரூர்க் கூட்டத்தில் இன்னொரு விசேஷத்தையும் கண்டேன். எல்லா ஊர்க் கூட்டங்களிலும் சிறு பிள்ளைகள் ஏராளமாக முன்னால் வந்து உட்கார்ந்து விடுவது வழக்கந்தான். சிறிது நேரம் அவர்கள் பிரசங்கம் கேட்பார்கள். பிறகு பேசவும் விளையாடவும் எழுந்து போகவும் ஆரம்பித்து விடுவார்கள். ஸ்ரீ சுப்பையா, ஸ்ரீ இராமமணியார் போன்ற கைதேர்ந்த பிரசங்கிகள்கூட கீழ்மாநிரி சிறு பிள்ளைகளின் கூட்டம் அதிகமாயிருந்தால் பேசுவதற்குத் திணறிப் போவார்கள்.

திருவாரூர்ப் பொதுக் கூட்டத்தில் முன்பகுதியெல்லாம் சிறு பிள்ளைகளின் கூட்டமாயிருந்ததைப் பார்த்ததும் முதலில் எனக்குக் கவலையாயிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் ஸ்ரீ இராமமணியார், ஸ்ரீ சுப்பையா, கீழ் மந்திரி ஆகியவர்கள் முன்னால் கூட்டத்துக்கு வந்து, ராஜாஜி வந்து சேரும் வரையில் பேசுவது என்று ஏற்பாடு. திருவாரூர்க் கூட்டத்திற்கு ராஜாஜி வரச் சிறிது நேரம் ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ''அதுவரையில்

இந்தப் பிள்ளைகள் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு அமைதியாயிருக்க வேண்டுமே!" என்று நானும் ஸ்ரீ இராமமணியாரும் கவலையுடன் பேசிக் கொண்டோம். நாங்கள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாகக் காரியம் நடந்தது. கூட்டம் நடந்த மூன்று மணி நேரமும் சபையின் முன்னணியில் இருந்த ஆயிரம் பிள்ளைகளும் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். பெரியவர்கள் இருந்த இடத்திலிருந்து சில சமயம் கூச்சல் கேட்டது. (ஒலி பெருக்கி வேலை செய்யாமையால் இது நிகழ்ந்தது என்று பின்னால் அறிந்தோம்.) ஆனால் பிள்ளைகள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சத்தமே வரவில்லை. நடுவில் ஒரு பிள்ளைகூட எழுந்திருக்கவில்லை. எல்லாரும் பிரசங்கங்களைச் சுவாரஸ்யமாகக் கேட்டு அநுபவிப்பதாகவும் தோன்றியது.

இந்த ஆரூர் அதிசயத்தைப் பற்றி அன்று இரவு கூட வியந்து பேசிக் கொண்டிருந்தோம். மறுநாள் காலையில்தான் இரகசியம் தெரிந்தது. திருவாரூரில் மாணவர் தமிழரசுக் கழகம் ஒன்று இருக்கிறது. இந்தக் கழகத்தின் தனித் தலைவனாகிய மாணவன் பெயரும் தமிழரசுக் கழகத் தலைவரின் பெயர்தான். அதாவது திருசிவஞானம். பார்த்தால், அகஸ்தியரைப்போல் இருக்கிறான். ஐந்தாவது பாரம் படிக்கிறான். பேச்சுக் கொடுத்துப் பார்த்தால், ஒரு மாபெரும் இயக்கத்தின் தேர்ந்த தலைவனைப்போல் பேசுகிறான். இந்தச் சிறு பிள்ளையின் முயற்சியினால் திருவாரூரில் மாணவர் தமிழரசுக் கழகம் இணையற்ற முறையில் நடந்து வருகிறது. சுமார் ஆயிரம் பிள்ளைகள் கட்டுப்பாட்டுடன் பொதுக் கூட்டத்துக்கு வரவும், ஒழுங்காக அமர்ந்திருந்து அமைதியாகப் பிரசங்கங்களைக் கேட்கவும், ஆரவாரத்துடன் தலைவர்களை வரவேற்கவும் பயின்றிருக்கிறார்கள்.

ஸ்ரீ இராமமணியாரின் தமிழரசு இயக்கம் எவ்வளவு தூரம் பரவி எவ்வளவு நல்ல பலனை அளித்திருக்கிறது என்பதைத் திருவாரூரில் நன்கு அறிந்து கொண்டேன். இம்மாதிரி ஒவ்வொரு முக்கியமான பட்டணத்திலும் மாணவர் தமிழரசுக் கழகம் ஒன்று ஏற்பட்டு நல்ல முறையில் இயங்குமானால், தமிழ் நாட்டின் வருங்காலத்தைப் பற்றி யாருமே கவலைப்பட வேண்டியதில்லை.

* * *

அவசரச் சட்டத்தின் பயனைப் பாட்டாளி உழவர்களிடையில் ஏற்பட்டிருந்த உற்சாகத்தை மறுநாள் மாயூரத்திலும் சீகாழியிலும் நன்கு பார்க்க முடிந்தது. அந்த ஒருநாளில் அவசரச் சட்டத்தைப் பற்றிய செய்தியும் ராஜாஜியின் வரவு பற்றிய செய்தியும் எங்கும் பரவி விட்டன. மாயூரத்தில் காங்கிரஸ் கொடியை மிக்க சிரமத்துடன் நிலை நாட்டிக் கொண்டிருப்பவர் ஜனாப் இஸ்மாயில் என்னும் இளைஞர். இவருடைய முயற்சியினால் மாயூரம் அன்று திருவிழாக் கோலம் பூண்டு விளங்கிற்று. எங்கே பார்த்தாலும் வரவேற்பு வளைவுகளும் மகர தோரணங்களுமாயிருந்தன. மத்தியானம் இரண்டு மணியிலிருந்து பொதுக் கூட்டம் நடக்க இருந்த மைதானத்தை நோக்கி ஆயிரக் கணக்கான குடைகள் பிரயாணம் செய்தன. சுற்றுப் புறத்துக் கிராமங்களிலிருந்து வரவேற்புச் சின்னங்களும் வெற்றிக் கொடிகளும் பிடித்துக் கொண்டு அணி அணியாக ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

பொதுக்கூட்டம் முடிந்து ராஜாஜி கோஷ்டியார் சீகாழிக்குச் சென்ற பிறகுகூடத் தூரத்துக் கிராமங்களிலிருந்து இவ்விதம் ஜனங்கள் அணி அணியாக வந்து கொண்டிருந்தார்கள் என்று பிற்பாடு அறிந்தேன். ஆகையால் கூட்டத்தை மாலை 6 மணிக்குப் போட்டிருந்தால் மைதானம் கொண்டிராது; மாயூரமும் கொண்டிராது!

மாயூரம் பொதுக்கூட்டம் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாயிற்று. தஞ்சை ஜில்லாவின் மற்றொரு முக்கிய மிராசுதார் — தேசபக்தரான ஸ்ரீ மருதவாணம் பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகித்து, ராஜாஜியையும் அவசரச் சட்டத்தையும் உற்சாகத்தோடு வரவேற்றார்.

மாயூரத்தில் முக்கியமாக இரண்டு பேருடைய அபிப்பிராயத்தை நான் அறிந்து கொள்ள விரும்பினேன். அவர்களில் ஒருவர் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு. இந்தப் பொதுத் தேர்தலில் ஆடுதுறைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பாக நின்று வெற்றி மாலை சூடியவர். தஞ்சை ஜில்லாவில் காங்கிரஸ் அடைந்த வெற்றிகளில் குறிப்பிடத்தக்க வெற்றி இது. பண வசதி கொஞ்சமும் இல்லாத இந்த ஏழைத் தொண்டர், மிராசுதாரரும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவருமான ஸ்ரீ சாமியப்ப முதலியாருடன் போட்டியிட்டு வெற்றி அடைந்தார். இதற்குக் காரணமாயிருந்தது, பாட்டாளி உழவர்களிடையில் பல வருஷ காலம் இவர் உழைத்து உழன்று வந்ததேயாகும். இதன் காரணமாக இவரைப் பல மிராசுதார் நண்பர்கள் தங்கள் எதிரியாகக் கருதத் தொடங்கினார்கள். "காங்கிரஸுக்குள்ளிருக்கும் கம்யூனிஸ்ட்" என்றும் சொன்னார்கள். "மாயூரம் ஒப்பந்தம்" என்று பிரபலமடைந்து அவசரச் சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறதே, அதற்குக் காரணமாயிருந்தது இவர் உழவர்களின் சார்பாக நடத்திய கிளர்ச்சியேயாகும்.

ஆதலின் ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடுவின் அபிப்பிராயத்தை நான் மிக முக்கியமாகக் கருதினேன். அதைப் பற்றி அவர் சந்தேகத்துக்கு இடம் வையாமல் அதற்குள்ளேயே அச்சிட்டுப் பிரபலப் படுத்திவிட்டார். "பாட்டாளி உழவர்களின் மகத்தான வெற்றி" என்றும், "ராஜாஜி சர்க்கார் ஏழை உழவர்களுக்கு அளித்த வரப்பிரசாதம்" என்றும் அவசரச் சட்டத்தை வர்ணித்து ஏராளமான துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு விநியோகித்தார். ஸ்ரீ நாயுடுவின் முகபாவம் அவர் ஏழாவது உலகத்தில் இருந்தார் என்று அறிவித்தது. ஆனால் நெருக்கடியான பொதுக் கூட்டத்தின் நடுவில் அவரிடம் விஸ்தாரமாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

சென்னைக்கு நான் வந்து சேர்ந்த பிறகு அவரிடமிருந்து வந்த கடிதத்தை இங்கே வெளியிடுவது பொருத்தமாயிருக்குமென்று நினைக்கிறேன்:—

"பேராற்றலும் பேரறிவும் பெரு நோக்கமும் கொண்ட ராஜாஜி ஒருவரால்தான் உழவரைக் காக்க ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர முடியும். கொண்டு வந்தால் சமாளிக்கவும் முடியும்.

காலமறிந்து இடமறிந்து எதிர்பாராமல் காரியத்தைச் செய்து, எதிர்ப்பு உருவாகும் முன் தஞ்சை ஜில்லாவுக்கு ஓடோடியும் வந்து, மக்களை ஒன்று திரட்டி தொழிலாளி நிலச்சுவான் இருவர் கசப்புக்களையும் சமன் செய்தார். குறு முனி கடலை உண்டதுபோல் எதிர்ப்பே உருவாகாமல் நினைப்பிலேயே வெற்றி கண்டார். அரசியல் உலகில் வேறு உவமை இதற்கு இல்லை.

உழவர் உலகம் பல நூற்றாண்டுகள் இந்த அவசரச் சட்டத்தைப் பாராட்டித்தான் தீரும்.

மிராசுதார், விவசாயி, அதிகாரிகள் மூவரும் சரியானபடி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினால் உணவு உற்பத்தி பெருகும்; பஞ்சம் பறக்கும்; உழவரின் உற்சாகம், உற்பத்தியை இரட்டிப்பாக்கும். மக்கள் இந்த ஆண்டு பொங்கலை

ராஜாஜி பொங்கலாகக் கொண்டாடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க ராஜாஜி!

மாயூரம் ஜி. நாராயணசாமி, எம். எல். ஏ.
3—9—52
தலைவர்
விவசாயத் தொழிலாளர் காங்கிரஸ்.''

மாயூரத்தில் நான் சந்தித்துப் பேச விரும்பிய மற்றொருவர் ஸ்ரீ ஆர். கே. சுப்பிரமணியம். உழவர்களின் சார்பாக ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடுவும் மிராசுதாரின் சார்பாக ஸ்ரீ ஆர். கே. சுப்ரமண்யமும் பேசி விவாதித்துத்தான் மாயூரம் ஒப்பந்தம் உருவாயிற்று. ஆகையால் அந்த ஒப்பந்தத்துக்குப் பாதி பொறுப்பாளியான மனிதரையும் சந்தித்து அவர் கருத்தைக் கேட்டேன். ''தஞ்சாவூர் ஜில்லா விவசாய முறைகளை இவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து எந்தவிதமான சிக்கலுக்கும் இடம் வையாமல் அவசரச் சட்டம் செய்திருக்கிறார்கள். இதைத் தயாரித்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது'' என்று ஸ்ரீ ஆர். கே எஸ். ஒரே ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார். ''தற்போதைய நிலையில் இருதரப்பாருக்கும் நியாயம் செய்யக் கூடியவாறு இதை விட நல்ல முறையில் சட்டம் செய்ய முடியாது'' என்றும் கூறினார். ''மிகச் சிறிய விஷயங்களில் குழப்பம் உண்டாக இடம் இருக்கிறது. அவற்றை மிகு எளிதில் தெளிவுபடுத்தி விடலாம். அவற்றைப் பெரிது படுத்திப் பொதுக் கூட்டங்களில் பேசவேண்டியதில்லை'' என்றும் ஆர். கே. எஸ். கூறினார். (இவர் குறிப்பிட்ட குழப்பமான அம்சங்கள் திருத்த மசோதாவில் தெளிவாக்கப் பட்டிருக்கின்றன.)

* * *

அவசரப் பிரயாணத்தில் ராஜாஜி கடைசியாக விஜயம் செய்த இடம் சீகாழி. இந்தப் பட்டணத்தின் ஜனத்தொகை சுமார் பதினையாயிரந்தான். ஆனால் மாலையில் நடந்த பொதுக் கூட்டத்துக்குச் சுமார் முப்பதினாயிரம் ஜனங்கள் வந்திருந்தார்கள். சுற்றுப் புறங்களிலிருந்து அவ்வளவு ஜனங்கள் திரண்டு வந்து விட்டார்கள். சிதம்பரத்திலிருந்து மட்டும் சுமார் ஆயிரம் பேர் வந்திருந்ததாகத் தெரிந்தது. சீகாழிக் கூட்டத்தில் பெரும்பாலோர் பாட்டாளி உழவர்கள்.

இந்த மாபெரும் கூட்டத்துக்கு ஸ்ரீ சி. பி. சுப்பையா தலைமை வகித்தது மிகப் பொருத்தமாயிருந்தது. ''என்ன பொருத்தம்!'' என்று கேட்கிறீர்களா! நல்லது; ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இதே சீகாழியில் ஓர் அதிசயமான கூட்டம் நடந்தது. திருப்பரங்குன்றத்துக்குப் பிறகு நடந்த கூட்டம் இது. ''இந்த மாகாணத்துக்கு ராஜாஜியின் தலைமை அவசியம் வேண்டும்'' என்று நம்பியவர்களின் கூட்டம். இந்தக் கருத்தைக் காங்கிரஸ் மேலிடத்தாரிடம் சொல்லி வற்புறுத்துவதற்காக நாலு பிரதிநிதிகளை அனுப்புவதென்று அக்கூட்டத்தில் தீர்மானமாயிற்று. பின்னால் நடந்தவை நேயர்களுக்குத் தெரியும்.

மேற்கூறிய ''ராஜாஜி வேண்டும்'' மகாநாடு நடந்த அன்று மாலையில் சீகாழியில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு ஸ்ரீ சி. பி. சுப்பையா தலைமை வகித்தார்.

ஏழு வருஷங்களுக்குப் பிறகு அதே ஊரில் ஸ்ரீ சி. பி. சுப்பையா தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது.

ஆனால் சூழ்நிலையிலும் சந்தர்ப்பங்களிலும் எவ்வளவு வித்தியாசம்!

பழைய கதையை ஸ்ரீ சி. பி. சுப்பையாவினால் அடியோடு மறக்க முடியவில்லை. ஆனால் அதை வளர்த்துப் பேசவும் இல்லை. இலேசாக நினைவூட்டி விட்டு, இன்று ராஜாஜி மீண்டும் சென்னை முதன் மந்திரியாகிச் செய்திருக்கும் அற்புதங்களைக் கூறினார். நிதிமந்திரி சி. சுப்பிரமணியம் இன்னும் சிறிது விவரமாக அந்த அற்புதங்களை விவரித்தார். ஸ்ரீ சி. சுப்பிரமணியத்திடம் உள்ள பல திறமைகளோடு, அவர் சிறந்த மேடைப் பிரசங்கி என்பதையும் இந்தப் பிரயாணத்தின்போது நாங்கள் கண்டு மகிழ்ந்தோம்.

ராஜாஜி மற்றக் கூட்டங்களில் மிராசுதார்களின் கடமையைப் பற்றியே அதிகம் பேசி வந்தார். இக்கூட்டத்தில் உழவர்களின் கடமையைத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

கூட்டம் முடிந்து, சாப்பாடும் அவசரமாக முடிந்து, ரயிலுக்கு அவசரமாய்ப் புறப்பட்டுச் சென்றோம். சீகாழி கடைத் தெரு வழியாகப் போக நேர்ந்தது. அங்கே வண்டியை அவசரமாக விட முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா! முக்கால் மணி நேரத்துக்கு முன்னால் பொதுக் கூட்டத்திலிருந்து கலைந்த ஜனங்கள் இன்னமும் கடைத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்ததுதான்!

அட்டைப்பட விளக்கம்

பூனை, எறும்பு, காதலர்—இந்த மூவரும் ஒரு ரகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களை எந்தக் காவலும் கட்டுப் படுத்துவதில்லை; எந்தத் தடையும் தடுப்பதில்லை.

அந்தரத்தில் உறியைக் கட்டித் தொங்க விட்டு அதில் பால் பாத்திரத்தை வைத்தாலும் பூனைக்கு எப்படியோ தெரிந்து உருட்டி விட்டுப் பாலைக் குடித்து விட்டுப் போய் விடுகிறது.

மூடியை எவ்வளவு அழுத்தி மூடி வைத்த சர்க்கரை டப்பாக்குள்ளும் ஸ்ரீமான் எறும்பார் எப்படியோ வழி செய்து கொண்டு போய் உள்ளே அமர்ந்து விடுகிறார்.

காதலர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

தனிமையை விரும்பி உத்தியான வனத்துக்கு வந்தாள். வீணையை மீட்டி வாசிக்கலானாள். இந்த விஷயம் எப்படியோ அவளுடைய காதலனுக்குத் தெரிந்து விட்டது! வீணையின் இனிய ஜங்காரம் பத்து அடி தூரத்திலிருப்பவர்கள் காதில் விழ முடியாதது. எப்படியோ தொலை தூரத்தில் இருந்த அவன் காதில் விழுந்து விட்டது. அவனும் வேகமாக வந்தான்.

அருகில் நெருங்கியபோது வீணையிலிருந்து எழுந்த சங்கீதம் அவனை ஆட்கொண்டது. அவன், தன்னை மறந்தான். அருகில் சென்றால் அவள் வீணை வாசிப்புக்கு இடையூறு உண்டாகுமோ என்று பயந்து தான் வந்திருப்பது அவளுக்குத் தெரியாமல் பின்னால் மரத்தின் மறைவில் நின்றான். அவள் வாசித்துக் கொண்டேயிருந்தாள். அவன் வார்த்தைகளால் விவரித்துச் சொல்ல முடியாத பேரானந்தத்தைப் பருகினான்.

ஏன், அப்பர் அடிகள் அருளிப்போந்த அவ்வருஞ்செல்வத்தையே அக்கணம் பெற்றுவிட்டான்:—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

பொன்னியின் செல்வன்

கல்கி

மூன்றாம் அத்தியாயம்

பருந்தும் புறாவும்

ஆதித்த கரிகாலன் சுட்டிக் காட்டிய திசையில் ஆற்றங்கரை மண்டபம் ஒன்று இருந்தது. அது கல் வேலையினால் ஆன மண்டபம். வழிப்போக்கர்கள் வெய்யிலிலும் மழையிலும் தங்குவதற்காக யாரோ தர்மவான் அதைக் கட்டியிருக்க வேண்டும். அந்த மண்டபம் வெய்யிலிலும் மழையிலும் வெகுகாலம் அடிபட்டு முதுமையின் அறிகுறிகளைக் காட்டிக் கொண்டிருந்தது. மண்டபத்தின் மூலைகளில் சிற்ப வேலைப்பாடு உடைய உருவங்கள் சில காணப்பட்டன. அவை இன்னவை என்று கிழவராகிய மலையமானுக்குத் தெரியவில்லை.

"பார்த்தீர்களா, தாத்தா!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"குழந்தாய்! அந்த மண்டபத்தைத் தானே சொல்லுகிறாய்? அதில் வேறு ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே? மண்டபமும் வெறுமையாகத்தான் இருக்கிறது. அதில் யாரும் இருப்பதாகக் காணவில்லையே!" என்றார்.

"தாத்தா! உங்களுக்கு வயதாகிவிட்டது என்று இப்போதுதான் எனக்கு நன்றாய்த் தெரிகிறது. அதனால் கண் பார்வை குன்றியிருக்கிறது. அதோ பாருங்கள்! ஒரு பெரிய இராஜாளி! எத்தனை பெரிது? அதன் சிறகுகள் எவ்வளவு விசாலம்? கொடுமை! கொடுமை! அது தன் கால்களில் ஒரு சின்னஞ்சிறு புறாவைப் பிடித்துக்கொண்டிருக்கிறதே, தெரியவில்லையா? இராஜாளியின் கூரிய நகங்கள் கிழித்துப் புறாவின் இரத்தம் சிந்துகிறதே, தெரியவில்லையா? கடவுளே! இது என்ன விந்தை! அதோ இன்னொரு புறாவைப் பாருங்கள், தாத்தா! அந்தப் பயங்கரமான இராஜாளியின் அருகில் வட்டமிடுகிறது! அது இராஜாளியிடம் எப்படிக் கெஞ்சுகிறது? இராஜாளியின் கால்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் புறா அதனுடைய காதலனாக இருக்க வேண்டும்! காதலனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கும்படி அது கெஞ்சுகிறது! தாத்தா! அந்தப் புறா கெஞ்சுகிறதா? அல்லது இராஜாளியிடம் சண்டைக்குப் போகிறதா? இறகை அடித்துக் கொள்வதைப் பார்த்தால் சண்டைக்குப் போவதாகவே தோன்றுகிறது. கடவுளே! அந்தப் பெண் புறாவுக்கு என்ன தைரியம் பாருங்கள்! இராஜாளியுடன் சண்டைக்குப் போகிறது! காதலனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பயங்கர ராட்சதனுடன் போராடப் போகிறது! தாத்தா! இராஜாளி மனம் இரங்கும் என்று நினைக்கிறீர்களா? இரங்காது! இரங்காது! ஒருநாளும் இரங்காது! இம்மாதிரி எத்தனையோ புறாக்களை அது கொன்று தின்று கொழுத்துக்

கிடக்கிறது! சண்டாள இராஜாளியே! இதோ உன்னைக் கொன்று போடுகிறேன்!" என்று கூறிக்கொண்டே ஆதித்த கரிகாலன் பக்கத்தில் கிடந்த ஒரு கூழாங்கல்லை எடுத்து வீசி எறிந்தான். அந்தக் கூழாங்கல் மண்டபத்தை நோக்கிச் சென்று அதன் ஒரு மூலையில் பட்டு விட்டுக் கீழே விழுந்தது.

ஆதித்த கரிகாலன் "ராட்சதனே! உனக்கு நன்றாய் வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, இடி இடி என்று பயங்கரமாகச் சிரித்தான்.

பேரப் பிள்ளையின் சித்த சுவாதீனத்தைப் பற்றி ஏற்கனவே கிழவருக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. அது இப்போது இன்னும் அதிகமாயிற்று.

"தாத்தா! ஏன் என்னை இப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்? மண்டபத்தின் அருகில் போய்ப் பாருங்கள்!" என்றான் கரிகாலன்.

அவ்விதமே மலையமான் மண்டபத்தைச் சற்று நெருங்கிச் சென்று கரிகாலனின் கல் விழுந்த இடத்தை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு சிற்பம் காணப்பட்டது. அந்தச் சிற்பத்தில் இராஜாளி ஒன்று தன் கால் நகங்களில் ஒரு புறாவைக் கொத்தித் தூக்கிக் கொண்டிருப்பது போலவும், இன்னொரு புறா அந்த இராஜாளியின் மீது கோபத்துடன் பாயப் போவது போலவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தது.

மலையமான் திரும்பி வந்து, "குழந்தாய்! எனக்கு வயதாகி விட்டது என்பது உண்மைதான்! கண் பார்வை முன் போல் துல்லியமாக இல்லை. அருகில் சென்று உற்றுப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. நல்ல சிற்ப வேலை!" என்றார்.

"நல்ல சிற்ப வேலையா? சிற்ப அற்புதம் என்று சொல்லுங்கள், தாத்தா! மகேந்திர வர்மர்—மாமல்லர் காலத்துச் சிற்ப சக்கரவர்த்தி யாரோ ஒருவன் இதையும் செய்திருக்க வேண்டும்! முதலில் பார்த்ததும் உண்மையாகவே நடப்பது போலவே எனக்குத் தோன்றி விட்டது!" என்றான் கரிகாலன்.

"ஆதித்தா! அற்புதம் அந்தக் கல்லிலே மட்டும் இல்லை! உன் கண்ணிலும் இருக்கிறது; உன் மனத்திற்குள்ளேயும் இருக்கிறது. இந்த வழியாக எவ்வளவோ பிரயாணிகள் தினந்தோறும் போகிறார்கள். அவர்களில் முக்கால்வாசிப் பேர் இந்தச்





சிற்ப அற்புதத்தைக் கவனித்துக்கூட இருக்க மாட்டார்கள். மற்றும் பலர் பார்த்தும் பார்க்காதது போலவே போய் விடுவார்கள். உன்னைப் போல் ஒரு சிலர் தான் ஒரு சிற்பத்தைப் பார்த்து இவ்வளவு ஆச்சரியப்படுவார்கள்!...''

''நான் ஆச்சரியப்படவில்லை, தாத்தா! கோபப்படுகிறேன். அந்தச் சிற்பத்தை இப்போதே இடித்துத் தள்ளிவிட வேண்டுமென்று எனக்கு ஆத்திரம் உண்டாகிறது. இவ்வளவு கொடூரமான சிற்பத்தை அமைத்தவனை அதிகமாகப் புகழ்ந்து பாராட்டுவதுகூட எனக்குப் பிடிக்க வில்லை!...''

''கரிகாலா! இது என்ன விந்தை! உன்னுடைய வைர நெஞ்சு எப்போது இவ்வளவு இளக்கம் கொடுத்தது? இராஜாளி புறாவைக் கொன்று தின்பது அதனுடைய இயற்கை. சிங்க ராஜா ஆட்டினிடம் இரக்கம் கொள்ள ஆரம்பித்தால் அது சிங்க ராஜா அல்ல; அதுவும் ஆடாகத்தான் போய்விடும். சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு புரிய ஆசைப் படுகிறவர்கள் பகைவர்களையும் சதிகாரர்களையும் கொன்றுதான் ஆகவேண்டும். சக்கரவர்த்தியாயிருந்து உலகை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர்கள் பகையரசர்களைக் கொன்றுதான் தீரவேண்டும். இராஜாளி புறாவைக் கொல்லாவிட்டால், அது இராஜாளியாயிருக்க முடியுமா? இதைப் பற்றி ஏன் உனக்கு இவ்வளவு கலக்கம்?'' என்றார் மலையமான்.

''தாத்தா! நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்! ஆனால் அந்தப் பெண் புறா அப்படித் தவிப்பதைப் பார்த்த பிறகு இராஜாளிக்கு இரக்கம் வரவேண்டாமா? பெண்ணுக்கு இரங்கி ஆணை விடுதலை செய்ய வேண்டாமா? ஐயா! நீங்களே சொல்லுங்கள். உங்கள் பகைவன் ஒருவனை நீங்கள் கொல்லப் போகும் சமயத்தில் அவனுடைய காதலி குறுக்கே வந்து

புருஷனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டால் என்ன செய்வீர்கள்? அப்போது உங்கள் மனம் இரங்காமலிருக்குமா?'' என்று கரிகாலன் கேட்டான்.

'' அப்படி ஒரு பெண் குறுக்கே வந்தால் அவளை என் இடது காலினால் உதைத்து விட்டு என் பகைவனைக் கொல்லுவேன். கரிகாலா! அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. பகைவர்கள் 'தொழுத கையினில்' ஆயுதம் வைத்திருப்பார்கள் என்றும், அவர்கள் 'அழுத கண்ணீரிலும்' ஆயுதம் மறைந்திருக்கும் என்றும் வள்ளுவர் கூறியிருக்கிறார். ஆண்களின் கண்ணீரைக் காட்டிலும் பெண்களின் கண்ணீர் அபாயமானது. ஏனெனில், பெண்களின் கண்ணீருக்கு இளகச் செய்யும் சக்தி அதிகம் உண்டு. அப்படி மனத்தை இளக விட்டு விடுகிறவனால் இவ்வுலகில் பெரிய காரியம் எதையும் செய்ய முடியாது. அவன் பெண்களிலும் கேடுகெட்டவனாவான்!''

'' தாத்தா! இது என்ன? பெண்களைப் பற்றி ஏன் நீங்கள் இவ்வளவு குறைவாகப் பேசுகிறீர்கள்! பெண்களைப் பற்றிக் குறைவாய்ப் பேசுவது என் தாயாரையும் குறைவு படுத்துவதாகாதா?...''

'' குழந்தாய்! கேள்! உன் தாயாரிடம் நான் வைத்திருந்த அன்புக்கு இந்த உலகத்தில் இணை ஒன்றுமே இல்லை. எனக்கு ஆறு மகன்கள் பிறந்தார்கள். பீமனையும் அர்ச்சுனனையும் ஒத்த வீரர்களாய் வளர்ந்தார்கள். அவ்வளவு பேரையும் யுத்தகளத்தில் பலி கொடுத்து விட்டேன். அவர்கள் இறந்த செய்தி வந்த போதெல்லாம் நான் வருத்தப்படவில்லை. ஆனால் உன் தாயாரை மணம் செய்துகொடுத்து அனுப்பிவைத்த போது, அவள் சாம்ராஜ்ய சிங்காதனத்தில் அமரப் போகிறாள் என்று தெரிந்திருந்தும் என் மனம் அடைந்த வேதனையைச் சொல்ல முடியாது. ஆனால் அந்த வேதனையை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டேனா? இல்லை! அவளிடந்தான் வெளியிட்டேனா? அதுவும் இல்லை! உன் தாயை மணம் செய்து கொடுப்பதற்கு முதல் நாள் அவளைத் தனியாக அழைத்து என்ன சொன்னேன் தெரியுமா? கேள், கரிகாலா! 'மகளே! மாநிலம் புரக்கப் போகும் மன்னனை நீ மணந்து கொள்ளப் போகிறாய்! அதற்காகக் கர்வங் கொள்ளாதே! மன்மதனை யொத்த சுந்தர புருஷனை நீ மணந்து கொள்ளப் போகிறாய்! அதற்காகவும் நீ கர்வம் அடையாதே! அவ்வளவு புகழ் வாய்ந்த கணவனை மணந்து கொள்வதினால் உனக்குக் கஷ்டந்தான் அதிகமா யிருக்கும். உன் அரண்மனையில் பணி செய்யும் பணிப் பெண்கள் பலரும் உன்னைக் காட்டிலும் சந்தோஷமா யிருப்பார்கள். துக்கப்படுவதற்கும் வேதனைப் படுவதற்கும் உன்னை நீ ஆயத்தம் செய்து கொள்! உனக்குக் குழந்தைகள் பிறக்காவிட்டால் உன் புருஷன் வேறு ஸ்திரீகளைக் கட்டாயம் மணந்து கொள்வான். அதை நினைத்து நீ வேதனைப் படக் கூடாது. உனக்கு மக்கள் பிறந்தால் அவர்களை வீர மக்களாய் நீ வளர்க்க வேண்டும். அவர்கள் போர்க்களத்தில் உயிர் விட்டதாகச் செய்தி வந்தால் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடக்கூடாது. உன் கணவன் சந்தோஷமா யிருந்தால் நீயும் சந்தோஷமா யிரு! உன் புருஷன் துக்கப்பட்டால் நீ அவனைச் சந்தோஷப் படுத்தப் பார்! உன் பதி நோய்ப்பட்டால் நீ அவனுக்குப் பணிவிடை செய்! உன் கணவன் இறந்தால் நீயும் அவனுடன் உடன்கட்டை ஏறிவிடு! உன் நெஞ்சில் உதிரம் கொட்டினாலும் உன் கண்களில் மட்டும் கண்ணீர் சொட்டக் கூடாது! மலையமான் வம்சத்தில் பெண்களுடைய குலாச்சாரம் இது!' என்று இவ்விதம் உன் அன்னைக்குப் புத்திமதி கூறினேன். அம் மாதிரியே உன் அன்னை இன்றுவரை நடந்து வருகிறாள்; நடத்தி வருகிறாள். கரிகாலா! உன்னையும் உன் சகோதரனையும் இணையில்லாத வீரர்களாக வளர்த்து வந்திருக்கிறாள். உன் தந்தை நோய்ப் பட்ட பின்னர் இரவு பகல் அவர் பக்கத்திலிருந்து அவளே எல்லாப் பணிவிடைகளையும் செய்து வருகிறாள். உன் அன்னையை என் மகளாகப் பெற்றதை நினைக்கும்போதெல்லாம் என் தோள்கள் பூரிக்கின்றன!'' என்றார் மலையமான்.

'' தாத்தா! என் தாயை நினைக்கும் போதெல்லாம் நான் அடையும் பெருமிதத்துக்கும் அளவில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள்! என் தந்தையின் கொடிய பகைவன் ஒருவன் அவரைக் கொல்லுவதற்குக் கத்தியை ஓங்கிக் கொண்டு வருவதாக வைத்துக் கொள்ளுங்கள். என் தாயார் அப்பொழுது என்ன செய்வாள்? முன்னால் நின்று கண்ணீர் பெருக்கிக் கணவனைக் காப்பாற்றும்படி அப்பகைவனை வேண்டிக் கொள்வாளா? முக்கியமாக, அப்படி வருகிற பகைவன் என் அன்னைக்குத் தெரிந்தவனாகவும் இருந்துவிட்டால்......''

"குழந்தாய்! உன் தாயார் ஒருநாளும் அப்படிப் பகைவனிடம் உயிர்ப் பிச்சை கேட்க மாட்டாள். மலையமான் மகள் அவ்விதம் ஒருகாலும் தான் பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் அவமானப் படுத்த மாட்டாள். அவளுடைய புருஷனுடைய பகைவனைத் தனக்கும் கொடிய பகைவனாகவே கருதுவாள். பகைவன் முன்னால் கைகூப்ப மாட்டாள்; கண்ணீரும் விடமாட்டாள். கணவன் உயிர் துறந்தால் உடனே அவன்மீது விழுந்து தானும் உயிரை விடுவாள்! அல்லது மனத்தைக் கல்லாகச் செய்துகொண்டு உயிரோடிருப்பாள்; பகைவனைப் பழிக்குப் பழி வாங்குவதற்காக மட்டுமே உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்!"

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, "தாத்தா! நான் போய் வரவா?" என்றான்.

"அவசியம் போகத்தான் வேண்டுமா?"

"அதைப் பற்றி இன்னும் என்ன சந்தேகம், தாத்தா! பாதி வழிக்கு மேலே வந்தாகி விட்டதே!"

"ஆம்; பாதி வழிக்கு மேல் வந்தாகி விட்டது. நானும் முதலில் உன்னைப் போக வேண்டாம் என்றேன். அப்புறம் போகும்படி சொன்னேன். உன் தம்பியைப் பற்றிய செய்தி கேட்ட பிறகு நீ போவதே நல்லது என்று தீர்மானித்தேன். அருள்மொழி வர்மன் இறந்திருப்பான் என்று நான் நம்பவில்லை..."

"நானும் அதை நம்பவில்லை..."

"உன் தந்தையின் இளம் பிராயத்தில் சில காலம் அவர் இருக்குமிடம் தெரியாமலிருந்தது. அதுபோல் அருள்மொழியும் ஏதேனும் ஒரு தீவில் ஒதுங்கியிருப்பான். சில நாளைக்கெல்லாம் வந்து சேர்வான் என்றே நம்புகிறேன்! ஆனாலும் அச்செய்தி சோழ நாடெங்கும் கொந்தளிப்பை உண்டாக்கி விட்டிருக்கிறது என்று அறிகிறேன். உன் பெற்றோர்களும் கவலையில் ஆழ்ந்திருப்பார்கள். இச்சமயம் அவர்கள் பக்கத்தில் இருந்து நீ ஆறுதல் சொல்லுவது அவசியம். அப்படிப் போகும்போது பழுவேட்டரையர்களின் விரோதியாகப் போவதைக் காட்டிலும் சிநேகமாகப் போவது நல்லது. ஆகையினால்தான் நீ சம்புவரையர் அழைப்புக்கு இணங்கிப் போவதற்குச் சம்மதித்தேன். அவன் வேண்டுமென்றே என்னை அழைக்கவில்லை. அழைத்திருந்தால் நானும் வந்திருப்பேன்......"

"தாத்தா! எனக்காக அவ்வளவு தூரம் நீங்கள் பயப்படுகிறீர்களா? என்னை அவ்வளவு கையினாலாகாதவன் என்று எண்ணி விட்டீர்களா?" என்று கேட்டான் கரிகாலன்.

"இல்லை, தம்பி! இல்லை! நீ எத்தகைய வீராதி வீரன் என்பது எனக்குத் தெரியாதா? கொடிய ஆயுதங்களைத் தரித்த பதினாயிரம் பகைவர்களின் நடுவில் நான் உன்னைத் தன்னந்தனியாக நம்பி அனுப்புவேன். ஆனால் கண்ணீர் பெருக்கி உன் மனத்தைக் கலங்கச் செய்யக்கூடிய ஒரு பெண்ணின் முன்னால் உன்னைத் தனியாக அனுப்புவதற்கு மட்டும் பயப்படுகிறேன்......"

"சம்புவரையர் மகள் அப்படியெல்லாம் ஜால வித்தையில் தேர்ந்தவள் என்று நான் கேள்விப்படவில்லை! தாத்தா! ஆண் மக்கள் முன்னால் வருவதற்கே அஞ்சக்கூடிய பெண்ணாம் அவள். கந்தமாறன் சொல்லியிருக்கிறான். நானும் அப்படியெல்லாம் அவசரப் பட்டுத் தாய் தந்தையர் சம்மதம் இல்லாமல் ஒரு காரியத்தைச் செய்துவிட மாட்டேன். உங்களுடைய பழங்குடியில் பிறந்த இரண்டு பெண்கள் இன்னும் மணமாகாமல் இருக்கிறார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்......"

"ஆதித்தா! அதைப்பற்றிச் சிந்தனையே எனக்கு இல்லை. என் மூத்த மகனுடைய பெண்கள் இரண்டு பேர் திருமணப் பிராயம் வந்தவர்கள் இருக்கிறார்கள் தான். ஆனால் அவர்களை உன் கழுத்தில் கட்டும் எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை. ஏற்கெனவே சோழநாட்டுச் சிற்றரசர்கள் பலரும் என்மீது பொறாமையும் பகைமையும் கொண்டிருக்கிறார்கள். இதுவும் வேறு சேர்ந்து விட்டால் கேட்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாகச் சம்புவரையர் மகளையே நீ கட்டிக் கொண்டால் நான் ஒருவாறு திருப்தி அடைவேன். எனக்கோ வயது அதிகமாகி விட்டது. உடல் தளர்ந்து விட்டது. சில சமயம் உள்ளமும் நெகிழ்ந்து விடுகிறது. மறுபடியும் என் அருமைப் பேரனைக் காண மாட்டேனோ, இதுதான் உன்னை நான் பார்ப்பது கடைசி முறையோ என்றெல்லாம் சில சமயம் எண்ணிக் கொள்கிறேன். இனிமேல் என்னால் உனக்கு உதவி எதுவும் இல்லை. புதிய சிநேகிதர்கள் சிலர் உனக்கு அவசியம் வேண்டும். உன் விஷயத்தில் சிரத்தை கொள்ளக்கூடியவர்கள் வேண்டும். ஆகையால் சம்புவரையர் மகளை நீ மணந்து கொண்டால் நான் உண்மையில் மகிழ்ச்சியே அடைவேன்."

"தாத்தா! உங்கள் மகிழ்ச்சிக்காகக் கூட அதை நான் செய்ய முடியாது. சம்புவரையர் மாளிகைக்கு நான் விருந்தாளியாகப் போவது அவருடைய சிநேகத்தை விரும்பியும் அல்ல; அவர் மகளை மணம் புரியவும் அல்ல. நீங்கள் அது பற்றி நிம்மதியா யிருக்கலாம்."

"அப்படியானால் எதற்காகப் போகிறாய், குழந்தாய்! என்னிடம் உண்மையைச் சொல்லக் கூடாதா? உன்னுடைய நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததில் சில வார்த்தைகள் அவ்வப்போது என் காதில் விழுந்தன. பெரிய பழுவேட்டரையன் அறுபது வயதுக்கு மேல் கலியாணம் செய்து கொண்டானே, அந்த மோகினிப் பிசாசு உனக்கு ஓலை அனுப்பி யிருக்கிறாள் என்றும், அதனாலேதான் நீ கடம்பூர் வரச் சம்மதித்தாய் என்றும் அவர்கள் பேசிக் கொண்டார்கள், அது உண்மையா?"

"ஆம், தாத்தா! அது உண்மைதான்!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"கடவுளே! இது என்ன காலம்? கரிகாலா! நான் சொல்வதைக் கேள். நீ பிறந்த சோழ குலம் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையாக வந்து பெருமை பெற்ற குலம். உன்னுடைய மூதாதைகள் சிலர் உலகத்தை ஒரு குடையில் ஆண்ட சக்கரவர்த்திகளா யிருந்திருக்கிறார்கள். சில சமயம் உறையூரையும் அதன் சுற்றுப் புறத்தையும் மட்டும் ஆண்ட குறுநில மன்னர்களா யிருந்திருக்கிறார்கள். சிலர் ஏக பத்தினி விரதங் கொண்டு இராமபிரானைப் போல் இருந்ததுண்டு. சிலர் பல தாரங்களை மணம் செய்து கொண்டு வீரப் புதல்வர்கள் பலரை ஈன்றதுண்டு. சிலர் சிவபக்தர்கள்; சிலர் திருமாலின் பக்தர்கள். சிலர் 'சாமியுமில்லை; பூதமுமில்லை' என்றும் சொல்லி வந்தவர்கள். ஆனால் அவர்களில் யாரும் தங்கள் நடத்தையில் களங்கமூண்டாக்குமாறு நடந்ததில்லை. பிறன்மனை விழைந்ததில்லை. குழந்தாய்! கன்னிப் பெண்களாயிருப்பவர்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் மணந்து கொள். உன் பாட்டனின் தந்தை — புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி, ஏழு பெண்களை மணந்துகொண்டார். அவரைப் போல் நீயும் மணந்து கொள். ஆனால் பெரிய பழுவேட்டரையனை மணந்து கொண்ட மாய மோகினியைக் கண்ணெடுத்தும் பாராதே!"

"மன்னிக்க வேண்டும், தாத்தா! அந்த மாதிரி குற்றம் ஒன்றும் நான் செய்ய மாட்டேன். சோழ குலத்துக்கும் மலையமான் குலத்துக்கும் களங்கம் உண்டு பண்ண மாட்டேன்!"

"அப்படியானால் அவள் அழைப்புக்காக ஏன் போகிறாய், குழந்தாய்?"

"உண்மையை உங்களிடம் சொல்லி விட்டே போகிறேன். அவளுக்கு ஒரு சமயம் நான் ஒரு பெரிய தீங்கு செய்தேன். அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப் போகிறேன்!" என்றான் கரிகாலன்.

"இது என்ன வார்த்தை? ஒரு பெண்ணிடம் நீ மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவாவது? என் காதினால் கேட்கச் சகிக்கவில்லையே?" என்றார் மலையமான்.

ஆதித்த கரிகாலன் சிறிது நேரம் தலை குனிந்த வண்ணமாக இருந்தான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பாட்டனாரிடம் பழைய வரலாற்றை ஒருவாறு கூறினான். வீரபாண்டியனைத் தான் தேடிச் சென்று அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டு பிடித்ததையும், நந்தினி குறுக்கிட்டு உயிர்ப்பிச்சை கேட்டதையும், தான் அதைக் கேட்காமல் ஆத்திரப்பட்டு அவனைக் கொன்றதையும், அது முதல் தன் மனம் நிம்மதியில்லாமல் அலைப்புறுவதையும் பற்றி விவரமாகக் கூறினான்.

"அந்த ஞாபகம் என்னை ஓயாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது, தாத்தா! அவளை ஒரு தடவை பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்தான் என் மனம் நிம்மதி அடையும். அவளும் போனதை யெல்லாம் மறந்துவிடத் தயாராயிருப்பதாகக் காண்கிறது. இராஜ்யத்தில் குழப்பம் விளையாமல் பார்த்துக் கொள்வதிலும் சிரத்தை கொண்டிருக்கிறாள். அதற்காகவே என்னை அழைத்திருக்கிறாள். போகும் காரியத்தை முடித்துக்கொண்டு வெகு சீக்கிரமாகவே காஞ்சிக்குத் திரும்பி விடுவேன். தாத்தா! திரும்பி வந்ததும் என் தம்பியைக் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்காகக் கப்பல் ஏறிப் புறப்படுவேன்" என்றான் ஆதித்த கரிகாலன்.

கிழவர் மலையமான் ஒரு பெருமூச்சு விட்டு, "இதுவரையில் விளங்காமலிருந்த பல விஷயங்கள் இப்போது எனக்கு விளங்குகின்றன. இன்று வரை மர்மமாக இருந்த பல காரியங்கள் அர்த்தமாகின்றன. விதியை வெல்ல யாராலும் முடியாது என்பது நிச்சயந்தான்!" என்றார்.

(தொடரும்)


CBG/128
அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள் முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பளவென்று ஜொலிக்கும் புதுமைக்கு காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை உங்கள் மேல் தாராளமாகத் தூவுங்கள். அது அதிகக்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலையும் அரிப்பையும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாணிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்குப் பெயர்போனது.

உங்களுக்கும்
இந்த நாட்டு மக்களுக்கும்
சிறந்த பலன் தரும்படியான

12 வருஷ

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளில்

முதலீடு செய்து சேமியுங்கள்

காலாவதியாகும்போது 4-1/6% வருஷாந்திர வட்டியுடன்
பணம் கிடைக்கும்.

10 வருஷ

டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்

வருஷவாரியில் 3½% வட்டி ஒவ்வொரு வருஷக் கடைசியிலும்
கிடைக்கும்.

உங்களது சில்லரைச் சேமிப்புகளை

தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கில்

போட்டு வையுங்கள்

வட்டி 2%
25 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரையில் இந்த வட்டி
விகிதம் கிடைக்கும்.

இவை எல்லாவற்றிற்கும்

வருமான வரி கிடையாது

இந்த முதலீடுகள் சம்பந்தமான இதர தகவல்களுக்கும் விதிகளுக்கும் நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், கார்ட்டன் காஸில், ஸிம்லா-3 என்கிற விலாசத்துக்கு எழுதுக.

AC. 420

வாழ வைத்தவள்

கே. ஆர். கௌஸல்யா

சதாசிவய்யருக்கு ரெயில்வேயில் வேலை. நல்ல சம்பளம். ஏதோ கொஞ்சம் சொத்தும் இருந்தது அவருக்கு. அவருடைய மூத்த பெண்ணாகப் பிறந்தவள் விமலா. இளையவள் சுகந்தா. அவர்கள் இருவரையும் சிறு வயதாக இருக்கையிலேயே அவரிடம் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடி விட்டாள் அவருடைய மனைவி. திரும்பவும் வேறு விவாகம் செய்து கொள்ள விரும்பாத சதாசிவய்யர் சிறு பெண்களான விமலாவையும் சுகந்தாவையும் வளர்க்க ரொம்பவும் சிரமப்பட்டார்.

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. விமலா கல்யாணப் பருவத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். வரன் தேடும் படலத்தில் பரசுராமனைத் தம் மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்தார் சதாசிவய்யர்.

பரசுராமன் சென்னையில் ஒரு கல்லூரியில் ஆசிரியராக இருந்தான். சமீபத்தில் தந்தையை இழந்த அவன் தன் தாய் கோமதியம்மாளுடன் இருந்து வந்தான். அவனது அழகும், அந்தஸ்தும் விமலாவை வெகுவாக வசீகரித்து விட்டன. அவளை மணந்து கொள்வதில் பரசுராமனுக்குப் பூரண சம்மதம் என்றறிந்த சதாசிவய்யர் விவாகத்துக்குத் துரிதமாக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார். நல்ல சீர் வகைகளுடன் ஏராளமாகச் செலவு செய்து தம் மகளுடைய கல்யாணத்தை நல்ல முறையில் நடத்தி விட்டார் அவர்.

தன் சகோதரி சுகந்தாவையும், தந்தையையும் பிரிய மனமின்றிப் புக்ககம் சென்றாள் விமலா.

இரண்டு வருஷங்கள் ஓடி விட்டன. கல்யாணமாகிப் புக்ககம் சென்றது முதல் பிறந்தகம் வருவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாமலேயே இருந்து வந்தது விமலாவுக்கு. தன் சகோதரி சுகந்தாவையும் தந்தையையும் ஒரு முறை சென்று பார்த்து விட்டு வருவதற்கு ஆசைப்பட்ட அவள் ஒரு மாதம் இருந்துவிட்டு வருவதாகத் தன் கணவனிடமும், மாமியாரிடமும் கேட்டுக் கொண்டு பிறந்தகம் வந்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு பார்த்ததால் சந்தோஷம் தலைகால் புரியவில்லை. சதாசிவய்யருக்கும், சுகந்தாவுக்கும். விமலாவை வருந்தி வருந்தி உபசரித்துத் தங்கள் மகிழ்ச்சியை வார்த்தையிலும், செய்கையிலும் கொட்டித் தீர்த்தனர். ஒரு வாரம் ஒரு நிமிஷமாக ஓடி விட்டது.

அன்று மாடியிலிருந்து ஏதோ சாமான்களை எடுத்துக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கி வந்தாள் விமலா. இறங்கி வந்தவள் கால் தவறிக் கீழே விழுந்தாள். சத்தம் கேட்டு ஓடி வந்த சுகந்தாவும், சதாசிவய்யரும் விமலாவின் நிலையைக் கண்டு, "ஐயோ!" என்று அலறிவிட்டனர். உடனே விமலாவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்ததில் வலது பாதத்தில் உள்ள ஒரு எலும்பு முறிந்து விட்டிருக்கிறதென்றும், அது திரும்ப ஒன்று சேருவது கஷ்டமென்றும், ஏதோ தம்மால் ஆனதைச் செய்வதாகவும் கூறிச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தார் டாக்டர். பணம் தண்ணீர் போல் செலவழிய ஆரம்பித்தது.

விமலா ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து சில நாட்களாகிவிட்டன. ஆனால் தினமும் காலில் தவறாமல் கட்டுக் கட்டிக்கொண்டு வந்தாள். இதனிடையில் ஒரு முறை அவளை வந்து பார்த்து விட்டுச் சென்றான் பரசுராமன்.

அன்று காலில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்த டாக்டர் கையை விரித்து உதட்டைப் பிதுக்கினார். தாம் எவ்வளவு முயன்றும் கூட விமலாவின் மடங்கியுள்ள பாதத்தைச் சரி செய்ய முடியவில்லை என்றும் இனி அது அப்படியேதான் இருக்குமென்றும் கூறிவிட்டார். அதைக் கேட்ட சுகந்தாவும், சதாசிவய்யரும் அதிர்ச்சி தாளாமல் துடித்தனர். விமலா விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள்.

உடனே பரசுராமனுக்கு விஷயத்தை விவரித்து ஒரு கடிதம் எழுதினார் சதாசிவய்யர். பரசுராமன் உடனே புறப்பட்டு மாமனார் வீட்டுக்கு வந்திருந்தான். காலில் பலத்த கட்டுடன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த விமலாவைப் பார்த்ததும் மிகவும் வருந்தினான். அன்றைய தினமே ஊருக்குப் புறப்பட்டு விட்டான். இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவனிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்த சதாசிவய்யர் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். விஷயம் இதுதான். ஒரு கால் ஊனமாகி விட்ட விமலாவை அழைத்துக் கொள்ளத் தங்களுக்கு 'விருப்பமில்லை யாதலால் இனி சதாசிவய்யர் தம் பெண்ணைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று எழுதியிருந்தான் பரசுராமன். இனி என்ன செய்வதென்றே அறியாமல் செயலற்று நின்று விட்ட அவர் மீண்டும் தம் மாப்பிள்ளையின் மனமுருக ஒரு கடிதம் எழுதினார். ஆனால் அதற்கு எவ்விதமான பதிலும் பரசுராமனிடமிருந்து வராதது கண்டு அவர் உள்ளம் உடைந்து விட்டது.

விமலா அன்று முதல் பித்துப் பிடித்தவள் போலாகி விட்டாள். சதா தன் மாடியறையே கதியென்று இருக்க ஆரம்பித்தாள். வீட்டிலுள்ளோரோடு பேசுவது, சாப்பிடுவது எல்லாவற்றையும் ஏதோ கடனே என்று செய்து வந்தாள். அவள் மனத்தைச் சமாதானப் படுத்துவதற்காகச் சுகந்தா ஏதாவது பேச்சுக் கொடுத்தால் கூடக் கேட்பதற்குப் பதில் என்பதோடு நிறுத்திக் கொண்டு விடுவாள். அவளுடைய மனப் போக்கை ஒருவாறு புரிந்து கொண்ட சுகந்தாவும், கூடிய வரையில் அவள் இஷ்டத்திற்கு விரோதமாக எந்த விஷயத்திலும் வற்புறுத்தாமல் இருந்து வந்தாள். சதாசிவய்யரும் தமக்கு ஏது தேவை என்றாலும் சுகந்தாவிடம்தான் கேட்டு வந்தார்.

நாட்கள் பல தேய்ந்து மறைந்தன. திடீரென்று விமலாவின் உள்ளத்தில் ஏதோ ஒருவிதக் கவலை புகுந்து கொண்டு அவளை வாட்டத்தொடங்கியது. 'என் அப்பாவும் சுகந்தாவும் முன்போல் என்னிடம் அன்பாக இல்லை. கணவனின் ஆதரவை இழந்து புக்ககத்தாரினால் ஒதுக்கப்பட்டு, பிறந்தகமே கதி என்று வந்து உட்கார்ந்து விடவே அவர்களுக்கு என்னிடம் ஒருவித அலட்சிய பாவம் உண்டாகி விட்டது......உலகத்தாரைப் போல் ஓடியாடி வேலை செய்ய முடியாமல், ஒரு கால் ஊனத்துடன் வேளா வேளைக்குத் தண்டச்சோறு கொட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் நம்மைக்

காப்பாற்றுவதை அவர்கள் ஒரு சுமையாக நினைக்கிறார்கள்....' இவ்வாறு எண்ணி எண்ணி மனம் வருந்த ஆரம்பித்து விட்டாள் விமலா. சுகந்தாவும் சதாசிவய்யரும் அவளிடம் நடந்து கொள்ளும் விதமே அவளுக்கு ஏதோ ஒரு மாதிரியாகத் தோன்றியது. அர்த்தமற்ற சந்தேகம் சுடர் விட ஆரம்பித்துவிட்ட அவள் உள்ளத்தில் அதற்கேற்ப வீட்டில் நடந்த சில சம்பவங்களும் அதைத் தூண்டி விட்டன.

அன்று காலை மாடியறையில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள் விமலா. சுகந்தா துணி உலர்த்திக் கொண்டிருந்தாள்.

"சுகந்தா! சுகந்தா!" என்று கீழே யிருந்து கூப்பிட்டார் சதாசிவய்யர். "இதோ வந்து விட்டேன்" என்று குரல் கொடுத்துக் கொண்டே ஓடினாள் அவள்.

"மாடியிலே என் அறையிலே டேபின் மேலே பேனா வச்சிருக்கேன். அதை எடுத்துண்டு வா சீக்கிரம்!"

"இதோ ஒரு நிமிஷம்" என்று சொல்லிக் கொண்டே நட நடவென்று மாடி யேறி வந்த சுகந்தா பேனாவை எடுத்துக் கொண்டு கீழே ஓடினாள். அவளை வெறிக்கப் பார்த்தாள் விமலா. அவள் கண்களிலிருந்து இரண்டு கண்ணீர் முத்துக்கள் உருண்டன.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஹாலில் உட்கார்ந்து யாருடனோ பேசிக் கொண்டிருந்தார் சதாசிவய்யர். "சுகந்தா!..." என்று குழைவுடன் கூப்பிட்டார் அவர். விமலாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்த சுகந்தா, "இரு விமலா! அப்பா கூப்பிடுகிறார்!" என்று எழுந்து ஓடினாள். விமலாவும் மெள்ள எழுந்து நொண்டி நொண்டி நடந்து தந்தையிருக்குமிடம் வந்தாள். அவள் வந்ததைப் பார்த்துக்கூட அவளிடம் சொல்லாமல் "சுகந்தா! கூடத்து அலமாரியில் என்னுடைய 'பைல்' ஒன்று இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு வா!......" என்று சுகந்தாவிடம் சொன்னார்.

"நீ போய் உள்ளே வேலையைக் கவனி சுகந்தா! நான் போய்க் கொண்டு வருகிறேன்!..." என்று சொல்லிக்கொண்டே மெள்ளத் திரும்பினாள் விமலா.

"நீ போய் மாடியிலே படுத்துக்கோ, விமலா!... அவளே செய்யட்டும்..." என்று கூறினார் சதாசிவய்யர்.

பீறிட்டு எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டு தன்னறைக்குச் சென்றாள் விமலா. 'ஓ,... என்ன பட்ச பாதம் இந்த அப்பாவுக்கு! அவருடைய சிநேகிதர்களுக்கு எதிரில் நான் நொண்டி நடப்பது தமக்குக் கௌரவக் குறைவாய் இருக்கும் என்ற எண்ணத்தினால் தானே என்னைத் தடுத்து விட்டுச் சுகந்தாவைப் போகச் சொன்னார்!' என்று நினைத்து, தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள். நாளுக்கு நாள் இந்த எண்ணம் விமலாவின் இதயத்தைக் கறையான்போல் அரித்துக் கொண்டே வந்தது. எதிலுமே பற்றற்ற இயந்திரம் போல் இயங்கி வந்தாள் அவள்.

இதற்கிடையில் சுகந்தாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யும் முயற்சியில் இறங்கினார் சதாசிவய்யர். வேண்டிய வரன்கள் வந்து கொண்டிருந்தன. ஒரு வரன் எல்லா விஷயங்களிலும் மனத்திற்குத் திருப்திகரமாக அமைந்திருந்தது. பையன் சேலத்தில் நல்ல வேலையில் உயர்ந்த சம்பளத்திலிருந்தான். பூர்வீக சொத்தும் நிறைய இருந்தது. அது கிடைத்தால் சுகந்தாவுக்கு நல்ல அதிர்ஷ்டம் என்று எண்ணிய சதாசிவய்யர் அந்த வரனையே முடித்துவிடும் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தார். 'சுகந்தாவுக்கென்ன!......' நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு இனிக் குதூகலமான வாழ்க்கையை நடத்தப்போகிறாள்......என்னைப் போலவா!......" என்று எண்ணி எண்ணி ஏங்க ஆரம்பித்தது விமலாவின் உள்ளம்.

கூடத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தாள் விமலா. சுகந்தா தையல் மிஷினில் தைத்துக் கொண்டிருந்தாள்.

"ஸார், போஸ்ட்!..." என்று கத்திக்கொண்டே ஒரு கவரை உள்ளே போட்டு விட்டுச் சென்றான் தபால்காரன். சுகந்தா எழுந்து ஓடிக் கவரைப் பிரித்துக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

"யார் எழுதி யிருக்கிறார்கள்!" என்று கேட்டுக் கொண்டே மெள்ள எழுந்து வந்தாள் விமலா.

"உனக்கு ஒன்றுமில்லை......அப்பாவுக்குத்தான் வந்திருக்கிறது......" என்று சாவதானமாகக் கூறி விட்டு மேலும் படித்துக்கொண்டிருந்தாள் அவள்.

விமலாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.


"அப்பாவுக்கு வந்திருக்கும் கடிதத்தை நீ மட்டும் படிக்கலாமோ! அதில் உனக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறதோ அவ்வளவு எனக்கும் இருக்கிறது. கொண்டா அதை இப்படி!"—பட படவென்று கூறி அவள் கையிலிருந்து கடிதத்தை வெடுக்கென்று பிடுங்க முயன்றாள் விமலா.

சட்டென்று கடிதத்தைச் சுக்கல் நூறாகக் கிழித்து விட்டாள் சுகந்தா. விமலாவின் முகம்



வித்தைக்காரன் (கையைத் தட்டி):- மகா ஜனங்களே, நான் இப்பொழுது உங்களெல்லோருடைய முன்னிலையிலும் மண், கல், குண்டூசி, கண்ணாடி, ஆணி முதலியவற்றை யெல்லாம் விழுங்குகிறேன். அப்புறம் என் மேல் துணியைக் கீழே விரிப்பேன். மகா ஜனங்களே, ஏழை வயிற்றுச் சோற்றுக்கு நாலு காசு போட வேண்டும்.

கூட்டத்தில் ஒரு குரல்:—ஏன், இவ்வளவு சாப்பிட்டும் கூட உனக்குப் பசியா?



ரத்தம்போல் சிவந்தது. தாங்க முடியாத கோபத்தால் அவள் உதடுகள் துடித்தன.

"என்ன தைரியம் உனக்கு!......எனக்காகக் கடிதத்தைக் கிழித்து விட்டாயே!......அப்பா வந்து கேட்டால் என்ன சொல்வார்!

"அதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம் விமலா!.........நான் அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லிக் கொள்ளுகிறேன்......"

"சீ!......கெட்ட எண்ணக்காரி!...... என்னதான் பிறந்தவளே கதி என்று வந்துவிட்டால்தான் என்ன!......இப்படியா என்னை ஒவ்வொரு விஷயத்திலும் ஒதுக்க வேண்டும்!... வஞ்சகக்காரி!... அப்பாவுக்கும் உனக்கும் தெரியக்கூடிய அந்த விஷயம் எனக்கு மட்டும் தெரியக்கூடாதோ!...... ஆனால்......நீ அப்பாவுக்குச் செல்லப் பெண்...... எது செய்தாலும் சகஜம்..." என்று பொங்கி வரும் சினத்தையும் வெறுப்பையும் வார்த்தைகளில் கொட்டினாள் அவள்.

"ஆமாம்!......அப்படித்தான் வைத்துக் கொள்!..." என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள் சுகந்தா.

விமலாவின் கண்கள் அழுதழுது கொவ்வைப் பழம்போல் சிவந்துவிட்டன. அன்று இரவு எவ்வளவு வற்புறுத்தியும் சாப்பிடாமலே படுத்துக் கொண்டு விட்டாள் அவள்.

அந்தச் சம்பவம் நடந்தது முதல் உலகமே இருண்டு விட்டதைப் போலிருந்தது விமலாவுக்கு. மனத்தில் பெரும் புயல் வீச ஆரம்பித்து விட்டது. இப்படிப்பட்ட அவலப் பிழைப்புப் பிழைப்பதை விடப் பேசாமல் தற்கொலை செய்து கொண்டு விட்டால் என்ன என்று கூட எண்ண ஆரம்பித்து விட்டாள் அவள். இத்தகைய மன நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த போதுதான் அந்தப் புது டாக்டரைப் பற்றி அவளிடம் வந்து சொன்னான் ராஜம். முதலில் அதைக் கேட்டபோது. 'தன் கால் பழையபடி ஆகுமோ......' என்ற நம்பிக்கை தலை தூக்கியது அவள் உள்ளத்தில். ஆனால் ஓரவஞ்சனை பாராட்டும் தன் தந்தையிடம் அதைப் பற்றிக் கூறிப் பிரயோஜனமில்லை. அப்படி அவர் சம்மதித்தால் கூட, அந்தக் கபடக்காரி சுகந்தா அவரைத் தடுத்துவிடுவாள். 'நமக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யும் சமயத்தில்தானா இவள் தன் வைத்தியத்தைப் பற்றி ஆரம்பிக்க வேண்டும்...!' என்று அவள் நம்மைக் கரிக்க ஆரம்பித்துவிடுவாள் என்று எண்ணிய விமலா அடுத்த கணமே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டாள்.

மாடியில் பேச்சுக் குரல் கேட்டு மெள்ள எழுந்தாள் விமலா. பேசுவது சதாசிவய்யரும், சுகந்தாவும் தான் என்று தெரிந்து விட்டது. அவர்கள் என்னதான் பேசுகிறார்கள் என்றறியும் ஆவலில் மெதுவாக அந்த அறை வாசற்படி அருகில் போய்ச் சற்று மறைந்தவாறு நின்று கொண்டாள்.

"ஆமாம் சுகந்தா... நீ ஏன் அப்போது அதைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை! மறுபடியும் எனக்கு அதைக் குறித்தே இன்று ஆபீசுக்குக் கடிதம் வந்திருக்கிறதே!"

ஒரு கணம் சுகந்தாவின் முகம் பற்பல உணர்ச்சிகளைப் பிரதிபலித்தது.

"பிடிக்காத விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க நான் இஷ்டப்படவில்லை!......"

"பிடிக்காததற்குக் காரணம்!"

"...அப்பா, தயவு செய்து அதைப்பற்றி மட்டும் என்னிடம் கேட்கவேண்டாம்! அதுவுமில்லாமல் இப்போது நான் உங்களிடம் பேசவந்த விஷயமே வேறு. பக்கத்துத் தெருவிலே யாரோ ஒரு புது டாக்டர் வந்திருக்கிறாராம்; ரொம்பக் கெட்டிக்காரராம்; நன்றாய் வைத்தியம் செய்கிறாராம். அவரிடம் நம் விமலாவின் காலைக் காண்பிக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால் பணம்தான் கொஞ்சம் அதிகமாகக் கேட்கிறாராம்!"

ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்திருந்தார் சதாசிவய்யர்.


"நீ சொல்லுகிறதெல்லாம் வாஸ்தவம்தான் சுகந்தா! ஆனால் அந்தப் பிள்ளை வீட்டுக்காரர் ஏற்கெனவே அவசரப்படுத்துகிறாரே! வைத்தியத்துக்குப் பணம் செலவழித்துவிட்டுப் பணமில்லை

என்கிற காரணத்துக்காகக் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டால் இவ்வளவு நல்ல வரன் தட்டிப் போய்விடுமே என்று பார்க்கிறேன். வைத்தியத்தைப் பிறகுப் பாத்துக் கொள்ளலாமே!''

"அப்பா! இந்தப் பணக்கார இடம் இல்லாவிட்டால் வேறே ஒரு இடம் வந்துவிட்டுப் போகிறது! அதுவா, இப்போ முக்கியம்! பட்டுப் போக இருக்கும் ஒரு செடிக்குத் தண்ணீர் விட்டு அதைத் துளிர்க்கச் செய்யாமல், புதிதாக ஒரு செடியை நடுவதற்கு ஏற்பாடுகள் செய்வதுபோல்தான் இருக்கிறது, பாழாக இருக்கும் அக்கா விமலாவின் வாழ்வில் ஒளியை உண்டாக்காமல்,என் புது வாழ்வுக்கு நீங்கள் அஸ்திவாரம் போடுவது! அவள் வாழ்வில் மலர்ச்சியை உண்டாக்காமல் என் கல்யாணத்தைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டியதேயில்லை. முன்னே அந்த டாக்டரைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று மடமடவென்று உறுதியான குரலில் சுகந்தா பொரிந்து கொட்டிய வார்த்தைகளில் தோய்ந்து நின்ற உண்மையை ஒரு கணம் எண்ணிப் பார்த்த சதாசிவய்யரின் முகம் வியப்பாலும், மகிழ்ச்சியாலும் மலர்ந்தது.

"அப்படியே செய்தால் போயிற்று!'' என்று கூறிய அவருக்கு உணர்ச்சிப் பெருக்கால் மேலே என்ன சொல்வதென்றே தெரியவில்லை. சுகந்தாவின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி மனம் பூரித்தார் அவர்.

அதே சமயம் வெளியே நின்று அவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த விமலாவுக்குத் தலை சுற்றியது. கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.



அப்பா:—எந்தக் காரியம் ஆனாலும், நாளைக்கு என்று மிச்சம் வைக்கப்படாது. இன்றைக்கே தீர்த்து விட வேண்டும் தெரிந்ததா?

பையன்:—சரி அப்பா! நாளைக்கு என்று உள்ளே அலமாரியில் வைத்திருக்கும் மாம்பழத்தை இன்றைக்கே கொண்டு வந்து கொடுத்து விடு; தீர்த்து விடுகிறேன்!

'என்ன! சுகந்தாவா இப்படிப் பேசுகிறாள்! என் காலைக் குணப்படுத்தி, என் வாழ்வை மலரச் செய்வதற்காகத் தனக்கு வர விருக்கும் மகத்தான அதிர்ஷ்டத்தைக் கூடத் தியாகம் செய்ய முன்வரும் இவளையா நான் இவ்வளவு நாட்கள் விஷமென வெறுத்து வந்தேன்!' — அவள் கண்களில் கண்ணீர் கட்டி நின்றது. பெரும் புயலுக்குப் பின் சற்று அமைதி கண்டது அவளுள்ளத்தில். இருந்தாலும் அன்று சுகந்தா அந்தக் கடிதத்தை ஏன் தான் பார்க்கவொட்டாமல் மறைத்தாள் என்பது தான் அவளுக்குப் புரியாத புதிராக இருந்து, அவள் மனதைக் குழப்பியது.

மறுநாளே அந்தப் புது டாக்டரிடம் விமலாவை அழைத்துச் சென்றார் சதாசிவய்யர். டாக்டர் 'எக்ஸ்ரே' எடுத்து' விமலாவின் பாத எலும்புகளைப் பரிசோதித்துப் பார்த்துக் கூறிய நம்பிக்கையான வார்த்தைகள் தந்தை மகள் இருவருடைய காதுகளிலும் அம்ருத தாரையாக விழுந்தன. விமலாவின் மனம் ஒரு துள்ளுத் துள்ளியது.

கொஞ்சம் கொஞ்சமாக விமலாவின் கால் குணமாகிக்கொண்டே வந்தது. முன்போலிராமல் அவள் இப்போதெல்லாம் சுகந்தாவிடமும், தந்தையிடமும் அன்பாகவும், கலகலப்பாகவும் பழகி வந்தாள். இருந்தாலும் அந்தக் கடிதத்தைப் பற்றிய நினைவு மட்டும் அவள் உள்ளத்திரையிலிருந்து அகலாமலே இருந்து வந்தது.

இதனிடையில் விமலாவின் வைத்தியத்திற்காக ஏராளமான பணம் செலவழிந்து விட்டதால் முதலில் சுகந்தாவுக்கு ஏற்பாடு செய்திருந்த இடத்தில் அவர்கள் கேட்டபடி உடனே விவாகம் செய்ய முடியாமல் அந்த வரன் தட்டிப்போய் விட்டது. பிறகு வேறு ஒரு சுமாரான இடத்தில் அவளுக்கு விவாகம் நிச்சயம் செய்தார் சதாசிவய்யர். ஆனால் அதற்காகச் சுகந்தா கொஞ்சமாவது அதிருப்தி அடைந்ததாகவோ, மனக் கலக்கம் அடைந்ததாகவோ தெரியவில்லை.

விவாகத்திற்கு நாள் குறிப்பிட்டாகி விட்டது. விமலாவின் காலும் நன்றாகக் குணமாகி அவள் எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டாள். சதாசிவய்யர் பரசுராமனுக்கு உடனே விஷயத்தைத் தெரிவித்தார். அத்துடன் தம் இரண்டாவது பெண்ணுக்கும் விவாகம் நிச்சயமாகி இருப்பதால், அதற்கு அவனும் வந்திருந்து பிறகு ஊருக்குப் போகும்போது விமலாவையும் அழைத்துப் போகலாமென்று எழுதியிருந்தார்.

விவாகத்திற்கு நான்கு நாட்கள் இருக்கும் போதே, விமலாவைப் பார்க்கும் மகிழ்ச்சியில் கிளம்பி விட்டான் பரசுராமன்.

* * *

சுகந்தாவின் கல்யாணத்துக்கு இன்னும் நான்கு நாட்கள் பாக்கி யிருந்தன. விமலா ஓடியாடிக் கல்யாண காரியங்கள் செய்து கொண்டிருந்தாள். வாசலில் டாக்ஸி வந்து நின்ற சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்த்தாள் அவள். பரசுராமன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். உணர்ச்சிப் பெருக்கால் அவர்களிருவருடைய கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் நிரம்பி வழிந்தது. அதற்குள் அங்கு வந்த சதாசிவய்யரும் தம் மாப்பிள்ளையைக் குதூகலத்துடன் வரவேற்றார்.

அன்றிரவு மாடி வராண்டாவில் ஈஸிசேரில் சாய்ந்தவாறு படுத்துக் கொண்டிருந்தான் பரசுராமன். விமலா கீழே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவ்வளவு நாட்களாகப் பேசாத விஷயங்களைப் பேசித் தீர்த்து விட்டனர் தம்பதிகளிரு

வரும். திடீரென்று பரசுராமன், "விமலா, உன்னிடம் ரொம்ப முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். ஆனால்..." என்று கூறி நிறுத்தினான். அவன் முகத்தில் துயரச் சாயை படர்ந்திருந்தது.

"ஏன்! என்ன விஷயம்!...சொல்லுங்களேன்!" என்று கேட்டாள் விமலா.

"சொல்லுகிறேன் விமலா. ஆனால் அதற்கு முன் உன்னுடைய மனப்பூர்வமான மன்னிப்பைப் பெற்ற பின்தான் அதைச் சொல்ல என் மனம் துணியும்!..."

"மன்னிப்பா!...என்னிடமா!..." என்று விஷயம் விளங்காமல் விழித்தாள் அவள்.

"விமலா!... நீ காலில் கட்டு கட்டிக் கொண்டு படுத்திருந்த போது உன்னை வந்து பார்த்தபோதே எனக்கு உன் கால் பழையபடி கூடி வரும் என்ற நம்பிக்கையே இல்லை. அதற்கேற்றாற்போல் சில நாட்களுக் கெல்லாமே உன் தந்தையும் உன் கால் குணமாகாதென்று எழுதி விட்டார். உடனே என் மனத்தில் ஒரு எண்ணம் உதித்தது. 'உன் சகோதரி சுகந்தாவையே இரண்டாம் தாரமாக மணந்து கொண்டால் என்ன' என்று சிந்திக்க ஆரம்பித்தேன். அநேக நாட்கள் சிந்தித்தபின் என் விருப்பத்தை எழுதிக் கேட்பது என்று முடிவு செய்து கொண்டு ஒரு கடிதமும் போட்டு விட்டேன். ஆனால் இரண்டு வாரங்கள் வரை எனக்கு எவ்விதமான பதிலும் வரவில்லை. உடனே 'ஒருவேளை கடிதம் சேர வில்லையோ' என்ற சந்தேகத்தில் மறுபடியும் உன் தந்தைக்கே ஒரு கடிதம் எழுதினேன். அதை நான் தபாலில் சேர்த்த அரை மணிக்கெல்லாம் அன்றைய தபாலில் எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. ஆவலுடன் அதைப் பிரித்தேன். ஆனால்!...கடிதம் உன் தங்கை சுகந்தாவிடமிருந்தே வந்திருந்தது. படபடக்கும் இதயத்துடன் கடிதத்தைப் படித்தேன்..." அவன் இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது விமலாவின் இதயத்திலும் ஒரு வித படபடப்பு தோன்றியது. "விமலா! அந்தக் கடிதத்தை ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, பன்முறை படித்தேன். அம்மாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு உன்னைத் தள்ளி வைத்த என் புத்திக்கு அக்கடிதம் ஒரு சாட்டை யடியாக அமைந்திருந்தது. அப்படிப்பட்ட ஒரு கடிதம் வந்ததாகவே யாருக்கும் தெரியக் கூடாதென்ற எண்ணத்தில் அதைக் கிழித்தெறிந்து விட்டேன். ஆனால் அதிலிருந்த விஷயங்கள் மட்டும் என் மனத்தில் அழியா இடம் பெற்றுப் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டன.

'காலில் ஊனமேற்பட்டு விட்டதால் உங்களுக்கு வேண்டுமானால் விமலா அலக்ஷியமாகி விட்டாள். அவளை விட்டு விட்டு—அவளுக்கும் இதயம் என்று ஒன்று உண்டு என்பதை மறந்து விட்டு என்னை மணக்க முன் வரலாம். ஆனால் என் மனமோ அப்படிப் பட்டதல்ல. விமலா என் உயிர்ச் சகோதரி. அவளுக்காக, அவள் வாழ்க்கையை மலரச் செய்வதற்காக எந்தவிதமான தியாகத்தை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருப்பேனே தவிர, உங்களை மணந்து நியாயப்படி அவளிருக்க வேண்டிய ஸ்தானத்தை நான் ஏற்றுக் கொள்ளுவேன் என்று நீங்கள் கனவிலும் நினைக்க வேண்டாம். என்னை நீங்கள் மணந்த பின் ஒருவேளை எனக்கும் விமலாவுக் கேற்பட்டதைப் போல் இன்னொரு கோளாறு நேர்ந்தால் என்னை விட்டு விட்டு வேறொருவரை மணப்பீர்களா? இதே ஸ்தானத்தில் இப்போது நீங்களிருந்தால் எங்கள் விமலா நீங்கள் செய்ததைப் போல் செய்ய முடியுமா! செய்வாளா! — என்

பதைக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்திருந்தால் இத்தகைய ஒரு கடிதத்தை நீங்கள் என் தந்தைக்கு எழுதியிருக்க மாட்டீர்கள்!' என்று எழுதியிருந்தாள்.

"அக்கடிதத்தைப் படித்தவுடனேயே உன்னை வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அழைத்து வர என் உள்ளம் துடித்தது. ஆனால் முதலில் உன் முகத்திலும், சுகந்தாவின் முகத்திலும் எப்படி விழிப்பது என்று நினைக்கவே அவமானமாக இருந்தது. இத்தகைய ஒரு நிலையில் நான் தத்தளித்துக் கொண்டிருந்த போதுதான் உன் தந்தையிடமிருந்து உன் கால் பூரண குணமாகி விட்டதாகக் கடிதம் வந்தது. தாங்கொணு மகிழ்ச்சியில் உடனே புறப்பட்டு விட்டேன். இப்போதாவது சொல் விமலா! நான் செய்த தவறுக்கு என்னை மன்னிப்பாயா!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் விமலாவின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் பெருகக் கூறினன் பரசுராமன்.

விமலாவின் கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் விடாமல் பெருகிக் கொண்டிருந்தது. 'அன்றொரு நாள் வந்த அந்தக் கடிதம்' பரசுராமன் எழுதிய முதல் கடிதம். சுகந்தாவை மணப்பதாக அவன் எழுதியிருந்ததைத் தான் படித்தால் என் மனம் என்ன பாடுபடும் என்ற எண்ணத்தில்தான் விமலா எவ்வளவோ அவனை வைதும் அவன் அந்தக் கடிதத்தை அவளிடம் காட்டாமல் கிழித்தெறிந்து விட்டாள். இத்தகைய தியாக சித்தம் படைத்தவளை நான் இவ்வளவு நாட்கள் எவ்வளவு படுத்திவிட்டேன்!' அதை நினைத்த போது விமலாவின் நெஞ்சம் பாகாய்க் கரைந்து உருகியது.

"உங்கள் மேல் எவ்விதக் குற்றமும் இல்லை! எல்லாம் விதியின் செயலே......" என்று கூறிய விமலா 'இதோ வந்து விட்டேன், இருங்கள்!' என்று கூறிவிட்டுத் தடதடவென்று கீழே இறங்கி வந்தாள். வாயிற்புற அறையில் உட்கார்ந்திருந்த சுகந்தாவின் காலில் விழுந்தாள்.


"சுகந்தா!......சுகந்தா!...இவ்வளவு நாட்கள் உன் தூய உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் உன்னை விஷமென வெறுத்துப் பலவிதங்களிலும் உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேன்! இப்போதுதான் 'அவர்' சொல்லி எனக்கு எல்லா விஷயங்களும் விளங்கின. என்னை மன்னித்தேன் என்று சொல். அப்போதுதான் உன் காலை விடுவேன்......" என்று கூறிக் கதறினள் அவள். 'அவர்' சொல்லி என்பதைக் கேட்டவுடன் விஷயம் விளங்கிவிட்டது சுகந்தாவுக்கு.

"அக்கா!...... எழுந்திரு!......இதென்ன!...... உன்னைவிட வயதில் சிறியவளான என் காலில் நீ விழலாமா!......" என்று பச்சாத்தாபத்துடன் கூறி அவளை எழுப்பி நிறுத்தினள்.

"சுகந்தா!...... நீ வயதில் என்னைவிடச் சிறியவள்!......ஆனல் புத்தியில் பெரியவள். உனக்கிருக்கும் பெருந்தன்மையில் கால் பங்கு கூட எனக்கில்லை......உன் காலில் நான் விழுவதில் ஒரு தவறும் இல்லை......" என்று அவள் தலையை அன்புடன் வருடிக்கொண்டே கூறினள்.

"அக்கா!......நடந்தவை நடந்து விட்டன. அவை எப்படியோ போகட்டும். இப்போதாவது உன் வாழ்க்கைத் தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிய என் பிரார்த்தனை நிறைவேறும் காலம் வந்ததே என்று நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்......" என்று தன் சகோதரியின் கையை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டே கூறினள் சுகந்தா.


சாந்தி நிலை



பாரதியார் தமிழுக்குச் செய்துள்ள பல அரிய தொண்டுகளில் பகவத்கீதைக்கு அவர் இயற்றியுள்ள ஒப்பற்ற தமிழ் மொழி பெயர்ப்பும் ஒன்று. மகாத்மா காந்தி தினந்தோறும் நடத்திய மாலைப் பிரார்த்தனைகளில் 62-வது சுலோகத்திலிருந்து தொடங்கிப் படிப்பது வழக்கம். மகா கவியின் சொந்தக் கையெழுத்துப் பிரதியிலிருந்து ஒரு பக்கம் மேலே படம் பிடித்து அச்சிடப்பட்டிருக்கிறது.

எப்படித் தெரிந்தது?

- சீதா -



"அப்பா, எனக்கு ஒரு ஓரணா கொடு. அப்பா!" என்று கெஞ்சினான் சீனு அவன் அப்பாவிடம்.

"எதுக்கடா, காசு? என்ன பண்ணப் போகிறாய்? என்ன வாங்கப் போகிறாய்?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

"என்னமாவது வாங்கிக் கொள்கிறேன். ஒரே ஒரு ஓரணா இருந்தால் கொடு, அப்பா!" என்றான் மறுபடியும் சீனு.

"என்னமாகிலும் வாங்கிக் கொள்ள அப்படி யொன்றும் காசு இங்கே கொட்டிக் கிடக்கவில்லை. போ, போ, பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு. போ!" என்றார் அவனுடைய அப்பா.

முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு, மிகுந்த ஏமாற்றத்துடன் பள்ளிக் கூடத்துக்குப் போனான் சீனு.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் மீடாஸ் என்ற கிரேக்கனைப் பற்றிய கதை வந்திருந்த பாடத்தை நடத்தினார். அதில் மீடாஸ் என்பவன் எப்படியோ, தான் தொட்டதெல்லாம் பொன்மயமாக மாறச் செய்யும் சக்தி பெற்றிருந்தான். ஆம். அவன் ஒரு கல்லைத் தொட்டால், அது தங்கக் கட்டியாக மாறி விடுமாம். மரத்தைத் தொட்டால் பொன் மரமாக மாறிவிடுமாம்.

இதை உபாத்தியாயர் சொன்னதும், நம்ம சீனுவின் கற்பனை அதி தீவிரமாக வேலை செய்தது. உபாத்தியாயர் மேலே நடத்திய பாடம் ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அம் மீடாஸ் பெற்றது போன்ற சக்தி தானும் பெற்றால் நன்றாக இருக்கும். வேண்டுமானால், மீடாஸ் பெற்றது போல், அவ்வளவு பெரிய சக்தி வேண்டுமானால் பெற வேண்டாம். அதாவது தொட்டது பொன்னாக வேண்டாம், ரூபாய்க் காசாகவும், கால் ரூபாய்க் காசாகவும், இரண்டணா, ஓரணாக் காசுகளாகவும் மாறினாலே போதுமே என்று நினைத்து ஏங்கினான் சீனு!

இந்த நினைவும் ஏக்கமும் வந்ததும் உபாத்தியாயர் மேற் கொண்டு நடத்திய பாடம் அவன் காதில் விழவில்லை. புஸ்தகத்தில் கண்கள் பதியவில்லை. அவன் பாட்டுக்குக் கற்பனா லோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டான்.

★

கற்பனா லோகத்துக்குச் சென்றதும், "வா அப்பா, சீனு சௌக்கியமா?" என்று கற்பனா லோகத்து அரசி கேட்டாள்.

"சௌக்கியந்தான். ஆனால் எனக்கு ஒரே ஒரு வரம் தருவீர்களா?" என்று கேட்டான் சீனு மண்டியிட்டு.

"என்ன வரம் வேண்டுமானாலும் கேள்? தருகிறேன்" என்றாள் அந்த அரசி.

"நான் ஒரு சிறு கல்லைத் தொட்டாலும் சரி, மண்ணைத் தொட்டாலும் சரி, எதைத் தொட்டாலும் சரி, அது ஒரு ரூபாயாகவோ இரண்டணாவாகவோ, நாலணா வாகவோ மாறி விடவேண்டும்" என்றான்.

"இவ்வளவுதானா? உன் இஷ்டப்படியே மாறும் போ!" என்றான்.

இதைக் கேட்டதும் சீனுவுக்கு உண்டான மகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவல்ல! குதித்துக் கும்மாளி போட்டுக் கொண்டு போனான்.

முதல் முதலில் ஸ்கூல் வாசலில் குவியலாக மிட்டாய்களைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் கடைக்கார ரிடத்தில் போனான்.

"இந்தாப்பா ஓரணாவுக்குப் பப்பர்மிண்ட் கொடு!" என்றான் சீனு.

"காசு எடுத்துக் கொடுத்து விட்டுப் பேசு, தம்பி; சும்மா அதிகாரம் பண்ணாதே!" என்றான் கேலியாகச் சீனுவைப் பார்த்து. ஆமாம், சீனுவிடம் காசு இருக்காது என்ற நம்பிக்கையில்தான் அவ்வாறு கூறினான்.

ஆனால் சீனு, "என்னப்பா, ரொம்பப் பிரமாதப் படுத்துகிறாய்? உனக்கு எவ்வளவு காசு வேணும். இதோ பார்!" என்று சொல்லிக் கொண்டு கீழே கிடந்த ஓட்டுச் சல்லியை எடுத்தான். உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டான். பிறகு கண்களை மூடிக் கொண்டு மந்திர வாதியைப்போல் ஒரு கணம் ஏதோ முணு முணுத்தான். பிறகு கண்களைத் திறந்து 'சூ! மந்திரக்காளி' என்று சொல்லிக் கையைத் திறந்தான். அவன் கையில் ஒரு ரூபாய் நாணயம் இருந்தது. பப்பர்மிண்ட் கடைக்காரன் அப்படியே பிரமித்துப் போனான்.

சீனு விடவில்லை. "இந்தாப்பா, ஒரு ரூபாய்! இதை எடுத்துக்கொண்டு ஓரணா மிட்டாய் கொடுத்து விட்டு, மிச்சமுள்ள சில்லறையை நீயே வைத்துக்கொள்" என்று ரொம்பப் பெருமையுடனும் பெருந்தன்மையுடனும் சொன்னான்.

கடைக்காரன் வாங்கவில்லை. இதில் என்ன சூதிருக்குமோ, என்ன ஏமாற்று வித்தை இருக்குமோ? மந்திர சக்திக்கெல்லாம் மூன்றே முக்கால் நாழிகைதான் சக்தி உண்டு என்று அந்தக் கடைக்காரன் கேள்விப் பட்டிருந்தான். அதுபோல், இந்த ரூபாயும் மூன்றேமுக்கால் நாழிகைக்குப் பிறகு பழைய ஓட்டாஞ்சல்லியாக மாறிவிட்டால் என்ன பண்ணுவது? ஓரணா பப்பர்மிண்ட் நஷ்டந்தானே?

இப்படியெல்லாம் நினைத்துக் கடைக்காரன் சீனுவிடமிருந்து ரூபாய் வாங்க மறுத்து விட்டான். மிட்டாயும் கொடுக்கவில்லை.

சீனுவுக்கு ஒரே ஏமாற்றமாகப் போய்விட்டது. ஏமாற்றத்துடன் கோபமும் சேர்ந்து கொண்டது. 'பணம் கொடுத்தால் கூட இவன் மிட்டாய் தரமாட்டேன் என்கிறானே! இதற்குக் காரணம் அவன் எதிரிலேயே ஓட்டாஞ் சல்லியைப் பணமாகச் செய்து காட்டியதல்லவா? ஆகவே, இனி யாரிடமும் இந்தச் சக்தியைக் காட்டிக் கொள்ளாமல் ரகசியமாகவே வைத்திருக்க வேண்டும்' என்று தீர்மானித்தான்.

அடுத்தாற்போல் ஒரு பெரிய ஷாப்புக் கடைக்குப் போனான் சீனு.

"என்னாங்க, கடைக்காரரே! பப்பர்மிண்ட பவுண்டு என்ன விலை?" என்று கேட்டான்.

"இரண்டு ரூபாய்" என்றார் கடைக்காரர்.

"அப்படியானால் எனக்குக் கால் பவுண்டு ஆரஞ்சு பப்பர்மிண்ட் கொடுங்க" என்று சொல்லி ஒரு ரூபாயை நீட்டினான்.

அவர் ரூபாயை எடுத்துக் கொண்டு மீதி அரை ரூபாயைக் கொடுத்தார். பிறகு கடைக்காரப் பையன் கால் பவுண்டு எடை போட்ட பப்பர் மெண்ட் பொட்டலத்தைக் கொடுத்தான். சீனு அதை வாங்கிக் கொண்டு கடையை விட்டுத் தெருவுக்கு வந்தான்.

சீனு மிக்க ஆவலுடன் பப்பர்மிண்ட்டை வாயில் போட்டுக் கொள்ளலாம் என்று பொட்டலத்தைப் பிரித்தான். என்ன கஷ்ட காலம் இது! அந்தப் பொட்டலம் முழுதும் காலணாக் காசுகளாகவும் அரையணா காசுகளாகவும், இரண்டணா நாணயங்களாகவும் ஓரணா நாணயங்களாகவும் இருந்தன. மாதிரிக்குக் கூட ஒரு பப்பர்மிண்ட் இருக்கவில்லை. அவனுக்கு எரிச்சலாக வந்தது. அந்தக் காசுகளையெல்லாம் எங்கேயாகிலும் விட்டு எறியலாமா என்று கூடப் பார்த்தான்.

★

அந்தச் சமயம் "சீனு!" என்று உபாத்தியாயர் கடுமையான குரலில் கூப்பிட்டார்.

சீனு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தான். தன் கையில் காசுமில்லை பொட்டலமுமில்லை என்பதை யுணர்ந்தான். தான் கடைத் தெருவில் இல்லை என்பதையும் உணர்ந்தான்.

"என்ன சீனு! வகுப்பில் தூக்கமா? ஏன் வீட்டில் ராத்திரி தூக்கம் வரவில்லையோ— எங்கே, மீடாஸ் கதையிலிருந்து நீ தெரிந்து கொள்ளும் நீதி என்ன சொல்லு. சொல்லா விட்டால் நாள் முழுதும் நீ பெஞ்சிமேல் நிற்க வேண்டியதுதான்" என்றார் கண்டிப்பான குரலில்.

சீனு திரு திரு என்று விழித்தான். பாடம் முழுதும் ஒழுங்காகக் கேட்டிருந்தாலே, உபாத்தியார் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டம். அப்படியிருக்க, பாடம் நடந்த பொழுது நன்றாகத் தூங்கி விட்டு எழுந்திருந்தால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

"மீடாஸ் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் நீதியாவது......நீதியாவது...... நீதியாவது......அதிக ஆசை அதிக கஷ்டம் என்பதுதான்" என்று ஒருமாதிரி தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தான்.

"ரொம்ப சரி, உட்கார்!" என்றார் உபாத்தியாயர்.

முகத்தில் வெற்றிப் புன்னகை தவழ, சீனு உட்கார்ந்தான். மற்ற பையன்கள் இது சீனுவுக்கு எப்படித் தெரிந்தது என்று தெரியாமல் திகைத்தனர்.

வெற்றியில் தோல்வி

ஆர். எஸ். மணி

கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கத்தைப் போல் அந்த அறையின் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான் சிவராமன். அவனுடைய முகத்தில் வேதனைக் குறி தோன்றி மறைந்த வண்ணம் இருந்தது. அவனுடைய நடையும் முக பாவனையும் அவன் ஏதோ ஒரு முக்கியமான பிரச்னையில் ஆழ்ந்து கிடக்கிறான் என்று எடுத்துக் காட்டின. ஆம்! உண்மையில் ஒரு முக்கியமான பிரச்னைதான் அவன் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. நன்றாய்ப் படித்து விட்டு நிறையச் சம்பாதிக்க வேண்டும். பிறகு தான் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள வேண்டும் என்கிற இரண்டு லட்சியங்களை அவன் தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். ஆனால் அந்த லட்சியத்திற்கு இப்போது அபாயம் ஏற்பட்டிருக்கவே தான் அவன் மனம் படாத பாடு பட்டு மூளை குழம்ப ஆரம்பித்து விட்டது.


அவனுடைய தந்தை ராமசாமி ஐயர் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து 'ரிடையர்' ஆகி நிறைய 'பென்ஷன்' வாங்கிக் கொண்டிருந்தார். அவர் தஞ்சாவூர்க்காரர். பசையுள்ள பேர்வழி. ஆகவே அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்து வந்தது. ஆஸ்திக்கு ஒரு பிள்ளை, ஆசைக்கு ஒரு பெண் என்ற வழக்கிற்கு ஏற்ப அவருக்குச் சிவராமன் ஒரே மகன்; அவனுக்கு மூன்று வயது இளையவளான கமலா ஒரே பெண்.

சிவராமன் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். ஆனால் பிள்ளையின் அந்தஸ்தை உத்தேசித்துப் பலர் 'நான் நீ' என்று பெண் கொடுக்க முன் வந்தார்கள். ராமசாமி ஐயர் ஒரு பணக்காரப் புள்ளியைத் தேர்ந்தெடுத்துத் தம் மகனுக்கு ஏற்பாடு செய்து, நிறையச் செல்வம் சேர்க்க வேண்டுமென்று ஆசை கொண்டார். ஆனால் சிவராமனின் போக்கு அவருக்கு ஏமாற்றத்தை விளைவித்தது.

முதலில் படிப்பு முடியட்டும் என்று தட்டிக் கழித்தான் அவன். பிறகு தங்கையின் கல்யாணம் முடியட்டும் என்றான். பிள்ளையின் கலியாணத்தை உத்தேசித்து, அவசர அவசரமாக பெங்களூரில் மிலிடெரி அகௌண்ட்ஸ் ஆபீஸில் வேலையாக இருந்த ஒரு பிள்ளைக்குக் கமலாவைக் கல்யாணம் செய்து புக்ககம் அனுப்பி வைத்தார். ஆனால் அதற்குப் பிறகு சிவராமன் கலியாணத்தைத் தட்டிக் கழிக்க முயன்ற போதுதான் அவருக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது. மேலே படித்து விட்டு நல்ல உத்தியோகம் செய்ய ஆரம்பித்த பிறகுதான் தன் கலியாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று எத்தனையோ நயமாகச் சொல்லிப் பார்த்தான் சிவராமன். ஆனால் ராமசாமி ஐயரின் பிடிவாதம் பலத்தது. மகனின் கல்யாணத்தை முடித்து விட்டுத்தான் மறு வேலை என்று ஒற்றைக் காலில் நின்றார் ராமசாமி ஐயர்.

இது விஷயமாகத்தான் அன்று தந்தைக்கும் மகனுக்கும் பெருத்த வாக்குவாதம் ஏற்பட்டு விட்டது. கடைசியாக ராமசாமி ஐயர், "டேய் சிவராமா! கடைசியாகச் சொல்லுகிறேன். என் சொற்படி நீ கேட்டுத் தான் நடக்கணும். உன்னைப் பார்க்கப் பெண்ணை அழைத்துக் கொண்டு இரண்டொரு நாளிலே என் சிநேகிதர் ஒருவர் வரப் போகிறார். ஜாதகம், ராசியெல்லாம் சரியாக இருக்கிறது. அந்தப் பெண்ணை நீ மணந்து கொண்டுதான் ஆகவேண்டும். ஒரு நாள் அவகாசம் தருகிறேன். அதற்குள் நீ 'சரி' என்று சொல்லா விட்டால் நீ என் மகன் இல்லை, ஆமாம்!" என்று கடிந்து கொண்டார்.

மறுநாள் பொழுது விடிந்தால் இது விஷயமாக வீடு மறுபடியும் அமர்க்களப் பட்டுப் போகும், என்ன செய்வது என்ற கவலைதான் அவனை வாட்டி வதைத்தது. தந்தை சொற்படி கேட்பதானால் தன் லட்சியம் என்ன ஆவது என்ற எண்ணம் அவன் பிடிவாதத்தை அதிகரித்தது. தந்தை ஒரு பிடிவாதக்காரர். வீட்டில் இருந்தால் எப்படியும் கலியாணத்திற்குத் தன்னைச் சம்மதிக்கும்படி செய்து விடுவார். இதற்கு என்ன செய்வது என்று பலவாறு யோசித்தான். கடைசியாக ஒரு யோசனை 'பளிச்'சென்று அவன் புத்திக்கு எட்டியது. அன்று இரவே சொல்லாமல்



அம்மா:—ஏண்டா போக்கிரி, தாத்தாவின் பாராயண புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு என்ன பண்ணுகிறாய்?

பையன்:—தாத்தா என்னுடைய ரயில் வண்டியை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாரே, அதைக் கேளு, முன்னாலே!

கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியே போய் விட்டால் தன்னைப் பிரிந்த சோகம் தாளாமல் தந்தை தவிப்பார். பிறகு சில நாட்கள் கழித்துத் திரும்பி வந்தால் தன் எண்ணப்படி நடக்க விடுவார் என்கிற எண்ணம் தோன்றியது. அதுவே சரியானதென்று தீர்மானித்துக் கொண்டு பெட்டி, படுக்கை முதலியவைகளுடன் வீட்டைவிட்டு வெளியே வந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போனான். நீலகிரிக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு நீலகிரி எக்ஸ்பிரஸில் ஏறி உட்கார்ந்த பிறகு தான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது.

*

எதிர்பாராத விதத்தில் தன் எதிரில் வந்து நிற்கும் சிவராமனைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான் ரமணி. அவன் சிவராமனின் கூடப் படித்த பள்ளி 'மாணவன். சிவராமனின் குடும்பத்திற்கும் மிகவும் வேண்டியவன். தற்போது ஒரு பாங்கில் வேலை பார்த்து வந்தான்.

முதலில் ரமணிக்கு விஷயம் விளங்கா விட்டாலும்; சிறிது நேரத்திற் கெல்லாம் உண்மை தெரிந்து விட்டது.

கலியாணத்திற்கு பயந்து கொண்டு வீட்டை விட்டு ஓடி வந்த சிவராமனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து விட்டு, "நானும் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இப்போது பார்! நாலைந்து குழந்தைகளுடன் அவஸ்தைப் படுகிறேன். பெண்ணையும் கொடுத்து நிறையப் பணமும் கொடுக்கும் போது ஏன் இப்படி வேண்டாமென்கிறாய்? உனக்கு இருக்கும் ஆஸ்திக்கு நீ உத்தியோகம் செய்து தான் பிழைக்க வேண்டுமா என்ன? இன்றைக்கே இங்கு வந்திருக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்திக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி விடுகிறேன்" என்றான் ரமணி. 'காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லை' என்பது போல இங்கு வந்தும் ரமணியின் நிர்ப்பந்தம் தாங்காமல் அன்று மாலையே ஹோட்டலில் ஒரு அறையை எடுத்துக் கொண்டு அங்கு போய்ச் சேர்ந்தான் சிவராமன்.

ஹோட்டலுக்கு வந்த பிறகுதான் அவனுக்குச் சற்று மன நிம்மதி ஏற்பட்டது. கல்யாணப் பேச்சு, வற்புறுத்தல், பிடிவாதம் பிடித்தல் முதலிய தொந்தரவுகளிலிருந்து விடுபட்டு, ஒன்றிரண்டு நாட்கள் ஹாய்யாக வாழ்க்கையை நடத்தினான் சிவராமன்.

மூன்றாம் நாள் காலையில்தான் அவன் தன் உறுதியை உலுக்கும்படியான காட்சியைக் கண்டான். தன் அறைக்கு எதிர்ப்புறத்து அறையில் ஒரு வயது முதிர்ந்தவரும், அவருடன் ஒரு இளம் பெண்ணும் வந்திருப்பது அவனுக்குத் திகைப்பை உண்டாக்கியது. அந்தப் பெண்ணைப் பார்த்த ஒரு கணம் மின்சார வேகம் பாய்ந்தவன் போல் ஆகி விட்டான். அவள் அழகு அப்படியே அவன் நெஞ்சை அள்ளியது. அவன் காலேஜில் படித்த போது எத்தனையோ பெண்களுடன் பழகி யிருக்கிறான், பேசி யிருக்கிறான். ஆனால் எதிர்ப் பக்கத்து அறையில் வந்திருக்கும் தங்கப் பதுமை போன்ற பெண்ணை அவன் இதுவரை எங்கும் கண்டதில்லை.

அதற்குப் பிறகு சிவராமனுக்குத் தன் அறையில் இருப்புக் கொள்ளவில்லை. குட்டி போட்ட பூனையைப் போலச் சதா அறையில் அலைந்து கொண்டும், ஜன்னல் வழியாக எதிர் அறையை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டும் இருந்தான். எதிர் அறை மோகினியும் அவனை அவ்வப்போது கடைக் கண்ணால் கவனித்து அவன் உள்ளத்து உணர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டிருந்தாள். அன்றெல்லாம் அவன் மனம் ஏதேதோ எண்ணிப் புழுங்கியது. அந்தப் பெண் யார்? அவருடன் வந்திருப்பது யார்? ஏன் இங்கு வந்திருக்கிறாள்? என்ற கேள்விகளுக்கு பதில் அறிய முடியாமல் திகைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்தச் சந்தேகங்களும் வெகு விரைவில் நீங்கிவிட்டன. எதிர் அறை மோகினியின் கூட வந்திருந்த அந்த வயது முதிர்ந்தவர் சிவராமனுடன் பேச வந்து விட்டார். அவர் தஞ்சாவூர்க்காரர் என்றும், கூட வந்திருக்கும் அவருடைய பெண் ஜானகி எஸ். எஸ். எல். ஸி. வரை படித்து இருக்கிறாள் என்றும், கோடைக்கு அங்கு வந்திருப்பதாயும் தெரிவித்தார். இரண்டு மூன்று நாட்களுக்குள் எதிர் அறைக்குப் போகவர ஆரம்

அறிவிப்பு

ஸ்ரீ சி. ஏ. பசுபதி என்ற நபர் 1-9-52 முதல் எங்கள் காரியாலயத்தில் வேலையில் இல்லை. ஆகவே அவருக்கு ஸாம்ஸன் & கம்பெனி லிமிடெட் பெயரிலோ அல்லது அதன் சார்பிலோ எந்தவிதமான அலுவலிலும் ஈடுபட அதிகாரம் கிடையாது.

ஆர். அனந்தநாராயணன்

டைரக்டர், ஸாம்ஸன் & கம்பெனி, லிமிடெட்

151, பிராட்வே, மதராஸ்-1



ஒருவர் :—ஏன் ஸார், இந்த வித்வான் ரொம்ப வருஷமாய்ப் பாடுகிறார் இல்லையா?

மற்றவர் :—இல்லையே! இப்பொழுது இரண்டு மணி நேரமாய்த்தான் பாடுகிறார்!

பித்து விட்டான். அவன் எப்படியாவது அந்த ஜானகியுடன் ஒரு வார்த்தை பேசி விடவேண்டுமென்று படாத பாடு பட்டான். ஆனால் அந்தப் பொல்லாத கிழவர் அதற்கு இடம் கொடுக்காமல் இருந்து வந்தார்.

ஒருநாள் இரவு ஜானகியின் நினைவு தோன்றி அவனை நிம்மதி இழக்கச் செய்து விட்டது. மறுநாள் எப்படியாவது மனம் விட்டுப் பேசித்தன் விருப்பத்தைத் தெரிவித்து விடுவது, அந்தக் கிழவர் அதற்குச் சம்மதித்தால் தன் தந்தையிடம் விஷயத்தைச் சொல்லிக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்வது என்று நிர்மாணித்தான். ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. மறுநாள் சரியாகப் பொழுது விடிவதற்கு முன்பே சிவராமனிடம் விடைபெற்றுக் கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார் அந்தக் கிழவர்.

சிவராமன் அதிகம் தாமதிக்கவில்லை. அந்தக் கிழவரின் பூர்வோத்தரங்களையெல்லாம் விசாரித்து வைத்திருந்தபடியால், தன் கலியாண விஷயமாய் ஏற்பாடு செய்ய அன்று இரவே சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்.

'அப்பா' என்று அழைத்துக் கொண்டே அசடு வழியத் தன் எதிரில் நிற்கும் சிவராமனைக் கண்டபோது முதலில் ராமசாமி ஐயர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்த போதிலும், அதையெல்லாம் அடக்கிக் கொண்டு கோபத்தை வரவழைத்துக் கொண்டார்.

“நல்ல பிள்ளையடா நீ! கலியாணம் வேண்டாம் என்று இப்படித்தானா வீட்டை விட்டு வெளியே ஓடுகிறது? கடைசியில் நீ சொன்னதுதான் சரி என்று எனக்குத் தோன்றியது. உன் மேல் படிப்புக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். இனிமேல் உன்னைக் கலியாண விஷயமாய்த் தொந்தரவு செய்ய மாட்டேன்” என்றபோது சிவராமனுக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது.

சிவராமன் தன் தலையைச் சொறிந்து கொண்டே, “அப்பா! எனக்கு மேல் படிப்பு படிக்க உத்தேசமில்லே...ஆனால்...” என்று மென்று விழுங்கிக் கொண்டே விஷயத்தை விளக்கினான். “சேச்சே! இந்தக் காலத்துப் பசங்களுக்கே ஸ்திர புத்தி கிடையாது,” என்று கடிந்து கொண்ட போதிலும் சிவராமன் குறிப்பிட்ட வரன் விஷயமாக முனையத்தான் செய்தார் ராமசாமி ஐயர்.

சுமார் ஒரு மாத காலத்திற்குள் தஞ்சாவூரிலே சிரஞ்சீவி சிவராமனுக்கும் சௌபாக்கியவதி ஜானகிக்கும் ஏக தடபுடலாகத் திருமணம் நடந்தேறியது. ஜானகியை மணந்து கொண்ட சந்தோஷத்தில் அகமகிழ்ந்திருந்த அவனைத் திருமண தினத்திலேயே ஏமாற்றத்தில் ஆழ்த்தும்படியான விஷயம் ஒன்று அடுத்த அறையிலிருந்து வெளியாகியது. அடுத்த அறையில் பேசிக் கொண்டிருந்தது அவனுடைய தாயாரும், அவன் சிநேகிதன் ரமணியும்தான்.

“எப்படியோ மாமி! சிவராமனுடைய கலியாணம் நடந்து விட்டது. இனிமேல் கவலை இல்லை” என்றான் ரமணி.

“நம்ம கையிலே என்ன இருக்கு? எல்லாம் பகவான் செயல். நீமட்டும் அவன் நீலகிரிக்கு வந்திருக்கும் விஷயத்தை மாமாவுக்கு எழுதி, உடனே அவனைப் பார்க்கவந்த பெண் வீட்டுக்காரர்களை நீலகிரிக்கு வந்து ஹோட்டலில் தங்கும்படியும் எழுதியிரா விட்டால் இந்தக் கலியாணம் எப்படி நடந்திருக்கப் போகிறது? பெண்ணைப் பார்த்தால் சிவராமன் மனசு கட்டாயம் மாறிவிடும்னு நீ எழுதி இருந்தது சரியாப் போச்சு” என்றாள் அவன் தாயார்.

சிவராமன் தலை பம்பரம்போல் சுழன்றது. ஜானகி தன் தந்தையுடன் ஹோட்டலுக்கு வந்ததும், தன் கலியாண விஷயமாய்த் தெரிவித்தபோது தன் தந்தை கோபம் கொண்டது போல் நடித்ததும் எல்லாம் வெறும் வெளிவேஷம் என்று அப்போதுதான் அவனுக்கும் தெரிய வந்தன.

காதலித்த பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற லட்சியத்தில் வெற்றிபெற்ற போதிலும் உத்தியோகம் பார்த்த பிறகுதான் கலியாணம் என்கிற எண்ணத்தில் தோல்வி அடைந்து விட்டது. அவனுக்கு ஆற்ற மாட்டாதக் குறையாகத்தான் இருந்தது. தன் லட்சியத்தைப் பாழாக்கிய ரமணியின் மீது ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தபோதிலும், தன்னை நலங்கிற்கு அழைக்கத் தங்கப் பதுமை மாதிரி எதிரில் வந்து நின்ற ஜானகியைப் பார்த்தவுடன் இந்த உலகத்தையே மறந்து அவளுடன் நடந்தான் சிவராமன்.

குழந்தைகளின் சால், குலைக் கட்டி வியாதிகளுக்கு

ஜம்மியின் "லிவர்க்யூர்"

○●○

எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களுக்கு குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

ஆலோசனை நேரம்:

காலை 9 முதல் 11 மணி வரை; மாலை 3 முதல் 5 மணி வரை

○●○

இடம்	தேதி	விலாசம்
கோயமுத்தூர்	15-9-52 16-9-52	மெஸர்ஸ். ஈஸ்வர் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ், ராஜா தெரு
பாலக்காடு	17-9-52	மெஸர்ஸ். நாதம் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
மதுரை	19-9-52 20-9-52	டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ், வடக்குச் சித்திரை வீதி
திண்டுக்கல்	21-9-52	மெஸர்ஸ். சி. ஆறுமுகம் பிள்ளை & ஸன்ஸ், மெயின் ரோடு
சிவகங்கை (காலை 9 முதல் 11 மணிவரை மட்டும்)	22-9-52	மெஸர்ஸ். கௌரி & கம்பெனி, ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
தேவகோட்டை (காலை 9 முதல் 11 மணிவரை மட்டும்)	23-9-52	மெஸர்ஸ். மீனாக்ஷி ஸ்டோர்ஸ், ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
காரைக்குடி	24-9-52	மெஸர்ஸ். ஏ. வி. & ஸன்ஸ், டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்
புதுக்கோட்டை	25-9-52	மெஸர்ஸ். வசந்தா லாட்ஜ்

○●○

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

மதராஸ் :: திருச்சிராப்பள்ளி

மறு விருந்து

சங்கர்

பங்கஜத்திடமிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு கடிதம் வந்தது. வேணு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். நிறைய எழுதியிருப்பதிலிருந்து அவள் இப்பொழுது புறப்பட்டு வரமாட்டாள் என்பது அவனுக்குப் புலனாயிற்று.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் சிரேஷ்டர் அவர்களுக்கு, தங்கள் பத்தினி பங்கஜம் எழுதிக் கொள்வது: நீங்கள் இப்பொழுது சர்வ சௌக்கியமாக இருப்பீர்கள் என்றே நம்புகிறேன். உங்களுடைய நண்பர்கள் (நம்முடைய வீட்டு மாஜி விருந்தாளிகள்) காட்டும் மிதமிஞ்சிய உபசரிப்பில் திணறிப் போய் 'யார் வீட்டுக்குச் சாப்பிடப் போவது?' என்று தெரியாமல் கடைசியில் ஹோட்டலில் போய்ச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்! ஆனால் உங்கள் சிநேகிதர்கள அப்படி விட்டு விடுவார்களா என்ன? நீங்கள் அவர்களுக்குச் செய்துள்ள உபசாரம் கொஞ்சமா நஞ்சமா?

அடடே, மறந்து போய்விட்டேனே! நான் ஊருக்கு வருவதற்கு முதல் நாள் யாரோ பட்டணத்திலிருந்து உங்கள் கல்லூரி நண்பர் வரப்போவதாகச் சொன்னீர்களே? நான் இல்லாததால் அவரை மறு நாளே திருப்பி அனுப்பி இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். ஒருவேளை அவர் கல்யாணமானவராக இருந்தால் தம்பதி சமேதராய் வந்து உங்களுக்கும் சமைத்துப் போட்டுக் கொண்டு 'ஜாலியாக' இருக்கலாம்!

இப்பொழுது எனக்குப் பாதி அலுப்புத்தான் தீர்ந்திருக்கிறது. அடுத்த மாதம் நீங்கள் வந்தால் புறப்படலாம் என்று இருக்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் நிலையை அறிய ஆவலுடன் துடிக்கும்,
பங்கஜம்."

மனைவி கேலியாக எழுதியிருப்பதை வேணு ரஸித்தான் என்றாலும் மறு கணம் அவனுக்கு மிகவும் எரிச்சலாக வந்தது. "போய் முழுசாக ஒரு மாதம் — முப்பது நாட்கள் — ஆகி விட்டது! புருஷன் என்ன செய்வான் என்று கொஞ்சங்கூடக் கவலையில்லாமல், அடுத்த மாதம் புறப்படுவதாக இருக்கிறளாம்! இந்த லட்சணத்தில் அழைப்பதற்கு வேறு போக வேண்டுமாம்!" என்று முனகிக் கொண்டான்.

அவளுடைய கடிதம் வருவதற்கு அரைக் கணம் முன் வரை "பங்கஜம் வந்துவிட மாட்டாளா?" என்று அவள் பிரிவை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தவன், அவள் குத்தலாக எழுதியிருப்பதைப் படித்தவுடன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வேறு விதமாகப் பதில் எழுத உட்கார்ந்தான்.

"வேறும் பங்கஜத்திற்கு,

வேணு எழுதிக் கொண்டது. நீ எழுதியிருப்பதைப் பார்த்தால், இங்கிருந்து பிறந்தகம் போனது உன் அம்மாவையும் தங்கையையும் பார்ப்பதற்கல்ல என்றும் என்னைத் திண்டாட வைப்பதற்குத்தான் என்றும் நன்றாகத் தெரிகிறது!

விருந்தினர்களோடு சேர்ந்து சாப்பிடுவதென்பது என் இரத்தத்தில் ஊறிவிட்ட ஒரு குணம். பிறவிக் குணத்திற்கு மட்டை வைத்துக் கட்டப் பார்க்கிறாய்.


சின்னப் பிள்ளையில் கிளாவில் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் ஒருவர் எச்சில் மற்றொருவர் இலையில் கலக்கும்படி விளையாடிச் சாப்பிட்டது, பின்னால் பள்ளிக்கூடத்தில் நண்பர்களோடு ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டது — இப்படியாகப் பழகிப் போய்விட்ட என் மனம் தனியாக உட்கார்ந்து சாப்பிட என்னவோ போல் இருக்கிறது! பிறர் உபசரிக்கிறார்கள் என்பதற்காக அவர்களை உபசரிப்பது என் குணமில்லை.

உனக்கு வீட்டு வேலைகளைச் செய்ய முடியாவிட்டால் ஒரு சமையல்காரியைப் போட்டு விட்டால் போகிறது! அதற்காக நீ பிறந்தகத்தில் போய் இருந்து கொண்டால் உன் ஆயுள் முழுவதும் ஒருவேளை அங்கேயே இருக்கும்படி நேர்ந்தாலும் நேரலாம்!

கிற்க. பட்டணத்து நண்பன் என்கூடத்தான் இன்னும் இருக்கிறான். இந்த லீவு பூராவும் இங்கேயேதான் இருப்பான். சமையலுக்கு நல்ல ஆள் ஒருவனையும் நியமித்திருக்கிறேன். ஆபீஸில் போன வருஷம் எடுக்காத லீவையும் சேர்த்து இரண்டு மாதம் லீவு எடுத்திருக்கிறேன்! எனினும் நண்பனுடன் 'ஜாலியாக' இருப்பதால் உன்னை அழைக்க அங்கே வர எனக்கு நேரமில்லை!

இப்படிக்கு
வேணுகோபால்."

கடிதம் என்ற முறையில்தான் விட்டுக் கொடுக்காமல் எழுதினானே தவிரப் பங்கஜத்தைப் பொறுத்த மட்டில் வேணுவின் மனம் முற்றிலும் வேறாகத்தான் இருந்தது. "பங்கஜத்தை உடனே போய்க் கையோடு அழைத்துக்கொண்டு வந்துவிட்டால் என்ன?" என்ற சபலம் வேறு அவனுக்குத் தட்டியது. மனைவியைப் பிரிந்து இந்த முப்பது நாட்களுக்குள் அவன் அநுபவித்த வேதனை அவனுக்கல்லவா தெரியும்! பங்கஜத்தின் மேல் தன் உயிரையே வைத்திருந்தான் வேணு. அவளும் அப்படித்தான். ஆனால் கல்யாணமான மறு வருஷம் மனைவி என்ற முறையில் வேணு சிலசமயம் அவனைக் கண்டிக்க ஆரம்பித்தாள். வேணுவுக்கு விருந்தினர் என்றால் போதும்; அன்போடு உபசரிக்கும் குணமுடையவன். ஆதலால் வேளை கெட்ட வேளைகளிலும் அவனைத் தேடிப் பழைய நண்பர்கள் வருவார்கள். இரவு பன்னிரண்டு மணியானாலும் வந்தவர்



"இந்தச் சினிமா தியேட்டருக்குத்தான் கடைசியில் லைசென்ஸ் கொடுத்து விட்டார்களே......மேலே ஏன் கட்டவில்லை?"

"லைசென்ஸ்தானே கொடுத்தார்கள்? கட்டுவதற்குப் பணம் கொடுக்கவில்லையே?"

களுக்குச் சாப்பாடு பண்ணி வைப்பதில் வேணுவுக்கு ஒரு அலாதி ஆசை. பங்கஜத்தை நடுத் தூக்கத்தில் எழுப்பி ஏதாவது சிற்றுண்டி தயார் பண்ணும்படி சொல்லுவான். முதல்முதலில் கணவன் சொல்லைத் தட்டாமல் செய்து கொண்டு வந்தவள் நாளடைவில் மிகவும் சலிப்படைந்து போய்விட்டாள்.

பங்கஜம் படும் துன்பத்தை வேணு அறியாதவனல்ல. எல்லா வேலைகளையும் அவள் தலையில் சுமத்திக் கஷ்டப்படுத்திவிட்டுக் கடைசியில் அவளைச் சமாதானம் பண்ணிவிடுவான்.

அன்றொருநாள் நடந்த சம்பவம் வேணுவின் உள்ளத்தில் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டது.

சாயங்காலம். ஆறரை மணி. வேணுவின் தந்தைக்குப் பழக்கப்பட்ட நண்பரொருவர் வேணுவைப் பார்க்க ஆபீஸுக்கு வந்தார். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, "ஸார், அப்பா இருக்கும்போது உங்களைப் பார்த்தது. நீங்கள் எப்படியும் இன்றைக்கு ராத்திரி நம்முடைய வீட்டில் சாப்பிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

ஆனால் பங்கஜம், இரவுதானே என்று தனக்கும் கணவனுக்கும் சமையல் செய்து வைத்திருந்தாள். திடீரென்று விருந்தாளியைக் கண்டதும் அவளுக்குப் பகீரென்றது. ஆனால் வேணுவோ முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்தவன்போல், "பங்கஜம்! சமையல் ஆகிவிட்டதல்லவா? இரண்டு இலை போடு" என்று ஆக்ஞாபித்து விட்டான். அப்போது பங்கஜம் வைத்திருந்த சாதத்தை இருவருக்கும் பரிமாறி விட்டாள்! சாப்பாடு முடிய மணி எட்டாகி விட்டது. உடனே நண்பரைக் கூட்டிக்கொண்டு, "பங்கஜம், இவரை ஸ்டேஷன் வரையில் போய் வழியனுப்பி விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியே போய்விட்டான்.

கணவன் போனதும் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். வெப்பமான கண்ணீர் முத்துக்கள் அவள் கண்களில் துளித்தன. 'இந்த வீட்டில் இன்னொரு ஜீவன் இருக்கிறதென்ற எண்ணமே கிடையாது போலிருக்கிறது' என்று விம்மினாள். 'இன்றைக்கு எப்படியாவது பட்டினியாக இருந்து, அவர் மனத்தைப் படாத பாடு படுத்தி வைத்து விட வேண்டும்' என்று சங்கற்பம் செய்து கொண்டு மாடிக்குப் போய் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துவிட்டாள்.

இரவு ஒன்பது மணிக்கு வந்து கதவைத் தட்டினான் வேணு. கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டுப் போய்க் கதவைத் திறந்தாள் பங்கஜம். கையில் ஹோட்டல் எடுப்புச் சாத 'டிபன் செட்'டுடன் வந்து நின்றான் வேணு. பங்கஜம் அதைக் கவனிக்காதவள் போல் 'விர்'ரென்று மாடிக்குப் போய் மீண்டும் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

"பங்கஜம், என்னை மன்னித்து விடு! இவ்வளவு நேரமும் நீ ரொம்பப் பசியோடு இருந்திருப்பாய். முதலில் சாப்பிடு" என்று அநுதாபத்துடன் குரல் தழுதழுக்கக் கூறினான்.

"எனக்கென்ன சாப்பாடு வேண்டிக் கிடக்கிறது! யாராவது நண்பர்கள் நடுச் சாமத்தில் வந்தால் அவர்களுக்கு இருக்கட்டும் இந்தச் சாப்பாடு. எனக்கு இப்பொழுது பசியில்லை!" என்று செவியடைக்கக் கம்மிய குரலில் கூறினாள் பங்கஜம்.

கடைசியில் சாதத்தைப் பிசைந்து வாயில் ஊட்டவே துணிந்து விட்டான் வேணு. பின்பு ஒருவாறு சம்மதித்துப் பங்கஜம் சாப்பிட எழுந்தாள். அதன் பிறகுதான் வேணுவுக்குத் தூக்கமும் வந்தது!

* * *

"ஸார், காப்பி டிபன் கொண்டு வரட்டுமா?" என்று சமையல்காரன் கேட்டபொழுதுதான் வேணுவுக்குத் தான் எழுதிய கடிதம் நினைவுக்கு வந்தது. அதைக் 'கவரில்' அடைத்து விலாசம் எழுத ஆரம்பித்ததும் வெளியே சென்றிருந்த மணியும் திரும்பி வந்தான்.

"ஏண்டாப்பா, வெளியே போனவனுக்கு இவ்வளவு நேரம்! டிபன் சாப்பிடுகிற நேரத்திலே எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டான் வேணு.

இரண்டு தட்டில் டிபனும் காப்பியும் கொண்டு வந்து வைத்தான் சமையல்காரன்.

"ஏன் வேணு, உன் மனைவியிடமிருந்து கடிதம் வந்ததா? ஏன் ஒரு மாதமாக அங்கே தங்கி விட்டாள்? ஏதோ உங்கள் இருவருக்குமிடையே பெரிய மனத் தாங்கல் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். நீதான் என்னிடம் சொல்லாமல் ஒளிக்கிறாய்" என்று கேட்டுக் கொண்டே காப்பியை உறிஞ்சினான்.

தன் மனதிலிருக்கும் பாரத்தை இதற்கு மேலும் அடக்கி வைத்திருக்க வேணுவுக்கு இஷ்டமில்லை. தன் ஆருயிர் நண்பன் மணியிடம் தன் மனைவி பிறந்தகம் போய் இருந்து கொண்டு வேடிக்கை பார்க்கும் விஷயத்தையும் காரணத்தையும் ஆதியோடந்தமாகக் கூறி விட்டான்.

"வேணு! உன் தாராள மனம்தான் உங்கள் பிரிவிற்குக் காரணமென்றால் நானும் உங்கள் பிரிவிற்கு ஒரு காரணம்தானே, இல்லையா?" என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டான் மணி.

"பங்கஜம் உண்மையில் மிகவும் நல்லவள் தான், மணி. ஏதோ என்னை வேடிக்கை பார்க்கிறாள். நான் படும் வேதனை அவளுக்கும் இல்லாமலா இருக்கும்!" என்றான் வேணு.

மனைவியின் மேல் கொண்டுள்ள அன்பு அவன் வார்த்தைகளிலே தொனித்தது.

* * *

"வேணு! அப்பா கடுதாசி எழுதியிருக்கிறார். நான் இன்றைக்கே ஊருக்குப் போக வேண்டும். இந்த லீவை ரொம்ப சந்தோஷமாக உன்னுடன் கழித்ததிலே பரீட்சை 'ரிஸல்ட்'க் கூட மறந்து விட்டேன்! இனிமேல் உன் வீட்டுச் சாப்பாடு எப்போது கொடுத்து வைத்திருக்கிறதோ!" என்றான் மணி.

பெட்டி படுக்கைகளுடன் பயணத்திற்குத் தயாரானான் மணி.

"பங்கஜம் சமையலை நீ சாப்பிட்டுப் பார்க்கவில்லையே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது; இனிமேல் வராமலா போய் விடுவாய்!" என்றான் வேணு.

"உன் சம்சாரம் வந்ததும் முதலில் என் நமஸ்காரத்தைச் சொல்லு, மறந்துவிடாதே!" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மணி.

மணியை ரயிலேற்றி விட்டு வந்த வேணுவுக்கு இரவு முழுதும் தூக்கம் பிடிக்கவேயில்லை. தன்னந் தனியாக, சுற்று முற்றும் சூன்னியமாக இரவைக் கழித்தது அவன் ஆயுளில் இதுதான் முதல் தடவை! பங்கஜத்தைப் பற்றிய சிந்தனைகள் அவன் குழம்பிய மனத்தில் நினைவு அலைகளை உண்டு பண்ணின.

காலையில் அவன் எதிர்பார்த்தபடி மனைவியிடமிருந்து கடிதம் வந்தது. ஆவலுடன் உடைத்தான்.

"என் ஆருயிர்த் துணைவருக்கு,

நான் திருச்சிக்கு வரவேண்டுமென்றிருந்தேன். என் தங்கை கமலாவுக்கு வரன் விஷயமாக அப்பா, அம்மா நான் எல்லோரும் இன்று பட்டணத்திற்குப் போகிறோம். பையன் இந்த வருஷம் பி. ஏ. க்கு எழுதியிருக்கிறானாம். நல்ல இடம்; பிள்ளையைப் பிடித்து விட்டால் நீங்கள் பட்டணம் வரவேண்டியிருக்கும். என் மேல் உள்ள கோபத்தையெல்லாம் தங்களுடைய விசாலமான அன்புதான் மன்னிக்க வேண்டும்.

இப்படிக்கு உங்கள்,

பங்கஜம்.


பங்கஜத்தின் மன மாறுதல் வேணுவுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது. மறு தபாலிலேயே, தன் நண்பன் போய்விட்ட விவரத்தையும், தான் படும் துன்பத்தையும் கொட்டி பங்கஜத்திற்கு ஒரு அன்பான கடிதம் எழுதினான். அதில் அவளை மறு வாரமே தாமதியாமல் வந்து சேரும்படி குறிப்பிட்டிருந்தான்.

அந்த ஒரு வாரம், கற்ப காலமாக விசுவரூபமெடுத்து அவன் கண்களிலும், மனத்திலும் உறுத்த ஆரம்பித்தது!

அன்று மங்கலமான வெள்ளிக் கிழமை. மனைவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேணுவுக்கு மாமனாரிடமிருந்து ஒரு தந்தி கிடைத்தது. அதில் குறிப்பிட்டிருந்தது இது தான்: "கமலா கல்யாண விஷயமாய் முகூர்த்தம் வைப்பதற்குச் சென்னைக்குச் சென்றிருக்கிறோம். நீங்களும் மயிலாப்பூர், காக்க முத்தன் தெரு, ஐம்பத்தொன்றாம் நம்பர் இல்லத்திற்கு வரவும்."

மனைவியைக் காண வேண்டும் என்ற ஆவல் உந்த மறு வண்டியிலேயே சென்னைக்குப் பயணமானான் வேணு. அவன் மனோ வேகத்திற்கு முன்னால் ரயில் ஆமைவேகத்தில் ஊர்ந்து செல்வது போன்ற பிரமை ஏற்பட்டது. வண்டி எழும்பூர் ஸ்டேஷனில் நின்றதும் அவனை வரவேற்பதற்காக ஒரு ஆச்சரியம் — இல்லை, நண்பன் மணி காத்துக்கொண்டிருந்தான்!

"ஏண்டா மணி, நான் இப்படி திடுதிப்பென்று வருவேனென்று உனக்கு எப்படித்



முத்து:—ரொம்பப் பருமனாக இருக்கிறவர்கள் எல்லாம், ரொம்ப நல்லவர்களாக இருக்காங்க. சண்டை சச்சரவுக்கு வருவதே கிடையாது!

ரத்தினம்: — அவர்களாலே நின்று சண்டை போட முடியாது; ஓடவும் முடியாது. அதனாலேதான்......

தெரியும்?" என்று சொல்லி முடியாத ஆச்சரியத்தோடு கேட்டான் வேணு.

"இதோ பார், வேணு! மன்னியை ரொம்பப் பொல்லாதவள் என்று என்னிடம் சொன்னாயல்லவா? மன்னி உன் மேலே எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாள் என்பது இங்கு வந்த பிறகுதான் எனக்குத் தெரியவந்தது. இல்லாவிட்டால், நீ வந்துதான் முகூர்த்தத்திற்கு நான் பார்க்க வேண்டுமென்று ஒற்றைக் காலில் நிற்பாளா?" என்றான்.

வேணுவுக்கு ஆச்சர்யத்தால் மூச்சே நின்று விடும் போலிருந்தது. மணி தன் நண்பன் மட்டுமல்ல, இனி மட்டகனும்கூட என்பதை எண்ணியபோது வேணுவின் உள்ளம் பூரிப்படைந்தது. அதே சமயத்தில் பங்கஜத்தைப் பற்றி ஒன்று விடாமல் அவனிடம் கூறிவிட்டதை நினைத்த பொழுது வேணுவுக்கு மிகவும் சங்கோசமாக இருந்தது.

பிள்ளை வீட்டார் வேணுவைத் தடபுடலாக உபசரித்தனர். பங்கஜம் வெளியே தலையைக்கூடக் காட்டவில்லை. கூடத்தில் மாமனார் பிள்ளை வீட்டார் புடை சூழ வேணு உட்கார்ந்திருந்தான். அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஜன்னல் ஓரமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தாள் பங்கஜம்.

"அப்பா, இவர்தான் மிஸ்டர் வேணு. திருச்சியில் இந்த லீவிலே இவர் கூடத்தான் இருந்தேன்" என்று தன் நண்பனை அறிமுகம் செய்தான் மணி.

பங்கஜத்திற்கு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு கணம் புல்லரித்தது!

* * *

மூன்று மாதத்துக்குப் பிறகு ஒரு நாள். வேணு ஆபீஸிலிருந்து வந்தவன் 'டிரஸ்ஸை' மாற்றிவிட்டு மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான். பங்கஜம் காப்பியை ஆற்றித் தயாராக வைத்துக் கொண்டு நின்றாள்.

"பங்கஜம்......" என்று தயங்கித் தடுமாறினான் வேணு, காப்பியை வாங்கிக்கொண்டே.

"என்னவாம்?"

"ஒன்றுமில்லை. சொல்வதற்குப் பயமாக இருக்கிறது—நீ எங்கே மறுபடியும் ஊருக்குப் போய்விடுவாயோ என்று!"

"பூர்வ பீடிகை இல்லாமல் எதையும் சொல்வது கிடையாதோ?" என்றாள்.

"கமலாவையும் மணியையும் நம் வீட்டிற்கு விருந்திற்கு அழைக்க வேண்டாமா? வருகிற திங்கட்கிழமை வரச்சொல்லி எழுதி யிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் குறும்புப் பார்வையுடன் அவள் தலையில் இலேசாக ஒரு குட்டு வைத்தான் வேணு.

"போதுமே உங்கள் விளையாட்டு. எனக்கு நிறைய வேலை கிடக்கிறது. இப்பொழுதே பிடித்து பட்சணமெல்லாம் செய்ய வேண்டாமா?" என்று சொல்லிவிட்டுப் புன்முறுவல் தவழ உள்ளே போனாள் பங்கஜம்.

பாரதி காட்டிய பாதை

கவியுள்ளத்தின் தெய்வத்தன்மை

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்!

நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்!!

உலகம் உருக்குலையும்போது கடவுளின் இருதயமும் வேதனையால் விம்முகின்றது. பரமனின் கண்களில் கண்ணீர் மல்குவதைக் கண்டு சகிக்க முடியாமல்தான் அவருடைய அரும் தூதர்களான உலகக் கவிஞர்கள், கடவுளின் குறிக்கோளை அடிக்கடி அவனியோருக்கு உணர்த்தி வருகின்றனர். உலகம் உய்ய வேண்டிக் கடவுள் காணும் கனவே நம் புலவர்களின் இருதயத் தடாகத்தில் தெய்வீக மணம் கமழும் கவிதைப் பூக்களாக மலர்கின்றன. ஆதிதேவனின் இருதயத் துடிப்புகள், இக் கவிஞர்களின் இருதய வீணையில் இசைகளாகப் பெருக்கெடுக்கின்றன.

"நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை"

பாரதியாரின் இந்த அடியின் அடித்தளத்திலே கடவுளின் குரல் கேட்கிறது.

ஆப்பிரிக்காவில் மலான்கள் மாறிவிட்டால், அமெரிக்காவில் நீக்ரோக்கள் வாழ்வு பெற்றுவிட்டால், அவனி முழுவதும் மக்கள் எல்லாம் ஒரு குலமாகச் சுதந்திரத்தோடு வாழும் எண்ணம் கொண்டு விட்டால், உலகின் இலட்சியம் பூரண வெற்றி கண்டு விட்டது என்று சாதாரண மனிதர்களாகிய நாம் நவின்று விடலாம். ஆனால், மாபெரும் தெய்வப் புலவர்கள் அக்கூற்றை ஒப்புக் கொள்ள வேண்டுமே!

"காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று கவி பாடும் மகாகவி பாரதியார், நாம் எளிதாகக் கூறுவதை ஏற்றுக் கொள்வாரா! மனித வர்க்கமெல்லாம் ஒரு குலம் என்பதோடு பாரதியாரால் திருப்தியடைந்துவிட முடியுமா! அவருடைய கவியுள்ளம் அற்ப ஜீவன்களாகக் கருதப்படும் குருவிகளையும், அழகில்லா உயிர்களாக எண்ணப்படும் காக்கைகளையும் ஜடப் பொருள்களான கடலையும் மலையையும்கூட அல்லவா எங்கள் கூட்டம் என்று சொல்கிறது!

ஆனால் இன்றைய உலக மக்கள் பாரதியின் இலட்சியப் பாதையை அடைய இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமோ! மனித குலத்தின் மத்தியிலேயே இன்னும் பூரண நம்பிக்கை நிலவவில்லையே! மக்கள் குலம் முழுவதும் ஒன்றாகி இயற்கைப் படைப்புகள் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் நாள் வர, இன்னும் எவ்வளவு காலம் ஆகுமோ! மலைகளும், மலர்களும், நதிகளும், என் இயற்கைப் பொருள்கள் அனைத்துமே நமது சொந்தம் என்று ஆகிவிட்டால், பின் நமக்கு எதுவுமே அன்னியமானதாக இருக்க வழியில்லை. இதுதான் ஆத்மாவின் உயர்நிலை. பாரதிப் பாதை நம்மைக் கூட்டிச் செல்வதும் அங்குதானே!

ஈரோடு **இரவீந்திரதாஸ்**



உறுதியான
எதிர்ப்பு சக்தி
நீங்களும் பெறுக
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதன் மூலம் தேக வலிமையைப்பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் எந்த நோயும் வராமல் தடுக்கும் சக்தியை பெறுவீர்கள். நிரூபிக்கப்பட்ட குணம் பொருந்திய இந்த டானிக்கில் போஷாக்கு அளிக்கும் அம்சங்கள் ஏராளமாக இருப்பதால், உங்களுக்கு உபரியாக தேவையாயிருக்கும் உறுதியான எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும்.
குழந்தைகளுக்கு உடல் வலிவும் ஆரோக்யமும் அதிகரிக்க உதவுவதிலும் பிரசித்திபெற்றுள்ள இந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்டு சாப்பிட ருசியானதுங்கூட. இன்றே வாங்குங்கள்.
WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்
NAS. 742

பெண் உள்ளம்

எஸ். பி. ஹர்ஷன்

புன் சிரிப்புத் தவழும் முகமும், குறுகுறுப்பான கண்களும், மலர்ந்த முகமும் படைத்த அந்தக் குழந்தைகள் என் உள்ளத்தை இரும்பை இழுக்கும் காந்தமெனக் கவர்ந்தன. கள்ளமோ, கபடமோ இல்லாத அக் குழந்தைகளின் இடையே இருப்பதால் ஏற்படும் இன்பத்திற்கு எதைத்தான் ஈடாகக் கூற முடியும்? அந்த இன்பத்தின் எக்களத்தில் வந்த காரியத்தையும் மறந்து அவற்றோடு விளையாடிக் கொண்டிருந்தேன்.

"சரசு! தலைவியின் அநுமதியில்லாமல் மந்திரத்தின் குழந்தைகளோடு விளையாடுவது சரியல்ல. வா, முதலில் அவளைப் பார்த்து விட்டு வருவோம்" என்று அன்புடன் கடிந்து கொண்டார் என் கணவர்.

நான் அவரைப் பின் தொடர்ந்தேன். இருவருமாகத் தலைவியின் அறைக்குள் நுழைந்தோம். "வாருங்கள், வாருங்கள்!" என்று அழைத்தாள் தலைவி.

குரல் பழக்கமான குரல். திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்த எனக்குப் பெரிய ஆச்சரியம் காத்துக் கிடந்தது.

"யார்? மஞ்சுவா?"

"ஆமாம், சரசு! ஆச்சரியமாயிருக்கிறதா?" என்று கேட்டுச் சிரித்தாள் அவள்.

நான் பதில் பேச முடியாத நிலையில் இருந்தேன். மஞ்சு என்னையும் என் கணவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"என்ன 'திருதிரு' வென்று விழிக்கிறாய், மஞ்சு? இவர்தான் என் கணவர்?"

"உன் அத்தான்...? அவரை நீ மணம் செய்துகொள்ள வில்லையா?"

"இல்லை, மஞ்சு! அவனை என்னால் கொஞ்சம்கூட மன்னிக்க முடியவில்லை. அவன் மனிதத் தன்மையில்லாத அரக்கன் என்பது தான் என் முடிவு" என்றேன் நான்.

மஞ்சுவின் முகம் சுருங்கிற்று. நான் அவள் கையைச் சுவாதீனத்தோடு பிடித்துக் கொண்டு "வாயேன்! உன்னோடு தனியாகப் பேச வேண்டியது நிரம்ப இருக்கிறது. தோட்டத்துப் பக்கம் போவோம்" என்றேன்.

அவளும் கிளம்பினாள். பழைய நாளைய சிநேகிதியைப் பார்த்த களிப்பிலே, குழந்தைகளையும், கணவரையும் அறவே மறந்து விட்டேன் நான். தோட்டத்தில் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த பெஞ்சை நோக்கி நாங்கள் நடந்தோம். என் மனம் கடந்த நாட்களை நினைவுக்குக் கொண்டு வந்தது.

* * *

இதே மஞ்சுவிடம் அவள் கழுத்தை நெருக்கிக் கொன்றுவிடலாமா என்று கோபம் அடையும் அளவுக்கு எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்த காலமும் உண்டு.

நகமும், சதையும் என்பார்களே, அதைவிட ஒரு படி உயர்ந்த நிலையில் எங்கள் நட்பு இருந்தது. அவளும் நானும் ஒரே கல்லூரியில் படித்து வந்தோம். ஒரே தெருவில் எங்கள் பெற்றோர்கள் வசித்து வந்தனர். ஆகவே எங்களுடைய நட்பின் வளர்ச்சியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

எனக்கு அத்தான் ஒருவன் இருந்தான். இயல்பாகவே ஹாஸ்யமாகப் பேசுவான் அவன். சுருட்டையான மயிரோடு கூடிய கிராப்புத் தலையும், அடிக்கடி புன்சிரிப்பு சிரிக்கும் முகமும், அப்படி சிரிக்கும்போது கன்னங்களில் விழும் குழியும் அவன் அழகுக்கு அழகு செய்து வந்தன.

அவன் தன் விடுமுறையை எங்கள் ஊரில் தான் கழிப்பது வழக்கம். அவன் வருகிறான் என்றாலே எனக்கு நிரம்பக் குதூகலம் தான். அவன் வந்துவிட்டால் என் ஆனந்தத்தைக் கேட்பானேன்? அவனுக்கு என்னை மணம் செய்து கொடுப்பதாக என் பெற்றோர்களிடையே பேச்சு இருந்தது. இந்த ஏற்பாட்டில் எனக்குப் பூரண சம்மதம்.

ஆனால் சுமார் மூன்று வருடங்களாக அவன் எங்கள் ஊருக்கு வர முடியாமலே போய்க் கொண்டிருந்தது. ஏற்கெனவே அவனிடம் ஏற்பட்டுப் பெற்றோர்களின் ஆதரவால் வளர்ந்து வந்த ஆசையின் விளைவால் அவன் வராததைக் குறித்து நான் வருந்தினேன்.

நான்காம் வருட ஆரம்பத்தில் அவன் எங்கள் ஊருக்கு வந்தான். வீடே ஆனந்தத்தில் திளைத்தது. ஆனால், என்னையறியாமல் என்னை எங்கிருந்தோ வெட்கம் வந்து கவ்விக் கொண்டது.

வழக்கம் போலவே மஞ்சுவும் எங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். முதலில் அவள் கொஞ்சம் வெட்கப்பட்டாலும் நாளடைவில் அவள் அத்தானில்லாத நாட்களில் எப்படி இருப்பாளோ, அப்படியே சகஜமாகப் பழக ஆரம்பித்து விட்டாள்.

ஒரு நாள் மஞ்சு, "சாதுபோல இருக்கிறாயே என்று பார்த்தேன். வீட்டுக் குள்ளேயே கணவனை வைத்துக் கொண்டிருக்கிறாயே" என்றாள்.

எனக்குப் பெருமையாக இருந்தது. ஆனால் என்னைச் சமாளித்துக் கொண்டு "அதெல்லாம் ஒன்றுமில்லையடி. அவரோ என் அத்தான். எங்களில் எல்லாம் உறவில் பெண் கொடுப்பதோ பெண் வாங்குவதோ வழக்கம் கிடையாது" என்றேன் விட்டுக் கொடுக்காமல்.

அன்றைக்கு அம்மா வெளியில் போயிருந்ததால் நான்தான் அத்தானுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தேன். அப்பாவுக்கு அன்றைக்கு விரதம். ஆகவே, அத்தான் மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பாட்டுக் கிடையே அவன், "மஞ்சுளா! யாரோ உன் சிநேகிதி ஒருத்தி வருகிறாளே, அவளுக்கு வீட்டில் வேலையே கிடையாதோ? எப்போது பார்த்தாலும் உன் கூடவே சுற்றுகிறாளே!" என்றான்.

நான் பதில் பேசவில்லை.

"அவளும் உன்னோடுதான் படிக்கிறாள் என்று சொன்னாய் அல்லவா? ஆனால், அவள் உன்னைவிட ஜோராக 'டிரஸ்' செய்து கொள்கிறாள். உன்னைவிடச் சுறுசுறுப்பாகவும் இருக்கிறாள்."

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என் முகத்தில் வெறுப்புக் குறி தோன்றிற்று. குமுறும் இருதயத்துடன் சமையலறையை நோக்கி நடந்தேன். கையில் மோர்ப் பாத்திரத்தோடு திரும்பி வந்தபோது மறுபடியும் அத்தான், "ஆனால் சிலருக்கு இயற்கை அழகே போதுமானதாக இருக்கும். அதே போல் சிலரிடம் சற்று மந்த புத்தியிலும் ஒய்யாரம் காண முடியும்" என்றான்.

பெண்கள் அபலைகள் என்று சொன்னவன் வாயில் சர்க்கரைதான் போட வேண்டும். முதலில் அத்தானிடம் கோபம் கொண்ட நான் பிறகு அவனிடம் பச்சாத்தாபம் கொண்டேன். அவன் தன் அன்பை எனக்குத் தெரிவிப்பதற்காகத்தான் இப்படி எல்லாம் சுற்றி வளைத்துப் பேசுவதாகத் தோன்றிற்று.

* * *

ஐந்தாறு நாட்கள் சென்றன. மஞ்சு தன் மாமாவின் பெண் திருமணத்திற்காக வெளியூருக்குப் போயிருந்தாள். அவள் திரும்பி வர இரண்டு மூன்று நாட்கள் இருந்தன. இதற்குள் அத்தானின் லீவு முடிந்து விடவே அவன் ஊருக்குப் புறப்பட்டான்.

அத்தான் இல்லாத வீடு எனக்கு வெறிச்சென்றிருந்தது. போதாக் குறைக்கு மஞ்சுவும் இல்லாமல் போகவே எனக்குப் பொழுது போகவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு மஞ்சுவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. மாமா பெண்ணின் கல்யாணம் நன்றாக நடந்ததாம். ஆனால் அவள் ஊருக்குத் திரும்ப மேலும் பத்து நாட்கள் ஆகுமாம். திருவிடைமருதூரில் கொஞ்ச நாட்கள் தங்கி விட்டுப் பிறகுதான் ஊருக்கு வருவாளாம்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனென்றால், என் அத்தானின் ஊரும் திருவிடைமருதூர்தான். ஆனால், என்னை நானே சமாதானம் செய்து கொண்டேன். என் அத்தான் ஊர் திருவிடைமருதூர் என்பதற்காக என் நண்பர்கள் யாருமே அந்த ஊருக்குப் போகக் கூடாதா, என்ன?

ஒரு வாரத்திற்குப் பிறகு மறுபடியும் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இரண்டு நாட்களில் வருவதாகவும், வரும்போது எனக்கு ஒரு நல்ல சமாசாரம் கொண்டு வரப் போவதாகவும் எழுதியிருந்தாள்.

அன்றைக்கு மஞ்சு வரவேண்டிய நாள். ஒரு சிநேகிதையின் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பினேன். அம்மாவும், அப்பாவும் ஹாலில் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் என்ன அப்படிக் கவலைக் குறி?

மெள்ள மெள்ள எனக்கு விவரம் தெரிந்தது. அத்தானின் தாய் வழியில் மஞ்சு அவனுக்கு உறவாம். திருவிடைமருதூரில் மஞ்சு தன் பெற்றோர்களோடு தங்கியபோது கோயிலில் அத்தானும் மஞ்சுவும் சந்தித்தார்களாம். ஏற்கெனவே மஞ்சுவை என் வீட்டில் பார்த்ததிலிருந்து அத்தானுக்கு அவளிடம் ஆசை ஏற்பட்டிருந்ததாம். எனவே மேலே பேச்சு வார்த்தைகள் நடத்தினார்களாம். முகூர்த்த



நாளைக் குறிப்பிட்டுத் திருமணப் பத்திரிகை கூட அனுப்பி இருந்தான் என் அத்தான்.

"கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போகப் போகிறது என்ற அசட்டு நம்பிக்கையில் சரசுவின் பி. ஏ. முடியட்டும் என்று காத்துக் கொண்டிருந்தோமே! கடைசியில் இப்படி ஆகிவிட்டதே!" என்று அங்கலாய்த்தாள் என் தாயார்.

அதைக் கேட்ட பொழுது மஞ்சுவின் கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சிநேகிதி என்ற முறையில் அவ்வப்போது என் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவள் என் அத்தானையே மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டு விட்டாள் என்றால் அவள் செய்த துரோகத்தை என்னவென்பது?

அன்றைக்குச் சாயந்திரம் சொல்லாமல் கொள்ளாமல் என் அத்தானும், அவன் தாயாரும் வந்திறங்கினர். பெண்ணுக்கு வாங்க வேண்டிய கூறைப் புடவை எங்கும் நல்லதாகக் கிடைக்கவில்லையாம். மேலும் நெருங்கிய உறவினர்கள் சிலரை நேரில் கூப்பிட வேண்டுமாம். அதற்காக வந்ததாக அவர்கள் சொல்லிக் கொண்டனர்.

நான் அத்தான் தனியாக அறையில் உட்கார்ந்திருந்த சமயம் அவனை அணுகி, "என்ன, அத்தான்? கடைசியில் ஆண்கள் புத்தியைக் காட்டி விட்டீர்களே! மஞ்சுதான் மித்திரத் துரோகி என்றால் நீங்களுமா அவள் விரித்த வலையில் விழவேண்டும்? செய்வதை எல்லாம் செய்துவிட்டுச் சாதுபோல மறுபடியும் இதே வீட்டில் வந்து இறங்குகிறீர்களே?" என்று இரைந்தேன்.

அத்தான் சாந்தமாகவே இருந்தான். "மஞ்சுவை ஒன்றும் சொல்லாதே! அவளுக்கு எதுவும் தெரியாது. எல்லாம் என் வேலைதான்" என்றான்.

"நீ செய்தால் மாத்திரம் தப்பில்லையா? மேலும் ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு தோட்டத்தில் என் கையைப் பிடித்து 'என்னைத் தவிர வேறு யாரையும் மணம் செய்துகொள்ள மாட்டேன்' என்று சத்தியம் செய்தாயே! இப்போது அந்தச் சத்தியம் எங்கே போயிற்று?" என்றேன்.

அவன் சிரித்தான். "சரசு கடைக்குப் போகிறோம். ஒரு புடவையைப் பொறுக்கி எடுத்து வைத்துவிட்டு மறுநாள் வருவதாகச் சொல்கிறோம். மறுநாள் போகும்போது முதல் நான் பொறுக்கிய புடவையைக் காட்டிலும் நல்ல புடவை வந்திருந்தால் அதை எடுத்துக் கொள்வதில் என்ன தப்பு?" என்றான்.

நான் சீறினேன். "அடா! பாவி, நெஞ்சு என்பதே உனக்குக் கிடையாதா? புடவையையும் பெண்ணையும் ஒன்றாக்கிச் சொல்கிறாயே?" என்று கத்திவிட்டு என் அறையை நோக்கி ஓடினேன்.

கட்டிலில் தொப்பென்று விழுந்த நான் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு



விம்மினேன். எவ்வளவு நேரம் இப்படி அழுதேனோ, எனக்குத் தெரியாது.

* * *

மறு நாள் காலை. எழுந்ததும் எழுந்திருக்காததுமாக என் காதில் விழுந்த செய்தி மஞ்சுவை முதல் நாள் முதல் காணோம் என்பதுதான். அன்றைக்குச் சாயந்திரம் தான் ஊரிலிருந்து திரும்பினாளாம். எங்கேயோ வெளியில் போவதாகச் சொல்லிக்கொண்டு போனவள் திரும்பவில்லையாம்.

எனக்கு இந்தச் செய்தி அப்பொழுது பாரந்தமாகவே தோன்றியது.

அன்றைக்கு மஞ்சுவிடமிருந்து எனக்கு மூன்றாவது கடிதம் வந்தது.

சரசு!

என்னை மன்னித்துவிடு. அத்தானுக்கும் உனக்கும் மணம் நடப்பதாகப் பேச்சு வார்த்தை இருந்ததே எனக்குத் தெரியாது. உன்னைக் கேட்டபோதும் உறவிலே பெண் கொடுத்துப் பெண் வாங்கும் பழக்கம் உங்களில் கிடையாது என்றாய். இதனால்தான் நான் உன் அத்தானை மணக்கும் விஷயத்தில் முயற்சி செய்தேன். நான் மித்திரத் துரோகியல்ல.

ஊரிலிருந்து திரும்பியதும் நேராக, உன் அத்தானை மணந்துகொண்டு உன் உறவுக்காரி ஆகப்போவதை உன்னிடம் சொல்லி மகிழ்ச்சியடையும் ஆர்வத்தோடு உன் வீட்டுக்கு வந்தேன். நீயும் உன் அத்தானும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட பிறகுதான் எனக்கு உண்மை தெரிந்தது.

வீட்டில், இந்தக் கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டார்கள். உனக்காக நான் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்க மாட்டேன் என்று சொன்னால் சிரிப்பதோடுகூட பலவந்தப் படுத்துவார்கள். ஆகவே, நான் யாருக்கும் தெரியாத இடத்திற்குப் போகிறேன். உனக்கும் அத்தானுக்கும் மணம் நடந்த செய்தி தெரிந்தால் பிறகு திரும்பி வந்து என் பெற்றோர்களைப் பார்த்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. பெண் மற்றொரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்க என்றைக்கும் துணிய மாட்டாள். சந்தர்ப்ப விசேஷங்களால் ஏதாவது இசைகேடாக ஏற்பட்டால் ஒழிய, பெண் துணிந்து மற்றொரு பெண்ணைக் கெடுக்கத் துணிவதில்லை. ஏனென்றால் இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்களே!

மஞ்சு

கடிதத்தைப் படித்து முடித்த நான் விறிட்டலறினேன். ஆனால், உருப்படியாக என்னால் செய்யக்கூடியது எதுவும் இருக்கவில்லை.

** ** **

இதற்குப் பிறகு இன்றைக்குத்தான் மஞ்சுவைச் சந்திக்க முடிந்தது.

“என்ன மஞ்சு! எப்படி இருக்கிறாய்? இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?”

“பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. மனுச் செய்யாமல் நேரே வந்த எனக்கே இந்த வேலையைக் கொடுத்தார்கள். இந்தக் குழந்தைகளிடையே காலம் எவ்வளவு உற்சாகமாகச் செல்கிறது, தெரியுமா?” என்றாள் அவள்.

கொஞ்ச நேரம் நாங்கள் பேசவில்லை.

“ஏன் நீ உன் அத்தானை மணம் செய்துகொள்ளவில்லை?” என்று கேட்டாள் மஞ்சு.

“புடவை பொறுக்குவதையும் பெண்களைக் காதலிப்பதையும் ஒன்றாகப்பாவிக்கும் அவனை மணம் செய்துகொள்ள நான் விரும்பவில்லை. என் அம்மாவுக்குக்கூட இதனால் என்னிடம் கோபம். மஞ்சு, ஒரு விஷயம். இன்னமும் அத்தான் பிரம்மச்சாரியாகத் தான் இருக்கிறான். நீயும் அவனும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதுதான் என் ஆசை.”

“இந்தக் குழந்தைகளை விட்டு விட்டா? மேலும் இந்தப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகி என்னை அனுப்ப மறுப்பாளோ என்னவோ?”

நான் சிரித்தேன். “இந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால் சொந்தக் குழந்தைகள் ஏற்பட்டு விடப் போகின்றன. நிர்வாகி உன்னைக் கட்டாயம் அனுப்புவாள். பெண் மற்றொரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்க என்றைக்கும் துணிய மாட்டாள் அல்லவா?” என்றேன்.

அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு நடந்த அவர்கள் திருமணத்தின்போது நான் ஒரு புத்தகம் பரிசளித்தேன். அட்டையைப் புரட்டியதும் முதல் பக்கத்தில் நான் எழுதியிருந்தது இதுதான்:

“பெண் மற்றொரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கத் துணிய மாட்டாள். -சரசு”



டாக்டர் :—இந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டீர்களானால் நன்றாய்ப் படிக்கலாம்.

அவர் :—ஆச்சரியமாயிருக்கிறதே!

டாக்டர் :—ஆமாம். அதில் என்ன உங்களுக்கு அப்படிச் சந்தேகம்?

அவர் :—எனக்குப் படிக்கத் தெரியாது. அதனால் கேட்டேன்.



3. குழந்தை எங்கே?

போத்தியம்மா தன் ஆயுளில் ஒரே ஒரு குழந்தையைத்தான் நேசம் பாராட்டி வளர்த்திருக்கிறாள்; ஒரு குழந்தையிடம்தான் அன்போடும் பாசத்தோடும் நடந்து கொண்டிருக்கிறாள். அதுதான் அவளுடைய பேரன் மல்லய்யன். அந்த நாடோடிக் கூட்டத்திற்குத் தலைவனாக இருந்து 'ராஜா' என்ற விருதுப் பெயர் பெற்றவன். வள்ளிக்குப் பிறந்த குழந்தைக்கு அவனுடைய ரத்த சம்பந்தமிருந்தாலும் அது ஒரு பெண். அந்தக் குழந்தையினால் எந்தப் பெருமையும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அந்தக் குழந்தை தங்கள் கூட்டத்திற்கு ராணியாவதினால் வள்ளிக்குத்தான் பெருமை ஏற்படும். எங்கிருந்தோ தன் பேரனுடன் ஓடி வந்த ஒருத்தியுடைய குழந்தை ராணியாவதைப் போத்தியம்மாவால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை அந்தப் பதவியும் அதிகாரமும் அந்தக் குழந்தைக்குக் கிடைக்காத வண்ணம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தாள்.

'ஹூம், பெண் கட்டை! தாயைப் போலத் தானே இருக்கும்! இந்தக் குழந்தை தகப்பனைப் போல் ஆணாக இருந்து ராஜாவாக ஆவான் என்று எல்லோரும் ஆசையோடு எதிர்பார்த்தார்கள். அவர்கள் ஆசையில் மண் விழுந்தது. இப்பொழுது ராணி பிறந்திருக்கிறாள். இவள் ராணியானால் வள்ளி எல்லோரும் தனக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்றல்லவா நினைத்துக் கர்வமடைவாள்! நான் நல்ல மனத்தோடு இந்தக் குழந்தை செத்தாலும் பிழைத்தாலும் நமக்கென்னவென்று விட்டு விட்டுப் போய் விடலாம். ஆனால் நாளைய தினம் பெத்தண்ணன் உண்மையை அறிந்தால் என்னைச் சாதாரணமாக விட மாட்டான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே கையிலிருந்த குழந்தையைப் பார்த்தாள் போத்தியம்மா.

அது அப்பொழுதுதான் பிறந்த குழந்தையாக இருந்தாலும் பெரிதாயும் தேக புஷ்டியோடும் இருந்தது. தன் நினைவற்ற நிலையில் வள்ளி மரத்தடியில் கிடந்தது போத்திக்கு அப்பொழுது சந்தோஷத்தை அளித்தது. அவள் அப்படியே அந்த மரத்தடியிலேயே கிடந்து இறந்து விட்டால் எவ்வளவு நல்லது என்று நினைத்தாள். வள்ளி இறந்து விட்டால் அந்தக் குழந்தையை வளர்க்கும் உரிமை போத்தியம்மாவைத்தானே சேரும்! அதனால் போத்திக்குத் தங்கள் கூட்டத்தாரிடையே ஒரு மதிப்பு ஏற்படும். இதை நினைத்த போது போத்தி அந்தக் குழந்தைக்கு எவ்வித ஆபத்தையும் உண்டாக்காமல் காப்பாற்றுவது என்று தீர்மானித்தாள். அந்தக் குழந்தை சிறிது அழுகையை நிறுத்திக் கையையும் காலையும் உதறியபடி துள்ளியது. போத்தியம்மா அந்தக் குழந்தையைக் கீழே நழுவ விடாமல் பத்திரமாக அணைத்துக் கொண்டாள். இந்தக் குழந்தையை வளர்க்க வள்ளிக்கு என்ன யோக்யதை இருக்கிறது! இதை அவள் கண்ணெதிரேயே காட்டக் கூடாது. இந்தச் சமயத்தில் அவள் சுய நினைவோடு எழுந்து விட்டால் அவளுக்குத் தன் குழந்தையைப் பற்றிய கவலை ஏற்பட்டுவிடும். நான் இதை இப்பொழுதே எடுத்துக் கொண்டு போய்விடுகிறேன். இதை யார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! ஒருவருமில்லை. இதெல்லாம் யாருக்குத் தெரியப் போகிறது! இவள் எழுந்து குழந்தையைக் காணாமல் தேடித் திரிந்து அலறி உயிரை மாய்த்துக் கொள்ளட்டும். அப்படியே இவள் உயிரோடு இருந்தாலும் பெத்தண்ணன் குழந்தை எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவாள்! 'குழந்தையை எங்கோ காணோம்' என்று சொல்லி விழிப்பாள். அப்பொழுது அவளுக்குச் சரியான தண்டனை கிடைக்காமல் இருக்காது. அதற்குள் நான் இந்தக் குழந்தையை ஒளித்து வைத்து யாரிடமாவது விலைக்கு விற்றுவிடுகிறேன். இதை வாங்கிக் கொள்ள உலகத்தில் எத்தனையோ பைத்தியக்காரர்கள் இருக்கிறார்கள் என்று தனக்குள் தீர்மானமாகச் சொல்லிக் கொண்டாள். அவள் கண நேரம் கூட அங்கு நிற்கவில்லை. அந்தக் குழந்தையைப் புடவைத் தலைப்பால் மூடி மறைத்துக் கொண்டு தன் குடிசையை நோக்கி நடந்தாள்.

போத்தி சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் வள்ளி சுய உணர்வு பெற்றுக் கண் விழித்தாள். அவள் எதையோ தேடுகிறவள் போல் படுத்த வண்ணமே பக்கத்திலெல்லாம் கையால் துழாவினாள். என்ன ஏமாற்றம்! குழந்தை எங்கே! அவள் சுய நினைவோடுதான் தன் குழந்தையை அப்படித் தேடினாள். அவள் திகைப்புற்று எழுந்து உட்கார்ந்து நான்கு புறமும் மிரள மிரள விழித்துப் பார்த்தாள். சமீபத்தில் எங்கும் குழந்தையைக் காணாததனால் பித்துப் பிடித்தவள் போல் கதறினாள். சற்றுத் தூரத்தில் பத்துப் பதினைந்து வீடுகள் உள்ள சிறிய குப்பம் இருப்பது அவளுக்குத் தெரிந்தது. அந்த இடத்திலிருந்து யாரேனும் வந்து தன் குழந்தையை எடுத்துக் கொண்டு போயிருப்பார்களோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. ஆகவே, அவள் மெதுவாக எழுந்து அந்த இடத்தை நோக்கி நடந்தாள்.

அது விவசாயிகள் வசிக்கும் ஒரு சிறிய குப்பம். ஒரு பெரிய மணல்மேடு. அதை ஒட்டினாற்போல் ஒரு பெரிய தோப்பு. அந்தத் தோப்பிற்கப்பால் ஒரு குளம். அந்தக் குளத்தைச் சுற்றிப் பத்துப் பன்னிரண்டு குடிசைகள். வள்ளி தள்ளாடிய படியே நடந்து வந்து மணல் மேட்டைத் தாண்டித் தோப்பை அடைந்து விட்டாள். மணல் மேட்டில் நடந்து வந்த சிரமத்தில் அவளுடைய கால்கள் தடுமாறவே கீழே விழுந்தாள். அவள் மறுபடியும் எழுந்து நடந்து தன் தேகபலத்தைப் பரிட்சை செய்து பார்க்க விரும்பவில்லை. ரஸ்தாவிலுள்ள மரத்தடியைவிட அந்தத் தோப்பு அவளுக்குப் பத்திரமான இடமாகப் பட்டது. அவள் ஒரு நாடோடிப் பெண். அனுபவமும் தேக பலமும் தான் அவள் உயிரைக் காப்பாற்றின என்று சொல்ல வேண்டும். அப்பொழுது அவள் இருந்த நிலையில் வேறு எந்தப் பெண் இருந்திருந்தாலும் உயிர் வாழ முடியாது. வள்ளி கீழே விழுந்ததும் அவளை யறியாமல் நித்திரையிலாழ்ந்து விட்டாள்.

வள்ளி நித்திரை தெளிந்து கண் விழித்துப் பார்த்தபோது, தான் தோப்பில் முன்பு கிடந்த இடத்தில் அப்பொழுது இல்லை என்பதை உணர்ந்தாள். அவளுக்குச் சமீபத்தில் ஒரு ஸ்திரீ உட்கார்ந்து அவள் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அந்த ஸ்திரீக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். அவளுடைய முகக் களை அனுபவமும் உறுதியும் நிறைந்ததாக இருந்தது.

வள்ளி சுற்றிலும் தன் கண் பார்வையைச் செலுத்திவிட்டுத் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள். அது ஒரு சிறு குடிசை. அந்த இடத்திற்கு அவள் எப்படி வந்தாள்! திகைப்போடு அவள் மிரள மிரள விழித்ததைப் பார்த்து அந்த ஸ்திரீ சிரித்துக் கொண்டே, "என்ன அம்மா, அப்படி விழிக்கிறே......!" என்றாள்.

"நான் எங்கே இருக்கிறேன்!" என்று கேட்டாள் வள்ளி குழப்பத்தோடு.

"நல்ல இடத்தில் தான் பத்திரமாய் இருக்கிறாய். இந்தமாதிரி உடம்பை வைச்சுக்கிட்டு இங்கெல்லாம் ஏனம்மா தனியாக வருகிறாய்! நீ தோப்பிலே மயக்கம் போட்டு விழுந்து கிடந்ததை எங்கள் வீட்டுக்காரர் பார்த்து விட்டு ஓடோடி வந்து என்னிடம் சொன்னார். அவர் முதலில் நீ இறந்து விட்டாய் என்றே நினைத்து விட்டார். அப்புறம் நான் வந்து பார்த்த பிறகுதான் உனக்குக் கொஞ்சம் உயிர் இருக்கிறது என்று தெரிந்தது. பிறகு நாங்கள் உன்னை இங்கே தூக்கிக் கொண்டு வந்தோம். நீ எத்தனை நேரமாக அப்படி அந்தத் தோப்பிலே மயக்கம் போட்டுக் கிடந்தே!" என்று பரிவுடனும் அன்புடனும் கேட்டாள் அந்த ஸ்திரீ.

எத்தனை நாழிகையாய் அந்தத் தோப்பில் பிரக்ஞை இழந்து கிடந்தோமென்று எப்படி வள்ளியால் பதில் சொல்ல முடியும்? "எனக்கெப்படித் தெரியும்! காலையிலே எங்கள் ஜனங்கள் பெரிய ரோட்டு வழியாகக் கும்பகோணம் போனாங்க. அவர்களைத் தொடர்ந்து வந்தேன். அவ்வளவுதான் தெரியும்" என்று சொல்லி நிறுத்தினாள்.

வள்ளிக்குச் சமீபமாக அமர்ந்திருந்த ஸ்திரீ அவள் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "நீ ஒரு மைலுக்கு அப்பாலே ரோட்டிற்குச் சமீபமாகத் தங்கியிருந்தாங்களே நாடோடி ஜனங்கள், அவங்களைச் சேர்ந்தவளா!" என்றாள்.

வள்ளி ஏதோ யோசித்துக் கொண்டே, "ஆமாம்" என்றாள் சிரத்தை இல்லாமல் பதில் சொல்கிறவள் போல். அவள் அப்பொழுது தன் மூளையிலிருந்த குழப்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கிக் கொண்டு காலையிலிருந்து நடந்தவைகள் ஒவ்வொன்றையும் நினைவிற்குக் கொண்டு வர முயற்சித்தாள். ஒவ்வொன்றும் அவளுக்குத் தெளிவாக விளங்கியது. திடீரென்று அவள் ஆவேசம் கொண்டவள் போல் எழுந்து உட்கார்ந்து அந்த ஸ்திரீயின் கையைப் பிடித்





துக்கொண்டு, "என் குழந்தை எங்கே!" என்று கேட்டாள் பதட்டத்தோடு.

அந்த ஸ்திரீக்கு இது பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒரு வேளை வள்ளி பைத்தியம் பிடித்தவளாக இருப்பாளோ என்ற சந்தேகம்கூட எழுந்தது. "குழந்தையா! நாங்கள் உன்னைத்தான் பார்த்தோமே தவிர, உன் குழந்தையைப் பார்க்க வில்லையே! உனக்கு ஏதாவது மூளை குழம்பி இருக்குதா! இல்லாட்டி சொப்பனமா!" என்றாள்.


வள்ளி எதையோ சோதித்துக் கண்டு பிடித்து விடுகிறவன்போல் அந்தக் குடிசையின் ஒவ்வொரு மூலை மூடுக்கையும் ஊடுருவிப் பார்த்தாள். ஒவ்வொரு வினாடியும் அவளுடைய பதைப்பும் திகைப்பும் அதிகமாயின. "எனக்கு ஒரு குழந்தை பிறந்திச்சு; ஆமாம், அதை இப்போது காணோம். நீங்கள் என் குழந்தையை எடுத்து ஒளித்து வைக்க வில்லையே...!" என்றாள் பதட்டத்துடன்.

வள்ளியின் வார்த்தையைக் கேட்டதும் அந்த ஸ்திரீக்குக் கோபமும் ஆத்திரமும் புகைந்து வந்தன. "உங்களைப் போல நாடு சுற்றும் கழுதைக் கெல்லாம் எவ்வளவு வாயும் திருட்டுத்தனமும் சாகசமும் உண்டு என்று எனக்குத் தெரியும். இப்படி நீ சோவிழுந்து கிடக்கிறயே என்று பச்சாத்தாபப்பட்டு உன்னை இங்கே தூக்கிக்கிட்டு வந்தோம். நான் உன் குழந்தையையும் காணவில்லை, ஒன்றையும் காணவில்லை. இதோ என் வீட்டுக்காரரையேதான் அழைத்துக் கொண்டு வந்து கேட்கிறேனே!" என்று சொல்லி அதிவேகமாக வெளியேசென்றாள்.

அந்த ஸ்திரீ அவ்வளவு கோபமாகவும் பதட்டமாகவும் பேசுவாள் என்று வள்ளி நினைக்கவில்லை. தன் குழந்தையைக் காணவில்லையே என்ற துடிப்பில் ஏதோ கேட்டு விட்டாள். அந்த ஸ்திரீ படபடப்போடு பேசியதும் தன் புருஷனை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லி அவசரமாக வெளியே சென்றதும் வள்ளிக்குச் சிறிது அச்சத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியது.

அந்தப் பெண் எவ்வளவு அவசரத்தோடு வெளியே சென்றாளோ, அவ்வளவு அவசரமாகவே குடிசைக்குள் வந்தாள். அவளுக்குப் பின்னால் அவளுடைய கணவனும் வந்து நின்றான். அவன் முகத்தில் சாந்தமும் அமைதியும் குடிகொண்டிருந்தன. "என் அம்மா! நீ என்னமோ நாங்கள் உன் குழந்தையைக் களவாடி ஒளித்து வைத்திருக்கிறதாகச் சொன்னாயாமே! அது நிஜமா! தெய்வ சாட்சியாக உன்கிட்டே குழந்தை இருந்ததை நாங்கள் பார்க்கவில்லை. உண்மையாகவே உனக்குக் குழந்தை இருந்திச்சா......!" என்று கேட்டான் சிறிதும் அமைதி குலையாமல்.

"நீங்கள் திருடிவிட்டதாக நான் சொல்லவில்லை. என் குழந்தையைக் காணோமென்று கேட்டேன். அவ்வளவுதான். என் குழந்தையை யாராவது தூக்கிக்கிட்டுப் போயிருப்பாங்களோ, என்னவோ!" என்றாள் தழுதழுத்த குரலில். நெஞ்சி லெழுந்த துயரத்தை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. கண் கலங்கி முத்து முத்தாகக் கண்ணீர் வழிந்தது. அவளுடைய நிலையைக் கண்டு அவள் மீது கோபத்தோடு இருந்த அந்த ஸ்திரீக்கும் சிறிது பச்சாத்தாபம் ஏற்பட்டது. அவளுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து யாராவது அவளுடைய குழந்தையைத் திருடிக் கொண்டு போயிருக்கலாம் என்று அவளுக்குப் பட்டது. "உன்னுடைய சொந்தக்காரங்களை அந்தக் குழந்



மாஜிஸ்டிரேட் :—சில இரும்பு ஆயுதங்களுடன் நீ கட்டிலுக்கு அடியில் ஒண்டிக் கொண்டிருந்த தாகச் சொல்லுகிறார்களே, அதற்கு நீ இப்பொழுது என்ன சொல்லப் போகிறாய்?

குற்றவாளி :—நான் மோட்டார் ரிப்பேர் செய்கிறவனுங்க. அந்தப் பழக்கத்திலே அப்படிப் படுத்து விட்டேன்!

தையைத் தூக்கிக்கிட்டுப் போயிருக்கலாம் அல்லவா! இந்த நாடோடிக் கும்பல்களுக்குத்தான் துளிக் கூட மனத்தில் ஈவு இரக்கம் என்பதே கிடையாதே!" என்றான்.

"இல்லே, இல்லே. அவங்களெல்லாம் என் குழந்தையைத் திருட மாட்டாங்க. அவங்களெல்லாம் நல்லவங்க. அவங்களிடம் என் குழந்தை இருக்காது. வேறு யாரோதான் திருடிக்கிட்டுப் போயிருப்பாங்க. அது எங்கே இருக்கும்! என் குழந்தை மறுபடியும் என் கைக்குக் கிடைக்குமா!" என்று விசித்து விசித்து அழுதாள் வள்ளி.

வள்ளியை எப்படிச் சமாதானப் படுத்துவது என்று மருதமுத்துவுக்கும் அவன் மனைவி மீனாட்சிக்கும் விளங்கவே யில்லை. இது அவர்களுக்குப் பெரிய அதிசயமாக இருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணம் ஒன்றும் விளங்காமல் விழித்தனர். வள்ளி முழங்கையில் முகத்தைப் புதைத்த வண்ணம் படுத்து விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்.

அன்று இரவு மருதமுத்து தன் மனைவியைப் பார்த்து, "என்ன, இன்னும் அந்தப் பெண்ணு தன் குழந்தையை நினைச்சே அழுதுக் கிட்டிருக்கிறாளா?" என்று கேட்டான்.

"ஆமாம்! நினைச்சாப் பரிதாபமாகத்தானிருக்குது. உண்மையாகவே அவளுக்கு ஒரு குழந்தை இருந்ததாகத்தான் தோணுது. இப்படிக் குழந்தையையும் தாயையும் பிரிக்கிற பாவிகளும் உண்டா!" என்றாள் மீனாட்சி.

"சரிதான். ஆனால் குழந்தையைப் பற்றிய அடையாளமே ஏதும் தெரியவில்லையே......! ஒரு வேளை அந்தக் குழந்தை பிறந்தவுடனே இறந்து போயிருக்கணும். இவளுக்குத் தெரியாமல் அதை எடுத்து அடக்கம் செய்திருப்பாங்க. அப்படி இல்லாவிட்டால் அந்தக் குழந்தை ஏதாவது அவமானத்தை உண்டாக்கக் கூடிய பிறவியாக இருக்கிருக்கணும் பிறந்தவுடனே அதைத் திருடிக்கிட்டுப் போய்த் தீர்த்திருப்பாங்க......"

"எப்படியோ......! குழந்தை போயிடுத்தேங்கிற ஏக்கத்திலேதான் இவள் மூளை குழம்பிப் போயிருக்கணும்" என்றாள் மீனாட்சி.

"சரி! அந்தப் பெண்ணு ஏதாச்சும் சாப்பிட்டாளா, பாவம்!" என்றான் மருதமுத்து.

"ஏதோ சாப்பிட்டாள்" என்றாள் மீனாட்சி.

"பாவம், அந்தப் பெண்ணை நாம் ஏன் நம் வீட்டோடு வைத்துக் கொள்ளக் கூடாது!" என்று கேட்டான் மருதமுத்து மீனாட்சியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"நல்லாச் சொன்னீங்களே! இந்த நாடு சுற்றிகளையெல்லாம் குடித்தனம் செய்கிற வீட்டிலே ஒரு நிமிஷங்கூடத் தங்கவிடக் கூடாது. அவர்களை நம்பவே கூடாது. தெரியுமா! அவளைப் பற்றியும் அவள் குழந்தையைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டாம் யாரையாவது ஏமாற்றவேணும் என்று அவங்க இப்படி யெல்லாம் வேஷம் போடுகிறது கூட உண்டு. அவளை நான் நாளைக் காலையிலே போயிடுன்னு சொல்லிவிடப் போகிறேன். இந்த நாடோடிகள் ஒரு இடத்திலும் தங்கி இருக்க மாட்டார்கள்" என்றாள் மீனாட்சி.

மருதமுத்து எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. அவனுக்கு வள்ளியிடம் ஏற்பட்ட பச்சாதாபத்தின் அளவு அவன் மனைவிக்கு இல்லை என்பது தெளிவாக விளங்கியது.

மறு நாள் காலையில் மீனாட்சி வள்ளியைப் பார்க்க வந்தபோது அவளைக் காணவில்லை. குளக்கரை, தோப்பு எங்கெங்கோ தேடினாள். காணவில்லை. அவள் தன் கணவனைப் பார்த்து, "பார்த்தீங்களா! இந்த நாடோடிகளுக் கெல்லாம் நிமிசம்கூட வீட்டிலே இருக்க உடம்பு வணங்காது. இருளோடு எழுந்து எங்கேயோ நடையைக் கட்டிவிட்டாள் போலிருக்கிறது" என்றாள்.

சமூக நியதிகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படாத நாடோடிகளுக்குப் பயந்து வள்ளி தன் குழந்தையைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களிடம் ஒப்படைக்க நினைத்தாள். முதல் நாள் முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்டதில் அவளுடைய தேக நிலைமை தெளிவடைந்திருந்தது. பொழுது விடிவதற்கு முன்னேலேயே மீனாட்சியம்மாள் வீட்டை விட்டு ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டாள். ரஸ்தாவில் ஒவ்வொரு இடத்தையும் கூர்ந்து நோக்கிக்கொண்டே வந்தாள். அவள் கண்ணில் பட்ட ஒவ்வொரு மரத்தடியிலும் புதரிலும் தன்னுடைய குழந்தையை யாரேனும் எடுத்து ஒளித்து வைத்திருப்பார்களோ என்று அவளுடைய தாயுள்ளம் நம்பித் தேடித் தவித்தது. அவள் சற்றுக் கூடச் சரியாகப் பார்க்காத தன் குழந்தையின் முகத்தைக் காணத் துடியாகத் துடித்தாள். மறுபடியும் போத்தியம்மாவின் குடிசைக்குப் போக அவளுக்கு மனமில்லை. நாடோடிகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் அவள் இஷ்டப்படவில்லை. குழந்தையில்லாமல் அவர்கள் முகத்தில் அவள் எப்படி விழிப்பாள்! அவர்கள் குழந்தை எங்கே என்று கேட்டால் அவள் என்ன பதில் சொல்லுவாள்!

அவள் எங்கு செல்கிறோம் என்ற ஒரு குறிப்பும் இல்லாமல் நடந்தாள். ஆனால் அந்த வழி அவள் இளமைப் பிராயத்தில் எந்த ஊரில் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வசித்தாளோ, எந்த இடத்தில் ஒழுங்கும், சுகமும் நிறைந்த வாழ்க்கையை உதறி விட்டு ஒரு நாடோடி வாலிபனின் காதலுக்காக வாழ்க்கையில் பல துன்பங்களை ஏற்றுக் கொள்ளச் சித்தமானாளோ, அந்த இடத்திற்குத்தான் அவளைக் கொண்டு வந்து விட்டது.

அதுதான் குன்னத்தூர். தூரத்தில் அதோ தெரியும் பெரிய மாளிகைதான் குன்னத்தூர் பட்டக்காரரின் வீடு. அவள் இந்த நாடோடிக்



அவன் :—எனக்கு இப்போது வருகிற வரும்படி உனக்குப் போதும் என்று தோன்றுகிறதா? தோன்றினால் நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயார்!

அவள் :—எனக்குப் போதும். அப்புறம் நீங்கள் உங்கள் செலவுக்கு என்ன செய்வீர்கள் என்றுதான் யோசிக்கிறேன்.

கூட்டத்தினருடன் சேருவதற்கு முன்னால் அந்தப் பெரிய கட்டிடம் முழுவதும் அவளுடைய சொந்த வீடுபோல் இருந்தது. அவள் அந்த வீட்டில் ஒரு சாதாரண வேலைக்காரியாகவே இருந்தாலும் அந்த வீட்டின் சொந்தக்காரி போலவே இருந்தாள். தூரத்திலிருந்த அந்தக் கட்டிடத்தைப் பார்த்ததும் அவள் மனத்தில் ஒரு எண்ணம் எழுந்தது.

அவள் தூரத்தில் நின்றபடியே மறுபடியும் ஆர்வத்தோடு அந்தக் கட்டிடத்தைப் பார்த்தாள். பெரிய மாடி. மாடி ஜன்னல்களில் பொருத்தப் பட்டிருந்த கண்ணாடிக் கதவுகள் சூரியனின் ஒளி பட்டுப் பளபளப்போடு மின்னின. அந்தக் கட்டிடத்தைச் சூழ்ந்துள்ள அழகான தோட்டமும் உயர்ந்த மதில் சுவரும் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தன. மதில் சுவரில் பலமான இரு கட்டயங்களுக் கிடையே பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவுகள் எல்லோரையும் வித்தியாசமின்றித் தாராளமாக வரவேற்பது போல நன்கு திறந்துவிடப் பட்டிருந்தது. மனத்தில் ஒரு புறம் பலவீனத்தோடும், ஒரு புறம் துணிச்சலோடும் அவள் அந்தக் கட்டிடம் இருக்கும் திசையை நோக்கி நடந்தாள். ஆனால் குழந்தையைப் பற்றிய எண்ணம் அவளைச் சற்றுப் பின் வாங்கச் செய்தது. அவள் தன் குழந்தையைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டாமா! தன் குழந்தையைத் தேடிக் கண்டு பிடித்து அதைத் தன் இரு கரங்களால் வாரி எடுத்து அணைத்துக் கொள்ளாமற்போனால் எப்படி அவளுக்குத் தூக்கம் வரும்! எப்படி அவளுக்கு நிம்மதியாக வாழப் பிடிக்கும்! தன் வயிற்றில் பிறந்த குழந்தையைப் பறிகொடுத்து விட்டுச் சூன்யமான இருதயத்தோடு பித்துப் பிடித்தவள் போல் அலைந்து திரியும் அவளுக்கு வாழ்க்கையில் இனி என்ன சுகம் இருக்கிறது!

அவள் சட்டென்று திரும்பி வேறெங்கோ நடந்தாள். வாழ்க்கையில், தான் செய்த குற்றங்களுக்காகவும் தவறுகளுக்காகவும் வெட்கப்படுவது போல் அவள் தலை குனிந்த வண்ணமே நடந்தாள். இந்த உலகத்தையே மறந்து யந்திரப் பாவை போல் நடு ரஸ்தாவில் நடந்து செல்லும் அவளைச் சுய உணர்வுப் பெறச் செய்தது பின்னாலிருந்து வந்த மோட்டார் காரின் ஹாரன் அலறல்.

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து விட்டுச் சட்டென்று பாய்ந்து ரஸ்தாவின் ஓரமாக ஒதுங்கி நின்றாள். அப்படி அவள் ஒதுங்கவில்லையானால் கண நேரத்தில் அந்தக் காருக்கு அவள் உயிர்ப்பலியாக வேண்டியிருந்திருக்கும். அந்த மோட்டார் காரை ஓட்டி வந்த வாலிபரும் சட்டென்று பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினார்.

அந்தக் காரில் முன்புற ஆசனத்தில் இரண்டு பேர்கள் அமர்ந்திருந்ததை வள்ளி பார்த்தாள். அவளுடைய அழுக்கடைந்த உடையையும், துயரம் நிறைந்த வாடிய முகத்தையும் பார்த்ததும் அந்த வண்டியில் அமர்ந்திருந்த இருவர் முகத்திலும் சிறிது இரக்கக் குறி தோன்றியது போலிருந்தது. அவர்களுடைய பெரியமனிதத் தன்மையில் நடு ரஸ்தாவில் தவறுதலா - நடந்த ஒரு நாடோடிப் பெண்ணை மன்னித்துவிடும் குணம் அதிகமாக இருந்தது. காரில் அமர்ந்திருந்த வாலிபரின் தோற்றம் அவருடைய உயர்ந்த அந்தஸ்திற்குத் தகுந்தபடி இருந்தது. அந்த வாலிபருக்குப் பக்கத்தில் வள்ளியின் வயதிற்குச் சமமான இளமையும் அழகும் பொருந்திய பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவளுடைய பார்வையிலும் அலங்காரத்திலும் மிளிர்ந்த அழகு வள்ளியின் மனத்தை உறுத்தவில்லை. அந்த வாலிபனை ஒட்டினாற்போல் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணின் கையில் ஒரு சிறு குழந்தை இருந்தது. அது பிறந்து அதிக நாட்களாயி இருக்காது. வெண்ணிறத் துணியால் அந்தக் குழந்தையை அரை குறையாக மறைத்துப் போர்த்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அவள் முகத்தில் ஒரு தாயின் உன்னத ஸ்தானத்தைத் தானும் அடைந்து விட்டோம் என்ற கர்வமும் பெருமையும் தோய்ந்திருந்தன.

'அவளுக்கு என்ன குறைவு! எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது! நானும் அவளைப் போல் ஒரு பெண்தான். அவளுக்குப் பக்கத்தில் அவளுடைய அழகான புருஷன் அமர்ந்திருக்கிறான். எப்பொழுதும் இன்பமும் சந்தோஷமும் அவளைச் சூழ்ந்து நிற்கின்றன. அவள் ஏதேனும் கடுமையான வேலைகளைச் செய்யும் துரதிர்ஷ்டசாலியான பெண்ணா! வாழ்க்கையில் அவள் விரும்பும் பொருள் எதுதான் கிடைக்காது! துயரத்தின் நிழல் எப்படி இருக்கு மென்று கூட அவளுக்குத் தெரியாது. இவைகளை எல்லாம்விட அவளுக்கு ஒரு அழகான குழந்தை இருப்பது எல்லாவற்றையும் விடப் பெரிய அதிர்ஷ்டம். அவள் அந்தக் குழந்தையை அணைத்து வைத்துக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து அவள் அதை எவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கிறாள்! அந்தக் குழந்தையிடம் எவ்வளவு பாசத்தோடும், அன்போடும் இருக்கிறாள் என்பது போன்ற பலவிதமான எண்ணங்கள் வள்ளியின் மனத்தில் அலை அலையாக எழுந்தன.

காரில் உட்கார்ந்திருந்த தம்பதிகள் அவளிடம் எவ்விதமான வார்த்தையும் பேசவில்லை. அந்த வாலிபர் மறுபடியும் காரை ஓட்டத் தொடங்கினார். கார் மெதுவாக நகர்ந்தது. சில வினாடிக்குள் அதன் வேகம் அதிகரித்து வள்ளியின் கண் பார்வையிலிருந்து மறைந்தது. அந்தக் கார் சென்றதற் கடையாளமாக புழுதிப் படலம்தான் ரஸ்தாவைக் கவிந்து நின்றது.

வள்ளி சிறிது நேரம் அந்த இடத்திலேயே நின்று விட்டு அந்தக் கார் சென்ற திசையையே நோக்கி நடந்தாள். (தொடரும்)



அந்த வீட்டைக் கட்டும் போது அது அப்படிப் பாழாய்க் கிடக்கும் என்று அவர் நினைக்கவில்லை. கட்டி முடித்து இரண்டு வருஷங்கள் ஆகியும் ஒருவரும் அதை எட்டிப் பார்ப்பதாகக் காணும். வீடு கட்ட வேண்டுமென்பது அவரது வெகு நாளைய திட்டம். அவருடைய இந்த ஆசை நிறைவேற அதிக வருஷங்கள் பிடிக்கவில்லை. தாம் ரிடையர்டு ஆகி ஒரே வருஷத்தில் அந்த விட்டைக் கட்டி முடித்தார். ஆனால் கட்டும்போது இருந்த உற்சாகம் கட்டி முடித்த பிறகு இல்லை. வர வர வர மனச் சோர்வே ஏற்பட்டு வந்தது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை.

அவருக்கு என்னமோ தனி பங்களாவே இருக்கிறது. 'பங்களா வீட்டு ஐயர்' என்றால் மருதூரில் தெரியாதவர்கள் கிடையாது. அவருக்கு வீடு இருக்கும் போது மற்றொரு வீடு கட்டும்படியான அவசியமும் இல்லைதான். ரகத்திற்கு ஒன்று என்பார்களே, அம்மாதிரி ஒரு பிள்ளை, ஒரு பெண்தான் அந்தத் தம்பதிகளுக்கு. தம் பெண் சுந்தரியையும் நல்ல இடத்தில் விவாஹம் செய்து கொடுத்து விட்டார். தம் ஒரே பிள்ளை ராகவன், வரப்போகும் நாட்டுப் பெண் இவர்களுடன் கூடிய அந்தத் தம்பதிகளின் சிறிய குடும்பத்திற்கு அந்த பங்களா என்னவோ மிகப் பெரியதுதான்.

அப்படி இருந்தும் ரிடையர்டு ஆன காலத்தில் வந்த பணம் முழுவதையும் ஒரு வீட்டின் பேரில் போட விரும்பினார். கட்டும் வீட்டை வாடகைக்கு விட்டு, வட்டியும் முதலுமாக எடுத்துவிடத் திட்டமிட்டார். இந்தக் காலத்தில் வீட்டின் பேரில் போடும் பணம் வீணாகாது என்பது அவருடைய திடமான நம்பிக்கை. ஆகவே திட்டப்படி வீட்டைக் கட்டியும் முடித்தார்.

தெற்குப் பார்த்த வீடு. சுற்றிலும் காம்பௌண்டு. அங்கங்கே நல்ல பூச்செடிகள் நட்டிருந்தார். அருகே காவேரி. பெரிய டவுனான திருச்சிக்குச் சமீபம். நினைத்த மாத்திரத்தில் டவுனுக்குப் போய் வரலாம். இவைகளெல்லாம் பார்க்க வருகிறவர்களுக்கு 'மவுசு' தட்டும்படியான அம்சங்களாக இருந்தன. அப்படி இருந்தும் இதுவரை யாரும் ஏனோ தெரியவில்லை, குடியே வரவில்லை!

புது பங்களாவுக்கும் பழைய பங்களாவுக்கும் தினம் போய் வரத்தான் அவருக்குப் பொழுது சரியாக இருந்தது. தினமும் யாராவது வீடு பார்க்க என்று வரத்தான் செய்தார்கள். வருகிறவர்களுக்குப் புது வீட்டைத் திறந்து காண்பிப்பதும், அதிலுள்ள சௌகரியங்களை மிகைப் படுத்திப் பெருமையுடன் சொல்லிக் கொள்வதும் அவருடைய தினசரி வேலைகளில் ஒன்றாகி விட்டது. ரிடையர்டு ஆன கிருஷ்ணசாமி அய்யருக்கு இந்த உத்தியோகம் சரியாக இருந்தது! வீட்டைப் பார்க்க வருகிறவர்களும் திருப்தியுடன்தான் செல்வார்களாம். ஆனால் 'நாளைக்கு வந்து சொல்லுகிறோம்' என்று சொன்னவர்களில் ஒருவராவது மறுநாள் வந்ததில்லையாம்! வருஷம் இரண்டாகி விட்டது. ஒருவராவது அந்த வீட்டுக்குக் குடி வரவில்லை!

கிருஷ்ணசுவாமி அய்யர் அப்படி அதிக வாடகைக்கும் ஆசைப்படவில்லை. ரூபாய் ஐம்பது வாடகை சொல்லிக் கொண்டிருந்தவர் இப்போது ரூபாய் முப்பதுக்கும் விடத் தயாராக இருந்தார். வாடகையே வராமல் பாழாக இருப்பதற்கு, மெழுகிப் பெருக்கி வைத்துக் கொண்டு சொல்ப வாடகையாவது வரட்டுமே என்றுதான் எண்ணினார். அப்படியும் ஒருவரும் வரவில்லை. 'இதே வீடு டவுனிலிருந்தால் நூறு ரூபாய்க்குக் குறையாமல் வாடகை வருமே!' என்று நினைத்து ஏங்கினார்.

பாழாக இருக்கும் அந்தப் புது வீட்டைப் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு உண்டாகும் வருத்தத்தைச் சொல்லி முடியாது. தம் ஒரே பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விட்ட அவருக்கு அந்தப் புது வீட்டிற்கு ஒருவரும் குடிவராதது, மற்றொரு பெண் விவாகம் ஆகாமல் இருப்பது போன்ற வருத்தத்தையே அளித்து வந்தது. அவர் மனைவி சாவித்திரி அம்மாளுக்கோ, அதை நினைக்கும் போது அழுகையே வந்து விடுமாம். "பங்களாவில் போட்ட பணத்தைப் பாங்கியில் போட்டிருந்தாலும் மாதம் வட்டி ஐம்பதுக்கு மேல் வந்து கொண்டிருக்குமே!" என்று அங்கலாய்ப்பாளாம்.

ரிடையர்டு ஆன காலத்தில் புது பங்களா விஷயம் அவருக்கு மன நிம்மதி இல்லாமலேயே செய்து வந்தது. அது மட்டுமல்ல. கிருஷ்ணசாமி அய்யர் பணத்தில் குறியாக இருப்பவர். தம் பணத்தை இப்படிப் பாழாக வீட்டில் போட்டதை நினைந்து மனம் வெதும்பினார். இன்னும் காத்திருக்க அவருக்கு மனமில்லை. ஒரு அவசர முடிவுக்கு வந்தார். அதன்படி நடந்தால் வாடகையும் வரும்; வீடும் பாழாக இருக்காது என்ற நம்பிக்கை வலுத்தது. அப்படிச் செய்துவிடவே முடிவு

செய்தார். ஆனால் அந்த அம்மாளும் அதற்குச் சம்மதிக்க வேண்டுமே? எடுத்ததற்கெல்லாம் ஆயிரம் நொடித்து விட்டுத்தான் ஒரு காரியத்தில் இறங்குவாளாம் அந்த அம்மாள். இந்த விஷயத்தில் அவளைத் திருப்தி செய்ய வேண்டுமே என்று ஐயருக்கு கவலை!

வழக்கம்போல் அன்று மாலை அவர் மாடி அறை ஊஞ்சலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். சாவித்திரி அம்மாளும் காற்று வாங்க மாடி வராந்தாவில் அமர்ந்திருந்தாள். கிருஷ்ணசாமி அய்யர் தன் தீர்மானத்தை மெதுவாக வெளியிட்டார்.

“இந்த யோசனை எனக்குத் தெரியாதா, என்ன? அந்தக் காலி மனை வாங்கும்போதே நான் முட்டிக் கொண்டேன், கேட்டீர்களா? அதோடு அதன் மேல் பணத்தைக் கொட்டி வீட்டையும் கட்டினீர்கள். எல்லாம் நீங்கள் நினைத்தபடி நடக்கிறதா? இப்போது நாம் புது பங்களாவுக்குப் போகலாம். பழைய பங்களாவை வாடகைக்கு விடலாமென்றால் நான் சம்மதிப்பேனா? இது நல்ல வாழ்ந்த வீடு. இது வரை ஒரு நோவு நொடி கிடையாது. புது பங்களாவில் ஒருவரும் குடி வருவதற்கு முன்பே ‘காற்று-சங்கா’ நிறைந்த இடம் என்று பெயர் வந்து விட்டது. அதற்கு நாம் குடிபோனால் ஒன்றும் துலங்காது; துடைத்துத்தான் போகும்” என்று படபடத்துப் பேசித் தன் முடிவையும் தெரிவித்து விட்டாள் சாவித்திரி அம்மாள்.

இந்தப் பதில் கிருஷ்ணசாமி அய்யர் எதிர் பார்த்ததுதான். அந்த மாந்தோப்பை வாங்கும் போதே சிலர் சொன்னார்களாம் ‘யாரோ தூக்குப் போட்டுக்கொண்டு இறந்து விட்டான். அதிலிருந்து பேய் பிசாசு சுற்றி அலைகிறது. பிறகு அந்தத் தோப்பைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் ஒருவராவது விளங்கவில்லை’ என்று. அப்போது அவ் வார்த்தைகளைக் கிருஷ்ணசாமி அய்யர் நம்பவில்லை. அதோடு மனை நானூறுக்கு மேல் விற்கும் காலத்தில் இருபது மனை கொண்ட அந்த இடம் எண்ணூறு ரூபாய்க்கு வந்தது. அதை வாங்கிப் போட்டால், நல்ல லாபம் என்று எண்ணியே வாங்கிப் போட்டார்.

ஊரில் அந்த மாந்தோப்பைப் பற்றித் தெரியாதவர்கள் கிடையாது. தோப்பை அழித்து விட்டால் அதற்கு ஏற்பட்ட அவச் சொல் மறைந்து விடும் என்று எண்ணி, அதை அழித்து விட்டு அந்த இடத்தில் நல்ல பங்களாவைக் கட்டினார். யார் பெயர் சூட்டினார்களோ, தெரியாது. வீடு கட்டிப் பூர்த்தியாகக் கூட இல்லை. அதற்கு “மாந்தோப்புப் பங்களா” என்ற பெயர் வழங்கி விட்டது.

கிருஷ்ணசாமி அய்யருக்கு ஒன்றும் புரியவில்லை. விற்றுவிடலாம் என்றால் யார் வாங்குவார்கள்? குடி வருவதற்கே தயங்கும்போது சொந்தமாக யார் விலைக்கு எடுத்துக் கொள்வார்கள்? அன்றும் வழக்கம் போல் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார் கிருஷ்ணசாமி அய்யர். வரும்போது புது பங்களாவையும் திறந்து பார்த்து விட்டு, அழாக் குறையாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவர் மனம் குழம்பியிருந்தது. தபால்காரன் ராமசாமி அப்பொழுது அய்யரை நெருங்கி ஏதோ சொன்னான். அவன் கூறியதைக் கேட்டதும் அவர் முகம் பளிச்சென்று பிரகாசித்தது! உரக்கச் சிரித்துக் கொண்டே இருவரும் பேசிக் கொண்டு போனார்கள்.

கிருஷ்ணசாமி அய்யர் மூளை துரிதமாக வேலை செய்யத் தொடங்கியது. அன்று இரவே சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் திரும்பி வந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. ‘மாந்தோப்பு பங்களா’ வாசலில் பெரிய போர்டு தொங்கிற்று. இன்று வரை ஜனப் புழக்கமில்லாத வீட்டில் சாரிசாரியாக ஜனங்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருந்தார்கள். பாழடைந்திருந்த பங்களா இப்போது இரவும் பகலும் பிரகாசமாயும், கலகலப்புடனும் விளங்கிற்று. எல்லோரும் ‘கிருஷ்ணசாமி அய்யர் பலே அதிர்ஷ்டக்காரர்’ என்று சொல்லிக் கொண்டார்கள்.

ஆம், இன்னும் இருபது வருஷத்துக்கு ‘மாந்தோப்பு பங்களா’வின் வாடகையைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. அரசாங்கத்தாரே அந்த வீட்டை ‘சப்-போஸ்டாபீஸ்’ நிறுவ எடுத்துக்கொண்டு மாதம் ரூபாய் நூறு விதம் வாடகைக்கு ‘அக்ரிமெண்டு’ம் எழுதித் தந்து விட்டார்களாம். ஆனால் அதை இப்போது “மாந்தோப்புத் தபாலாபீஸ்” என்று சொல்லுகிறார்களோ என்னவோ, தெரியாது.

★○○○○★○○○○○○★○○○○○○★○○○○○★

பாரதி காட்டிய பாதை

வாழப் பிறந்தோம்!

வாழப் பிறந்தோமேயன்றி நாம் இப் புவியில் தாழப் பிறக்கவில்லை.

“வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு நேராமோ! நன்னெஞ்சே! தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவான் என்ற சாத்திரம் கேளாயோ!” என்கிறார் பாரதியார். வாழ்க்கையைப் பெற்று விட்டோம். பெற்ற வாழ்வு பெரு வாழ்வாகத் திகழப் பாடுபட வேண்டும். வாழ்வை நினைத்தபின் தாழ்வைப்பற்றி நினைப்பது நன்றன்று. “பிறந்து விட்டோம். வாழ்வை வளமுள்ளதாக்க முற்படுவோம்” என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்.

ஆதலின், வாழ்க்கையைப் பெற்றபின் தாழ்வை நினைத்தல் வாழ்வுக்கு நேராகாது. அது வாழ்வைப் பாதிக்கும். அதேபோல தாழ்வு பிறர்க்கு எண்ணக் கூடாது. பிறர் வாழ்வில் வளர்ச்சியுற்று ஓங்கக்கூடாது என்ற கெட்ட எண்ணம் இல்லாமலிருத்தல் வேண்டும். அப்படி பிறர் தாழ்வைப் பற்றி நினைப்பவர் அழிவர் என்று சாத்திரம் கூறுகிறது. ஆதலால் அனைவரும் தாம் பெற்ற வாழ்வைக் கஷ்டப்பட்டு உழைத்து உருவான தொன்றாக்க வேண்டும் என்பதே கவியரசர் சுப்ரமணிய பாரதியாரின் கருத்து.

சென்னை. எம். பி. ஷண்முகம்

★○○○○★○○○○○○★○○○○○○★○○○○○★



துரிதமாகத் தேர்வு பெறுகிறார்—

டாக்டர் ஓவல்டினுக்கு

உத்தரவு செய்ததுமுதல்!

நோய்க்குப் பிறகு தேறிவரும் காலத்தில் டாக்டர்களும் நர்ஸ்களும் ஆரோக்கியம் தரும் ஓவல்டினை சிபாரிசு செய்கின்றனர்! ஓவல்டினின் சத்துக்கள் ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமானவை என்று அவர்களுக்குத் தெரியும். அதில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய பசும்பால், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் ஆகியவை சேர்ந்து இருப்பதால் அது இன்றியமையாத உணவு பானமாகும். ஓவல்டின் லேபரட்டரிகளில், விஞ்ஞானிகள், ஓவல்டினின் பரிசுத்தத்திற்கு அதன் தயாரிப்பில் ஒவ்வொரு படியிலும் பரிசோதனை நடத்துகிறார்கள். எந்த நோயாளிக்கும் அவருடைய உணவுடன் ஓவல்டினையும் கொடுத்து வந்தால் தேர்வு துரிதப்படுவது திண்ணம்! நினைவிருக்கட்டும்— அது குடும்பத்தில் அனைவரின் ஆரோக்கியத்திற்கும் உகந்த பானம். ஓவல்டினையே கேளுங்கள்: போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.



ஓ வ ல் டி ன்

நோய்க்குப் பிறகு தேர்வைத் துரிதப்படுத்துகிறது

OV. 392

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

32. ஆஸ்துமாவுக்கு ஆசன சிகிச்சை

சென்ற அத்தியாயங்களில், ஆஸ்துமாவைப் பற்றி அலசி, ஆராய்ந்து, கடைசியில் ஆஸ்துமாவுக்குத் தகுந்தது ஆசன சிகிச்சைதான் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

ஆஸ்துமாவுக்கு மூதன் முதலில் செய்ய வேண்டியது விபரீத கரணி ஆசனம்தான் என்றாலும், மற்றும் சில ஆசனங்களையும் அதனுடன் செய்ய வேண்டும். இது தவிர, ஆஸ்துமா, மூச்சு சம்பந்தமான கோளாறு ஆனதினால் சிலவித மூச்சுப் பயிற்சிகளும் தேவை. எனவே, இந்த அத்தியாயத்தில் ஆஸ்துமாவுக்கு, வேண்டிய ஆசனங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு அடுத்த அத்தியாயத்தில் மூச்சுப் பயிற்சிகளைப் பற்றிக் கவனிப்போம்.

காலையில், காலைக் கடன்களை முடித்துவிட்டு அதாவது பல் துலக்கி, மலஜலம் கழித்து விட்டு ஆசனங்களைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். இந்தக் காலத்தில் காலைக் கடன் என்றால், எழுந்ததும் பல்லைக் கூடத் துலக்காமல் வாயைக் கூடக் கொப்பளிக்காமல், காப்பியோ, டீயோ மற்றும் அவர்களுக்கு வழக்கமான கோகோ, அல்லது ஓவல்டின் ஏதாவது ஒன்றைச் சாப்பிடுவது என்று வழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சிலர் போனால் போகிறதென்று வாயைக் கொப்பளித்துச் சாப்பிடுவார்கள். சிலர் பல்லைத் துலக்கினதும் சாப்பிடுவார்கள். அதன் பிறகுதான் வெளிக்குப் போக யோசிப்பார்கள். சிலருக்கு அதுவே வழக்கமாகிவிட்டது. அவர்கள் வழக்கமாய் அருந்தும் பானங்கள் அருந்தாவிட்டால் அவர்களுக்கு வெளிக்குப் போகும் உணர்ச்சியே ஏற்படாது. இந்த அநாகரிக வழக்கம் எப்படியோ சமீபிடை அதிகமாகிக் கொண்டு வருகின்றது. இம்மாதிரி பழக்க வழக்கங்களிருந்தால் அவைகளை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விட்டுத்தான் ஆசனம் பழக வேண்டும். 'ஏன் சார்! இது வழக்கமாய்விட்டதே, காப்பி சாப்பிடாமல் வெளிக்கு வராதே' எனலாம். பரவாயில்லை. வெளிக்கு வராவிட்டாலும் பாதகமில்லை. பல் துலக்கிவிட்டு கை, கால்களைச் சுத்தமாய் அலம்பிக் கொண்டு அதன் பிறகு ஆசனங்களைப் பழகத் துவக்கலாம். சில நாட்கள் இவ்வாறு செய்து கொண்டு வந்தால் ஆசனங்களின் பயனால் காலையில் வெளிக்குப் போகும் பழக்கம் உண்டாகும். அதுவரை ஆசனம் செய்த பின்பும் வெளிக்குப் போகலாம். இடையில் வந்தாலும் போய் வந்து பிறகு ஆசனத்தை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து ஆரம்பிக்கலாம்.

விபரீத கரணி செய்யும் விதம் இரண்டாவது பாகம் இருபத்தொன்பதாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. முதலில் ஒரு நிமிஷம் மூன்று தடவை செய்யலாம். பிறகு இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் இரண்டு நிமிஷம் மூன்று தடவைகள் செய்யலாம். இவ்வாறு வாரத்துக்கு ஒரு நிமிஷமோ, இரண்டு நிமிஷங்களோ அதிகமாக்கிக் கொண்டு வந்து ஒரே தடவையிலோ அல்லது இரண்டு மூன்று தடவைகளிலோ இருபது நிமிஷங்கள் வரை செய்யப் பழகிக் கொண்டால் போதும். அதிகமானால் அரை மணிக்கு மேல் போகக் கூடாது. ஒவ்வொரு தடவைக்கும் மத்தியில் முதுகுக் கடியில் இருக்கும் படுக்கைக் கட்டை எடுத்து அவரவர் தேக நிலை வயதுக்குத் தக்கபடி ஒரு நிமிஷம் முதல் மூன்று நான்கு நிமிஷங்கள் வரை ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். ஓய்வெடுத்துக் கொள்ளும்போது நன்கு விரிப்பில் கால் கைகளை நீட்டிப் படுத்து, கண் மூடி உடலைத் தளரவிட வேண்டும். அச்சமயம்தான் மொழித் துதி நுரை ஈரலுக்கு அளிக்கலாம். அதாவது நுரை ஈரல்களை மனத்தால் நினைத்து, அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டே "நுரை ஈரல்களே உங்களைச் சேர்ந்த பீடை இதோ ஒழிந்து விட்டது; நீங்கள் ஆரோக்கிய மடைகிறீர்கள்; பிராண வாயு தாராளமாய் உங்களிடையே பரவுவதாக! உங்களுக்குச் சக்தி அளிக்கின்றேன்; நீங்கள் பலம் பெறுவீர்களாக!" என்று பன்முறை சொல்லிப் பழகலாம்.

விபரீதகரணி ஆசனம் செய்யும்போதும் இருதயத்திலிருந்து வரும் ரத்தம் நுரை ஈரல்களுக்கு நிறையப் பாய்வதாகவும், அங்குள்ள காற்றுக் குழாய்களின் இறுக்கம் விலகி விரிவதாகவும், ஆரோக்கியம் அடைவதாகவும் நினைத்துக்கொள்ள வேண்டும். இப்படி நினைப்பதால் சாதாரணமாய் குணம் ஏற்படுவதைவிட சீக்கிரம் குணமேற்படும்.

விபரீதகரணியை வேண்டிய நேரம் செய்து விட்டுப் பிறகு சாந்தியாசனம் செய்ய வேண்டும். சாந்தி ஆசனத்தைப் பற்றி முதல் பாகம் 53, 56, 57 வது அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின் நாடி சுத்தி செய்ய வேண்டும். அதன் விவரம் முதல் பாகம் 58, 59 வது அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

விபரீத கரணி ஆரம்பித்த ஒரு வாரம் பொறுத்தோ, இரண்டு வாரங்கள் பொறுத்தோ



"போட்டோ நன்றாகவே எடுத்திருக்கிறீர்கள். ஆனால் என்னை இந்தப் போட்டோவில் பார்த்தால் பத்து வயது அதிகமாகவே மதிப்பிடத் தோன்றுகிறது!"

"ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. இன்னும் பத்து வருஷங்கள் கழித்து ஒரு தடவை நீங்கள் போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை அல்லவா?"

சர்வாங்காசனத்தை ஆரம்பிக்கலாம். அவரவர்களின் பலம், ஆஸ்துமா நிலை, வயது அனுசரித்து சர்வாங்காசனத்தைச் சீக்கிரமாகவோ தாமதமாகவோ துவக்கலாம். சர்வாங்காசனத்தைப் பற்றி முதல் பாகத்தில் பல அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் 34 வது அத்தியாயத்தில் செய்யும் விதம் இருக்கிறது. சர்வாங்காசனத்தை அதிக நேரம் செய்ய வந்த பின் அதாவது இருபது அல்லது முப்பது நிமிஷங்கள் வரை செய்ய வந்தால், விபரீதகரணி செய்யும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம். ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் விபரீதகரணி செய்தால் போதும். சர்வாங்காசனத்துடன் பத்மாசனமும் செய்ய வேண்டியது அவசியம். பத்மாசனம் செய்ய வேண்டிய முறை முதல் பாகம் 63-வது அத்தியாயத்தில் விவரித்திருக்கிறது.

இவைகளை யெல்லாம் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதங்களோ செய்தபின் சிரசாசனமும் செய்ய வேண்டிய தவசியம். சிரசாசனம் செய்யும் விதம் இரண்டாவது பாகம் 5-வது அத்தியாயத்தி லுள்ளது. இதை அரை அல்லது ஒரு நிமிஷம் ஆரம்பித்துப் பதினைந்து இருபது நிமிஷங்கள் வரை இரண்டு மூன்று தடவைகள் செய்யலாம்.

இதுதான் மிக முக்கியமானது. இதைத் தவிர இந்த ஆசனங்களுடன் புஜங்காசனம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம் உட்டியாண முதலியவைகளும் செய்யலாம். இவைகளைச் செய்யப் போதிய திடமும் வயதுமிருந்து செய்தால் ஆஸ்துமா இன்னமும் வெகு விரைவில் குணமாகும்.

ஆஸ்துமாவுக்கு இத்தனை ஆசனங்கள் செய்ய வேண்டுமானாலும் விபரீதகரணி ஆசனம் மட்டுமே இதற்குப் போதுமானதாய் இருக்கிறது. ஒரு அம்மாள் வயது நாற்பது. மிகப் பலவீனம். நல்ல ரத்தம் கிடையாது. பல தடவை ஆஸ்துமா வந்து வந்து போயிற்று. ஆசனம் செய்யலாமென்றால் உடலில் சக்தி யில்லையே என்று அவர்களுக்குப் பயம். இதைத் தவிர வயிற்றில் பெரிய ஆப்பரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இவர்களுக்கு வேறு ஆசனங்கள் செய்ய முடியாது; செய்யவும் கூடாது. அவர்களுக்கு விபரீதகரணி மட்டும் சொல்லித் தரப்பட்டது. சில வாரங்களில் ஐந்து நிமிஷங்கள் வீதம் மூன்று தடவைகள் மட்டும்தான் செய்தார்கள். கூட சாந்தியாசனமும், நாடி சுத்தியும் காலை மாலை இரு வேளையும் செய்து வந்தார்கள். அவர்களுக்கு வர வர மூச்சுத் திணறுவது நின்று விட்டது. முகம் தேஜஸ் அடைய ஆரம்பித்தது. உடலில் பலமும் உண்டாகி விட்டது. ஆஸ்துமாவும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. பிறர் உதவியுடன் சதா இருந்து வந்த அந்த அம்மாள் வீட்டு வேலைகளையும் அவர்களாகவே செய்து கொள்ளுகிறார்கள். இப்பொழுது அவர் வேறு ஆசனங்களைக்கூட செய்யவில்லை. விபரீதகரணியும், நாடி சுத்தியும் மட்டும்தான் செய்து வருகிறார்கள்.

மற்றொரு நண்பர், வயது அறுபது. அவர் வாழ் நாளில் பாதி ஆஸ்துமாவால் அவதிப்பட்டவர்; சிறிது மழை பனி கூட தாங்காது. பனிகாலம் பூராவும் சித்திரவதைபோல கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார். அவருக்குச் சர்வாங்காசனம் மட்டும் சொல்லித் தந்தேன். அதை மட்டும் அரை மணி நேரம் செய்வார். அவர் ஆரம்பித்த அடுத்த பனி காலத்துக்குள், அதாவது மூன்று நான்கு மாதங்களுக்குள் ஆஸ்துமா போய் விட்டது; பனிக்காலத்தில் வரவேண்டிய ஆஸ்துமாவெனும் பிரம்ம ராட்சதன் வரவே இல்லை. அவர் வேறு ஒரு ஆசனம் கூடச் செய்யவில்லை. எந்தவித மூச்சுப் பயிற்சிகளையும் செய்யவில்லை. பூரண ஆரோக்கியத்துடன், வாலிபர்களுக்கிருக்கும் சுறு சுறுப்புடன் வேலைகளைக் கவனிக்கிறார்.

எனவே, ஆஸ்துமாவுக்கு விபரீத கரணியோ, அல்லது சர்வாங்காசனம் மட்டும் கூடப் போதுமானது. ஆனால் மற்றவைகளையும் செய்தால் குணம் இன்னும் சீக்கிரம் காணலாம். சில மூச்சுப் பழக்கங்களிருக்கின்றன. அவைகள், திணறிக் கொண்டிருக்கும் ஆஸ்துமாக்காரர்களுக்கு உடனடியாக விடுதலை யளிக்கும்.

ஆஸ்துமாக்காரர்களுக்குச் சாதாரணமாய் ரத்தம் சுத்தமாய் இருக்காது. ரத்தம் சுத்தமாய் இல்லாததினால்தான் அநேகமாய் ஆஸ்துமாவும் வருவது வழக்கம். சிலருக்குச் சொறி, சிரங்குகள் போன்ற வியாதிகள் ஏற்படும்.

விபரீதகரணி செய்தால் ஆஸ்துமா மட்டும் போக்கடிப்பதில்லை. அதனால் உண்டாகும் இருதய நோய்கள் மூத்திரக்காய் கோளாறு, சொறி, சிரங்கு சகலமும் குணமாய் விடுகிறது. அட்ரினேலின் மருந்தும், பட்யூடரியின் மருந்தும் என்ன குணம் செய்யுமோ அதைவிட இது ஸ்திரதர குணம் செய்வதுடன் அதனால் செய்ய முடியாத மற்ற நோய்களையும் குணம் செய்விக்கிறது. (தொடரும்)

★○○○✱★✱○○○✱★✱○○○✱★✱○○○ ✱★✱ ○○○ ✱★✱○○○✱★✱○○○✱★✱○○○★



மயிலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீ கோபாலசாமி ஐயரின் புத்திரியும் ரஸிக ரஞ்சனி சபா காரியதரிசி ஸ்ரீ என். நடேசன் அவர்களின் மருமானுமான சௌ. கல்பகத்துக்கும் ஸ்ரீ அனந்தகிருஷ்ண ஐயர் அவர்களின் குமாரன் ஸ்ரீ ராமசாமிக்கும் சென்ற மாதம் 28உ மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு உறவினர்களும் நண்பர்களும் பிரமுகர்களும் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். மாலையில் ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரியின் சங்கீதக் கச்சேரி நிகழ்ந்தது. வாழ்க மணமக்கள்!


★○○○✱★✱○○○✱★✱○○○✱★✱○○○★

அஜீரணத் தொல்லை அகன்றது

பிணியுற்றோருக்கு ஒரு பெரிய செய்தி

உங்களுக்கும் பிடித்த பண்டங்களைச் சாப்பிடும் போதெல்லாம் அஜீரணத்தினால், நீங்கள் அவஸ்தைப்படுகிறீர்களா ? மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உதவியைக் கொண்டு ருசிகரமான கறிகள், சட்னிகள், சாலெண்டுகள், மற்றும் பலபதார்த்தங்கள் இவற்றுடன் கூடிய நல்ல சாப்பாட்டை மீண்டும் சாப்பிட்டு மகிழலாம் என்று ஆயிரக்கணக்கான பேர் உணர்ந்து வருகின்றனர். இந்த ஆச்சரியகரமான குணமும் சுகமளிக்குமான அஜீரண நோய்களையும், அசௌகரியங்களையும் மாத்திரம்தான் குணப்படுத்துகிறது என்பதில்லை, அஜீரணத்தை உண்டாக்கக்கூடிய காரணங்களையும் தடுத்து தேக நிலைமையை பாதுகாத்து உதவவும் செய்கிறது. உலகமுழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்கள் இஷ்டம் போல எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சாப்பிடக்கூடியவாறு அவர்களது அஜீரணத்தொல்லையை நீக்கி உதவியளித்து மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் அவர்களுக்கு ஒரு புது வாழ்வை அளித்திருக்கிறது.

ஞாபகமிருக்கட்டும். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உலகப் பிரசித்திபெற்றது. எனவே அநேகம் பேர் அதைக் காப்பியடிக்கப் பார்க்கிறார்கள். "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்கிற கையொப்பம் இருக்கிறதா என்று பார்த்து உண்மையான சரக்கையே வாங்குங்கள்.



மக்ளீன் பிராண்ட்
ஸ்டமக் பவுடர்

வியாபார விவரங்களுக்கு :

ஜே. எல். மார்ளன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி 6327, பம்பாய் 26 ; தபால் பெட்டி 387, கல்கத்தா

தபால் பெட்டி 1370, மதராஸ்

ஐயமுண்டு




“இந்தப் பூவுலகில் எப்பொழுது நன்மை நலிந்து, தீமை மலிந்து, உண்மை மடிந்து, பொய்மை பெருகி, நிலை தவறுகிறதோ அப்போதெல்லாம் நான் தோன்றி நல்லவர்களைக் காப்பாற்றி, தீயவர்களைக் கொல்லுவேன். இதற்காகவே பூமியிலே பிறக்கிறேன்” என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் கூறுகிறார் அதாவது தெய்வம் மனித உருவிலே தோன்றும் என்பது நம் பெரியோர்களின் மணி வாக்கு.

மக்கள் சமுதாயத்திலும் மகான்கள் பலர் தோன்றி அறிவுச் சுடர் கொளுத்தி, அருள் வழி காட்டிப் போந்தனர்.

பாரதத் தாய் அடிமைத் தளையில் உழன்று, “தாழ்வுற்று வறுமை எய்தி, விடுதலை தவறக் கெட்டு, பாழ்பட்டு நின்ற......” நாளிலே அவளை வாழ்விக்க காந்தி மகான் வந்தார்.

மானம் இழந்து, மதி இழந்து, சுதந்திர நினைவு இழந்து, அடிமை மோகத்தில் ஆழ்ந்து, நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி நீச வாழ்வு வாழ்ந்த தமிழனை உய்வித்து, உயர்த்தி, உணர் ஊட்டி, உரம் ஊட்டி, அவனை “தான் தமிழன்” என்று தலை நிமிரச் செய்தவர் பாரதி. நீறு பூத்த நெருப்பிலிருந்து காற்றிலே கனன்று எழுந்தவர் பாரதி. மங்கி நின்ற மான வுணர்ச்சி, தேச பக்தி என்னும் பெருங்காற்றில் கனிய, அதனின்று தோன்றிய அழற் கொழுந்து பாரதி. தேச பக்திக் குன்றில் ஏறி நின்று, தூங்கி வழிந்த தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பி, உலகெலாம் ஒலி பரப்பும் குரலிலே விடுதலைக் கவி பாடியவர் பாரதி. திக்குத் தெரியாது தவித்து நின்ற தமிழனுக்குத் தன் அறிவுச் சுடரைக் கைவிளக்காக்கித் தந்து, முட்கள் நிரம்பி நின்ற அவன் வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுக் கொடுத்து அந்தப் பாதையில் செவ்வனே நடக்கச் சிறிய கலங்கரை விளக்கம் போலத் திகழ்பவர் பாரதி. அவர் வாழ்விலே, அவர் அறிவிலே, சொல்லிலே, செயலிலே, எழுத்திலே, நமக்குப் பொறித்துத் தந்த பொன் மொழிகளிலே, நமக்கு அவர் வகுத்த பாதை பரந்து விரிந்து நீண்டு கிடக்கிறது.

வாழ்வென்பது விளையாட்டல்ல. அதில் ஒளி காண வேண்டின் அதைச் சீர்பெறச் செவ்வனே நடத்த வேண்டும். அதற்கு அறிவோர் புகன்ற அறவுரைகள் அடிப்படையாக அமைய வேண்டும். தளரா ஊக்கம், குன்றாத உற்சாகம், இடைவிடாத முயற்சி, குறைவிலா மனோ தைரியம், மலைபோல் உயர்ந்த தன்னம்பிக்கை இவை அறிஞர் பாரதி



பயமில்லை

✧ அ. வெ. பத்மா ✧

நமக்கு நடத்திக் காட்டிய வாழ்வின் சாரம். அவர் எழுத்தில் ஒவ்வொரு வரியும் இப்பண்புகளை அள்ளி அள்ளி வீசுகின்றன.

கவியரசர் பாரதியின் கவிதைகளை எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்தும் ஒருவன் படிப்பானுனல் அவன் அப்பொழுதே புது மனிதனுய் விடுவானென்பது திண்ணம்.

"ஊக்கமும் உள் வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக் கோர் கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ?"

என்று கேட்கிருர் பாரதி. பாரதியே ஊக்கத்தின் உருவம். நம் நாடு ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும் என்பது பாரதியின் ஆசை. ஒரு விரத மெடுத்தால் என்ன வந்தாலும் அதைக் கலைக்கக் கூடாது. "ஆரம்ப சூரத்தனம்" பாரதிக்கு அடியோடு பிடிக்காது.

"நாம் எடுத்த விரதத்தை நிறைவேற்ற வேண்டும். விரத மிழந்தார்க்கு மானமில்லை. விரதத்தை நேரே பரிபாலனம் பண்ணினுல் சக்தி நிச்சயம்" இது பாரதியார் கூற்று. எடுத்த காரியத்தில் எக்காரணம் கொண்டும் கைவிடாத பெருக்கம் வேண்டும். தொடங்கிய தொழிலைக் கைவிடுவோன் மனத்திட்பம் இல்லாதவன்.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்"

"பட்டினி லாடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்"

என்று இப்படி யெல்லாம் பாரதி காட்டின் தொழில் வளத்தைப் பற்றிக் கனவு காண்பவர். "இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே, யந்திரங்கள் வகுத்திடுவீரே" என்று நம்மைப் பணிக்கும் குரலில் எத்தனை, உற்சாகம் ஊக்கம் தொனிக்கிறது. இம் மணிக் குரலைக் கேட்டபின் ஊக்கத்திற்குக் குறைவேது!

"சமூகம் தன் வயிற்றினுல் இயங்குகிறது" என்பது ஒரு உண்மை. ஒரு சமூகத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின் முதலில் அங்கு பசிப்பிணி ஒழிய வேண்டும். இதற்குப் பண்டப் பெருக்கம் தேவை. அதற்கு உழைப்பு தேவை. உழைப்பவன் கீழோன்; உழைப்பின் பலனை அனுபவிப்பவன் மேலோன் என்ற எண்ணம் ஒரு சமூகத்தில் உண்டாகுமானுல் பின்பு அதற்கு மீள வழி கிடையாது. உழைக்காமல் கொழுக்கின்ற வீணரை உலகில் இருக்கத் தகுதியற்றவராகக் கருதுகிருர் பாரதி. உழைப்பின் மேன்மையைக் கவிதையில் இசைக்கிருர்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே"

என்று மக்களைப் பணிப்பவர், சிறு குழந்தை யுள்ளத்திலேயே உழைப்பின் பெருமையை எவ்வளவு அழகாகப் புகுத்தி விடுகிருர் பாருங்கள்:

"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!" என்று சோம்பலை முளையிலேயே கிள்ளி எறிகிருர். "அறிவுத் திறமையாலும், அரு முயற்சியாலும், பெருஞ் செல்வம் திரட்டப் படுகிறது" என்று சொல்லும் பாரதி, "புத்தி மாத்திரம் இருந்தால் போதாது, அதைக் கொண்டு சோம்பல் இல்லாமல் விடா முயற்சியுடன் உழைக்க வேண்டும்" என்று கூறுகிருர். விடா முயற்சியும், உழைப்பும் பாரதியின் மதம். அவர் ஒருநாளும் சோம்பி நின்றதுமில்லை; சோம்பலை விரும்பியதுமில்லை. உழைப்பே அவர் தாரக மந்திரம். "இடையின்றித் தொழில் புரிதல் உலகினிடைப் பொருட் கெல்லாம் இயற்கை" என்றெண்ணும் பாரதி மனிதன் மட்டும் உழைக்காமல் உண்பதை விரும்புவாரா! 'ஒய்தலொழிந்து' 'நாளெல்லாம் வினை செய்'யும்படி நம்மைத் தூண்டுகிருர்.

"தொண்டரேன் றுரை வகுப் பில்லை—தொழிற்
சோம்பலைப் போலிழி வில்லை"

என்று சோம்பலின் இழிவையும், உழைப்பின் உயர்வையும் பற்றிப் பேசுகிருர் பாரதி.

ஆனல் உழைக்கும் போது விருப்பு





வெறுப்பற்று உழைக்க வேண்டும். இது பாரதியின் கொள்கை. "உழைப்பு எப்போதும் உண்டு. தெய்வமே சரணென் றிருப்பார் உள்ளத்தில் தாபமில்லாமல் உழைப்பார்கள். ஆனபடியால், அவர்களுடைய செய்கைக்கு வலிமை அதிகம், வேகம் அதிகம், உயர்வு அதிகம், அழகு அதிகம், பயன் அதிகம் என்பது சொல்லாமலே விளங்கும். உழைப்பு எப்போதும் உண்டு. தெய்வத்தின் தலையிலே சுமையைப் போட்டு விட்டுக் கவலை, பயம் என்ற இரண்டு நாய்களுக்கும் உள்ளத்தை இரையாக்காமல் உழைத்தல் வேண்டும்." இதுதான் கவியரசர் சுப்பிரமணிய பாரதியின் மதம்; வேதம் எல்லாம்.


உழைப்பு சிறப்புப் பெற வேண்டுமானால் அதனுடன் விடாமுயற்சியும் சேரவேண்டும். ஒன்றை ஆரம்பித்த பின், சிறு தடங்கல் ஏற்பட்டகாலத்து, அதில் மேலும் முயன்று, வெற்றி காண முடியாதவன் கோழை. அவனுக்கு இவ்வுலகில் இடமில்லை. முயற்சியின்றி ஒரு காரியமும் நடவாது. ஆண்மைக்கு அறிகுறி முயற்சி. முயற்சி ஒன்றால்தான் மனிதன் முன்னேறி வாழ முடியும். இது பாரதியின் கருத்தில் பொதிந்து கிடக்கிறது.

"வியாபாரத்தில், ஒருவனுக்கு லாபம் கிடைக்க வேண்டுமானால், ஒரே படியாக சூர்ய மண்டலத்துக்குத் தாவிப் போக முடியாது. பழைய வழக்கப்படி மெதுவாக ஒவ்வோர் அடியாகத்தான் போக வேண்டும். 'மெதுவாகச் செல்வோனே குறிப்படைவான்' என்ற கருத்து படிப்படியாக முயல்வதன் பெருமையைக் கூறுகிறது. "எந்தக் காரியத்திலும் ஒரே முறையில் பெரும் வெற்றி கிடைக்காது. சிறிது சிறிதாகத்தான் முன்னேற வேண்டும். படீலென்று ஏறினால், படீலென்று விழ நேரிடும்" என்பது கவிஞர் வாக்கு.

முடியாத காரியத்தைத் தெரியாமல் துவக்கி விட்டாலும் அதை நடுவில் விட்டுவிடலாகாது. நமக்கு முடியாத காரியத்தைக் கைவிடலாகாது. நம்மைக் காட்டிலும் திறமையுள்ள ஒருவன் கையிலே கொடுத்து அவன் கீழே சிற்றாளாக இருந்து தொழில் பழகிக்கொண்டு பிறகு நாமாகச் செய்ய வேண்டும். "தோல்வியில் கலங்கேல்" என்பது பாரதீயம்.

பாரதி என்றதுமே துணிவு, வீரம், அச்சமின்மை, தைரியம், உறுதி என்ற பண்புகள் மனத்திலே எழுகின்றன. பாரதியே வீரத்தின் வடிவு. "கொஞ்சங்கூட சதையே இல்லாத மார்பை, பட்டாளத்துச் சிப்பாயைப் போல முன்னே தள்ளித் தலை நிமிர்த்து பாடிக்கொண்டே நடப்பார் பாரதியார்" என்று அவரிடம் நெருங்கிப் பழகியவர்கள் பாரதியின் தோற்றத்தை வருணிக்கிறார்கள். உடலிலே இவ்வளவு பெருமையும் வீரமும் என்றால் உள்ளம் எவ்வளவு திண்ணியதாக இருக்க வேண்டும்.

அச்சம் என்ற சொல்லே அவர் அகராதியில் கிடையாது. அஞ்சுபவரைக் கண்டால் அருவருப்பு எல்லை மீறி விடும். இப்படிப் பட்டவர்களும் உயிர் வாழ்கிறார்களே என்று ஏங்கும் அவர் மனம். "சீ! நாயும் பிழைக்கும் இப் பிழைப்பு!" என்று வெறுப்பார். அன்று அடிமையாகி நின்று எதற்கும் அஞ்சியஞ்சி



வாழ வழி யறியாது வாடி நின்ற தமிழ் நாட்டை வீறுகொண்டெழச் செய்தது அவர் பாடிய வீரக் கவிகள். அவர் மனோ தைரியத்தின் மாண்புறு சின்னம், அச்சத்தின் வாய்ப்பட்ட தமிழரைப் பார்த்து இரங்குகிறார் பாரதி. "அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும், உச்சத்திற் கொண்டாரடீ" என்றும் "அஞ்சி யஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்றும் அருவருக்கிறார். "செம்புக்கும், கொம்புக்கும் அஞ்சிச் சிற்றடிமைப் படலாமோ!" என்று கேட்கிறார்.

சோர்ந்து நின்ற நாட்டுக்குத் துணிவூட்ட வந்த பாரதி தன் உபதேசத்தைச் சிறு குழந்தையிடமே ஆரம்பித்து விடுகிறார்.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"

என்று சிறுவர்களைப் பார்த்துப் பாடுகிறார். "மோதி மிதித்து விடு!" என்ற வரியில்தான் எவ்வளவு துணிச்சல்!

குழந்தைக்கு உபதேசமாயிற்று. இனி பெரியோருக்கு என்ன கூறுகிறார்! "அச்சம் தவிர்" "ஆண்மை தவறேல்" என்று முழங்குகிறார்.

"தைரியம் என்ற சொல்லுக்குத் துணிவுடைமை, அறிவுடைமை என்று பொருள். எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடையவன் கோழை, அறிவற்றவன். கற்றவனாயினும் அவன் அறிவற்றவன். விபத்துக்கள் வரும்போது எவனொருவன் நடுங்காது துணிவுடன் அவற்றை வெல்லாம் போக்க முயற்சி செய்கிறானோ அவனே ஞானி." "இடுக்கண் வருங்கால் நகுக," என்ற திருக்குறள் கருத்தும் இதுவே யல்லவா!


"நாம் காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்; அதுவரை நாம் சாகமாட்டோம். நமது இச்சைகள், நம்முடைய தருமங்கள் நிறைவேறும் வரை நமக்கு மரணமில்லை." என்ன தன்னம்பிக்கை! "உன்னிடத்திலே நீ எல்லையற்ற திடமும் நம்பிக்கையும் கொண்டிரு", என்பது அவர் கருத்துக் கிசைந்தது. "இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம். ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்" என்று கூறும்போது எவ்வளவு உறுதியும், அசைக்க முடியாத தன்னம்பிக்கையும் பிறக்கின்றன!

ஆனால் பாரதியின் தன்னம்பிக்கை வீண் கர்வமன்று. தெய்வ பக்தியிலும், தருமத்திலும், வேரூன்றிய நம்பிக்கை. இக்கருத்துக்குக் காலான் மறவன் கதையே சாட்சி.

அலைபட்ட கடலுக்கு மேலே—சக்தி
அருளென்னும் தோணியி னாலே
தொலைவிட்டுக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு
ஜயமுண்டு பயமில்லை மனமே!

என்ற தெய்வ நம்பிக்கை வாயிலாகப் பிறந்த தன்னம்பிக்கை! பாரதியின் பெயர் சொன்னால் பண்புறு வாழ்வு நமதாகும். பாரதி காட்டிய பண்புறு பாதையில் நின்று தமிழ் நாட்டை மேம்படச் செய்வோமாக!

இந்த
விதம்
துவைப்
பாய்



தினம் வெண்மையாய் உடுப்பாய்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்

பெற்ற மனம்

எஸ். வி. நாதன்

துரைசாமி சர்க்கஸுக்குப் போய்விட்டுத் திரும்பி இரவு இரண்டு மணிக்கு வந்து கதவை இடித்தான். ரேழித் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த அவன் தகப்பனார் வாசுதேவன் கதவைத் திறந்து விட்டு, "எங்கேடா, சுற்றி விட்டு இவ்வளவு நாழி கழித்து வருகிறாய்? இப்படிக் கண் விழித்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? காலா காலத்தில் வீட்டுக்கு வந்து படுத்துக் கொள்ளக் கூடாதா? இரண்டு மணி வரையில் அப்படி என்ன தலை போகிற வேலையோ?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார்.

துரைசாமிக்குத் தன் தந்தை கேட்டது ஒன்றும் நினைவில் இல்லை. அவன் மனக் கண் முன்பு தான் சர்க்கஸில் பார்த்த அந்த வெள்ளைக் காரியே வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். கையில் குடையைச் சுழற்றிக் கொண்டு அந்தரமான கயிற்றில் அவள் ஒய்யாரமாக நடந்த காட்சியை அவனால் மறக்கவே முடியவில்லை. திடீரென்று அவனுக்கு அவன் தந்தை கேட்ட கேள்வி நினைவுக்கு வந்தது; கோபம் எல்லை மீறி விட்டது.

"எனக்கு ஆயிரம் வேலை யிருக்கும்! அதைப் பற்றி உங்களுக் கென்ன? அநாவசியமாக என் விஷயங்களில் தலையிடாதீர்கள் என்று எத்தனை தடவை சொல்லுவது?" என்று உறுமிக் கொண்டே மாடிக்குப் போய் விட்டான் துரைசாமி.

"எனக்கென்னவாமே! துரைவாள் விஷயங்களில் நான் தலையிடக் கூடாதாமே!" என்று முணு முணுத்துக் கொண்டே படுத்துக் கொண்டார் வாசுதேவன்.

தன் தகப்பனாருக்கு வயதாகி விட்டது. ஆகவே, அவர் எந்த விஷயத்திலும் கலந்து கொள்ளவோ, கவலைப்படவோ கூடாது என்பது துரைசாமியின் தீர்ந்த கருத்து. அறுபத்தைந்து வயதாகி விட்ட அவர் எந்த விஷயத்திலும் கலந்து கொள்ளத் தகுதியற்றவர் என்று எண்ணினான் அவன். வேளா வேளைக்குச் சாப்பிட்டு விட்டு 'ராமா, கிருஷ்ணா' வென்று வாயைத் திறக்காமல் எஞ்சியுள்ள நாட்களை எண்ணிக் கொண்டு காலத்தைத் தள்ள வேண்டும் எனக் கருதினான்.

ஆனால் மகனுடைய கருத்தை வாசுதேவனால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. தன்னுடைய விவேகம் வயசாகிவிட்ட காரணத்தினால் எள்ளளவும் குறைந்து விடவில்லை என்று அவர் உறுதியாக நம்பினார். அத்துடன் அவருடைய இயற்கையான சுபாவம் அவரை ஒரு வேலையும் செய்யாமல், ஒரு பேச்சும் பேசாமல் சும்மா யிருக்க விடவில்லை. மகன் எவ்வளவு அலட்சியப் படுத்தித் தடையுத்தரவு போட்ட போதிலும் அதை ஒன்றும் லட்சியம் செய்யாமல் எல்லா விஷயங்களிலும் தலை யிட்டுக் கொண்டுதான் இருந்து வந்தார்.

துரைசாமி எதாகிலும் சாமான் வாங்கிக் கொண்டு வருவான். "ஏண்டா, என்ன விலை கொடுத்தாய்?" என்று கேட்டுக் கொண்டு வந்து விடுவார். சாமானுடைய தரத்தை ஆராயப் புகுந்து விடுவார். அவர் கேள்விக்குப் பெரும்பாலும் பதில் சொல்லாமல் அப்பால் போய் விடுவான் துரைசாமி, முகத்தைச் சுளித்துக் கொண்டு. அப்படியே விலையைச் சொல்லி விட்டாலும் வாசுதேவன் சாமானின் தரத்தையும் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்து விட்டு "சாமான் வாங்கினால் பார்த்து வாங்க வேண்டாமா? இவ்வளவு திராபை சரக்குக்கு அதிக விலை கொடுத்து ஏமாந்து விட்டாயே! இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கே பொறுப்பும் கிடையாது, சாமர்த்தியமும் போதாது! சுத்த உதவாக்கரைகள்" என்று ஏதாவது கூறுவார்.


இதைப் பாராட்டாமல் பேசாது போய் விடலாம் துரைசாமி. ஆனால் அப்படிச் செய்யமாட்டான் அவன். "உங்களைத்தான் இதிலெல்லாம் தலையிட வேண்டாம் என்று சொல்லி யிருக்கிறேனே இல்லையா? என் சாமர்த்தியத்தைப் பற்றி நீங்கள் ஒன்றும் கூற வேண்டாம்" என்று கண்டிப்பான்!

"டேய்! உன்னை வளர்த்து மூன்றுக்குக் கொண்டு வந்ததற்குப் பரிசா இது?" என்று வருத்தப்படுவார் துரைசாமியின் தந்தை.

துரைசாமியின் நண்பனொருவன் ஒரு நாள் அவனைப் பார்க்க வந்தான். அப்போது துரைசாமி உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வாசலிலிருந்த வாசுதேவன் அந்த நண்பனை வரவேற்று அவனோடு பேசிக் கொண்டிருந்தார். அவனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம் எவ்வளவு சொத்திருக்கிறது. சம்பளம் எவ்வளவு, குழந்தைகள் எத்தனை? முதலிய விவரங்களை யெல்லாம் உற்சாகமாக விசாரிக்க ஆரம்பித்தார். அவனும் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு வந்தான். அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டே உள்ளே யிருந்து வந்த துரைசாமிக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. தன் தந்தை ரொம்ப அநாகரிகமான கேள்விகளை யெல்லாம் கேட்டுத் தன் கௌரவத்தைக் குறைத்து விட்டார் என்பது தான் அவன் ஆத்திரத்துக்குக் காரணம்.

அந்த நண்பன் கூட வாசுதேவன் கேட்ட கேள்விகளைத் தவறாகக் கருதவில்லை. ஆயினும் துரைசாமியின் கண்களுக்குத்தந்தையின் காரியம் மிக்க பிரம்மாண்டமான தவறாகப் பட்டது. அந்த நண்பன் போகு மட்டும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தான். அவன் போனதும் 'பிலு பிலு' வென்று பிடித்துக் கொண்டான் தந்தையை.

"உங்களுக்கு எத்தனைதரம் தான் நான் சொல்லுவது? 'தொண தொண' வென்று அநாவசியமான அநாகரிகக் கேள்விகளை யெல்லாம் கேட்டுக் கௌரவம் இல்லாமல் நடந்து



கொண்டு விட்டீர்களே? உங்களால் என் மானம் போகிறது; மரியாதை போகிறது. என்னைப் பற்றி என்ன நினைப்பான் என் நண்பன்?'' என்று பொரிந்து தள்ளி விட்டான்.

"என்னுடைய அறுபத்தைந்தாவது வயதில் இனிமேல்தான் நான் நாகரிகம், கௌரவம் எல்லாம் உன்னிடமிருந்து தெரிந்து கொள்ளணும்! உன் சிநேகிதனை என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ள வில்லையே! நீ வரும் வரையில் அவன் சும்மா உட்கார்ந்திருக்கணுமே, ஏதாவது பேசிக் கொண்டிருப்போம் என்பதற்காகத்தான் அவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். இது ஒரு தப்பா?'' என்று கேட்டு விட்டு வேதனையுடன் பெருமூச்சு விட்டார் பெரியவர்.

குடும்பச் செலவுகளைப் பற்றியும் அடிக்கடி புகார் செய்வார் வாசுதேவன். "ஏன் இவ்வளவு செலவழிக்கிறாய், மாதம் 'நாலு காசாவது' மீத்த வேண்டாமா? அந்தச் சாமானை எதற்காக வாங்கினாய்? இந்தச் சாமானுக்கு ஏன் இவ்வளவு கொடுத்தாய்? சிக்கனமாயிருக்க வேண்டாமா?'' என்று அடிக்கொரு தடவை கண்டித்துக் கொண்டிருப்பார்.

துரைசாமி சரியான பதில் சொல்லுவதில்லை யென்பதையோ எரிந்து விழுகிறான் என்பதையோ அவர் பொருட்படுத்துவதில்லை. குடும்ப விஷயங்களிலும் அவன் சொந்த விஷயங்களிலும் தலையிட்டு யோசனை சொல்ல வேண்டியது தமது கடமை, உரிமை என்று அவர் உறுதியாக நம்பினார்.

துரைசாமி வழக்கம் போல் அவருடைய பேச்சைக் காதில் வாங்காமல் "வேளைக்குச் சரியாகச் சாப்பிட்டு விட்டு ஹாய்யாக ஓய்வெடுத்துக் கொள்வதை விட்டு இந்த வீண் பேரங்களில் எல்லாம் ஏன் ஈடுபடுகிறீர்கள்? உங்களுக்கோ வயசாகி விட்டது! 'கிருஷ்ணா ராமா' என்று போகிற வழிக்குப் புண்ணியத்தைத் தேடுவதை விட்டுப் பிறத்தியார் கவலைகளை யெல்லாம் தலையிட்டுக் கொண்டு ஏன் அவஸ்தைப்படுகிறீர்கள்?'' என்ற தன் வழக்கமான பல்லவியைச் சிறிது மாற்றிப் பாடிவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

* * *

வாசுதேவன் இரண்டு வருஷங்களுக்கு முன் வரையில் கிராமத்திலேயே வாசம் செய்து கொண்டிருந்தார். துரைசாமி வெளியூரில் வேலையாயிருந்தான். இரண்டு குடும்பமாயிருந்தால் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தால் இரண்டு வருஷங்களுக்கு முன் தன் பிள்ளையிடம் வந்து விட்டார் அவர். துரைசாமிதான் அவரை வரச் சொல்லி வற்புறுத்தினான். ஆயினும் வந்த சில நாட்களிலேயே 'வீண் வம்பை விலை கொடுத்து வாங்கி விட்டோமோ' என்ற சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது அவனுக்கு. இத்தனை நாட்களாகத் தனிக் காட்டு ராஜாவாக இருந்து விட்ட அவனுக்குத் தகப்பனாரின் யோசனைகளும் குறுக்கீடுகளும் பிடிக்கவே யில்லை. 'வயசாகி விட்டாலே மனிதர்களுக்கு அறிவுத் திறன் குறைந்து விடுகிறது. அதை ஒப்புக் கொள்ளாமல் கிழங்கள் 'தொண தொண' வென்று ஏதாவது சொல்லிக் கொண்டு பிராணனை வாங்குவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கின்றன''

என்று நினைத்தான். வாசுதேவனோ அவனுடைய உதாசீனத்தைப் பொருட்படுத்தாமல் 'மகனுக்கு நல்லமையானவைகளைச்சொல்ல வேண்டியது தகப்பனின் இன்றியமையாத கடமைகளில் ஒன்று' என்ற அழுத்தமான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்.

அன்றொரு நாள் ஜவுளிக்கடையிலிருந்து குமாஸ்தா ஒருவன் துரைசாமியைத் தேடிக் கொண்டு வந்தான். அப்போது அவன் வீட்டிலில்லை. வாசுதேவன் அந்தக் குமாஸ்தாவை என்ன விஷயம் என்று விசாரித்தார். துரைசாமி தன் கடைக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியை வசூல் பண்ணுவதற்காக வந்ததாகத் தெரிவித்தான் அவன். "பாக்கி ரொம்ப நாளாகத் தங்கி விட்டது. அவர் பண்ணுவது கொஞ்சங்கூட நன்றாயில்லை. அப்புறம் எங்கள் மீது வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. அவர் வந்தால் சொல்லுங்கள்" என்று கூறி விட்டுப் போனான். அவன் தவறுதலான வார்த்தை எதையும் உபயோகிக்காத போதிலும் அவன் சொற்களில் மறைந்திருந்த கண்டிப்பையும் கண்டனத்தையும் எளிதில் உணர்ந்த வாசுதேவய்யர் அவமான மடைந்து மனம் குன்றிப் போனார்.

துரைசாமி வந்ததும் விஷயத்தை அவனிடம் கூறினார் தந்தை. "எதற்காகடா இப்படி கௌரவத்தை நீயே குறைத்துக் கொள்ளுகிறாய்? ஒருவன் ஒரு வார்த்தை சொல்லும்படி வைத்துக் கொள்ளலாமா? ஏன் கடன் வாங்குகிறாய்? அப்படியே வாங்கினாலும் சீக்கிரம் பைசல் பண்ணிவிட வேண்டாமா? கடன்காரன் வீடு தேடி வந்து கண்டபடி பேசும் வரையில் பேசாமலிருக்கலாமா? உனக்கு அவமானமாக இல்லையா?" என்று சற்றுக் கடுமையாகக் கண்டித்தார்.

துரைசாமிக்கு அசாத்தியமான கோபம் ஏற்பட்டு விட்டது. "உங்களுக்கு எத்தனை தரம்தான் சொல்லுவது? இனி என் விஷயத்தில் தலையிட்டீர்களோ தெரியும் சேதி?" என்று அக்னியைப் போல் பொரிந்தான்.

அவனுடைய மரியாதையற்ற சொற்கள் அவர் உள்ளத்தில் சுரீரென்று தைத்து மிகவும் புண்படுத்தி விட்டன. வேதனையும் வருத்தமும் சீற்றமும் அவருள்ளத்தில் பொங்கி எழுந்தன. "நானிருப்பது ரொம்பத் தொல்லையாக இருக்கிறதா? பேஷ், எனக்கு ரொம்ப மரியாதையை அளித்து விட்டாய்! இனி ஒரு கணமும் இந்த வீட்டில் நானிருக்கப்போவதில்லை. இன்றே கிளம்பிக் கிராமத்துக்குப் போகிறேன். என்னுடைய சொற்ப நிலம் தினம் ஒரு வேளை சோறுவது போடும் எனக்கு" என்றார் படபடப்புடன்.

"போய்க்கொள்ளுங்கள் தாராளமாக; நான் குறுக்கே நிற்கவில்லை! இந்த உருட்டலுக்கெல்லாம் நான் பயந்து விடமாட்டேன்; கவலையும் கொள்ளமாட்டேன்" என்றான் அப்போதும் கோபம் தணியப் பெறாதவனாக.

"ஏய் மங்களம்!" என்று உரத்துக் கூப்பிட்டார் வாசுதேவன் தன் மனைவியை.

தோட்டத்திலிருந்த அவள் அவருடைய குரலிலிருந்த வன்மையையும் கடுமையையும் கண்டு என்னமோ ஏதோ என்ற கவலையுடன் விரைந்து வந்தாள்.

"உன் பிள்ளைக்கு நான் இங்கே இருப்பது ரொம்பவும் தொல்லையாக இருக்கிறதாம்; மதிப்பில்லாத இந்த வீட்டை விட்டு வெளியேறி ஊருக்குப் போய்விடுவதாகத் தீர்மானித்து விட்டேன். இனிமேல் இந்த வீட்டில் ஜலபானம் கூடக் கிடையாது. ஊருக்குப் போக ராத்திரிதான் ரயில். அது வரையில் அடுத்த தெரு அப்பாசாமியின் வீட்டில் போயிருக்கப் போகிறேன். மூட்டை முடிச்சை யெல்லாம் கட்டிக் கொண்டு அங்கே வந்துவிடு நீ. ராத்திரி ரயிலுக்குப் போகணும்" என்று கூச்சல் போட்டு விட்டுக் கிளம்ப யத்தனம் செய்தார்.

"இது என்ன கூத்து? என்ன விஷயம் நடந்தது? குழந்தைதான் ஏதாவது சொல்லியிருந்தாலும்..." என்று அவள் கூறிக் கொண்டிருக்கையில் "உனக்கு வர அபிப்பிராயமில்லா விட்டால் வர வேண்டாம். உன் 'குழந்தை'யைச் சீராட்டிக் கொண்டு இங்கேயே இருந்து 'சிரிப்பாணி' பட்டுக் கொண்டிரு" என்று ஆவேசத்துடன் கூறித் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அப்பாசாமியின் வீட்டை நோக்கி 'விர்'ரென்று நடந்து விட்டார் வாசுதேவன்.

* * *

அன்று மாலை ஏழு மணி யிருக்கும். துரைசாமி ஆபீஸில் வேலை செய்து கொண்டிருந்தான். அவனைத் தவிர மற்ற குமாஸ்தாக்கள் அனைவரும்—மானேஜர் உள்பட வீட்டுக்குப் போய் விட்டார்கள். அவன் முக்கியமான ஒரு இலாகாவைக் கவனித்து வந்தானாகையால் மற்றவர்களை விட அவனுக்கு வேலை அதிகம். தினமும் கடைசியாக வீட்டுக்குப் போகிறவன் அவன்தான்.

வேலையை முடித்து விட்டு 'பைல்'களையெல்லாம் அடுக்கிக் கட்டி வைத்து விட்டு மேஜை டிராயரையும் இழுத்துப் பூட்டினான் துரைசாமி. இரவு காவற்காரன் இருசப்பனும் வந்து விட்டான். ஆபீஸ் சாவியை அவனிடம் ஒப்புவித்து விட்டுக் கிளம்ப வேண்டியதுதான் பாக்கி

நிர்மலமாயிருந்த வானத்தில் திடீரென்று, கருமேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டன. அடுத்த கணத்தில் பயங்கரமாக கர்ஜித்த இடிகளுடனும், 'பளீர் பளீ'ரென்று கண்ணைப் பறித்த மின்னல்களுடனும் பெரு மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. வானமே கிழிந்து அங்கிருக்கும் ஜலமெல்லாம் கொட்டுகிறதோ என்று ஐயுறும் வண்ணம் சோனாமாரியாக ஊற்றியது. துரைசாமியிடம் குடையில்லை. அவன் ஆபீஸ் ஒரு ஒதுப்புற



பையன் (பெரியவரைப் பார்த்து):- சார், இன்றைக்கு உங்களுக்கு ஓராறு கெட்டுப் போயிருக்கிறதா?

பெரியவர்:—ஆமாம், கெட்டுப் போயிருப்பது போலத்தான் ஞாபகம். ஏன், உன் கையில் அந்தக் காசு அகப்பட்டதா?

பையன்:—இல்லை, ஸார்! இப்படி எத்தனை பேருக்குக் கெட்டுப் போயிருக்கும் என்று ஒரு கணக்கு எடுக்கிறேன்! நீங்கள் 52-வது ஆசாமி!

மாக இருந்ததால் வண்டியோ பஸ்ஸோ எது வேண்டுமானாலும் முக்கால் மைல் போனால் தான் கிடைக்கும். அருகில் ஒரு ஈ காக்கை கூடப் பார்க்க முடியாது. அவனுடைய வீடோ ஒன்றரை மைல் தூரத்திலிருந்தது. என்ன செய்வது எப்படி வீடு போய்ச் சேருவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு ஆபீஸிலேயே உட்கார்ந்திருந்தான்.

"இந்தச் சனியன் பிடித்த மழை நான் கிளம்பும் சமயத்தில் பிடித்துக் கொண்டு விட்டதே" என்று முணுமுணுத்த துரைசாமியைப் பார்த்து "என்ன சார்! உலகமெல்லாம் மழை பெய்யாதா என்று ஏங்கிக் கிட்டுக் கிடக்குது. நீங்க சனியன் என்று திட்ட ஆரம்பித்து விட்டீங்களே மழையை! நமக்குக் கொஞ்சம் அசௌகரியமாயிருந்தாலும் உலகத்தின் நன்மையாவது நினைத்துப் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டாங்களா" என்றான் காவற்கார இருசப்பன்.

"டேய்! நீ ஏன் சொல்லமாட்டாய்? வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வந்து விட்டாய் நீ! இனி நாளைக் காலை வரையில் உனக்குக் கவலையில்லை. உலக க்ஷேமத்தைப் பற்றி ஏன் பேச மாட்டாய்?" என்று இருசப்பன் மீது எரிந்து விழுந்தான் துரைசாமி.

மழை விட்டுவிடும் என்று அவன் எதிர் பார்த்ததுக்கு மாறாக அதன் கடுமை தான் அதிகமாகிக் கொண்டிருந்தது. போதாக் குறைக்கு மின்சார விளக்குகளெல்லாம் வேறு திடீரென்று நின்று விட்டன!

மணி ஓடிக் கொண்டிருந்தது. மழையும் நிற்கவில்லை; அணைந்து போன விளக்குகளும் மீண்டும் எரியவில்லை. "சரிதான், இன்று இப்படியே உட்கார்ந்திருக்க வேண்டியது தான்" என்று எண்ணிய துரைசாமி ஆத்திரத்துடன் மழையைச் சபித்தான். மின்சார சக்தியைச் சபித்தான்! ஆபீஸைச் சபித்தான். தன்னைத் தானே சபித்துக் கொண்டான். சாப்பிட்டு விட்டு வந்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த இருசப்பனைக் கண்டு ஆத்திரத்துடன் உள்ளூறக் குமுறினான்!

சற்றுத் தூரத்தில் திடீரென்று 'டார்ச்' விளக்கின் ஒளி தெரிவதைக் கவனித்தான் துரைசாமி. அவ்வொளி சிறிது சிறிதாக அருகில் நெருங்கிக்கொண்டு வந்து ஆபீஸ் காம்பவுண்டுக்குள்ளும் நுழைந்து விட்டதைக் கண்ட அவன் 'இந்தக் கொட்டுகிற மழையில், உலகத்திலுள்ள எந்த ஜீவராசியும் வெளிக் கிளம்பத் தயங்கும் இவ்வேளையில், நம் ஆபீஸைத் தேடி வருகிற ஜீவன் யாராக இருக்கும்' என்று அபார வியப்பெய்தியவனாய் வெளி வராந்தாவுக்கு வந்தான்.

படியை நெருங்கி வந்தது அந்த உருவம்.

"யாரது?" என்று கடுமையான குரலில் அதிகாரத்துடன் கேட்டான் துரைசாமி.

"துரைசாமி!"

அவன் தந்தையின் குரல்தான் அது!

ஸ்தம்பித்துவிட்ட துரைசாமி "எங்கே அப்பா வந்தீர்கள், இந்தப் பிரளயத்தில் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டான்.

வராந்தாவில் ஏறியவாறு வாசுதேவன் "உனக்காகக் குடை எடுத்துக் கொண்டு வந்தேண்டா! சாயங்காலம் மழை பிடித்துக் கொண்டதும் உன் நினைவுதான் வந்தது எனக்கு. மழையும் நிற்காமல் பெய்வதைக் கண்டு நீ மழையில் ஆபீஸிலேயே மாட்டிக் கொண்டிருப்பாய் என்று கவலையாக இருந்தது. உன் ஆபீஸ் இருக்குமிடம் ஒரு அத்வானமாயிற்றே, வண்டி எதுவும் கிடைக்காதே என்று விசாரப் பட்டேன். அப்பாசாமியிடமிருந்து குடையை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போய் உன் குடையையும் எடுத்துக் கொண்டு வந்தேன். என்னை நீ அலட்சியப் படுத்துகிறாய் என்பதற்காக நீ எப்படிப் போனாலென்ன என்று என் பெற்ற மனம் கேட்கிறதா?" என்றார்.

திடீரென்று துரைசாமி உணர்ச்சி பெற்றான். வாசுதேவனின் பெற்ற மனம் பிள்ளையை மாற்றி விட்டது.

"அப்பா! என் அறிவைத் தாண்டிவிட்டீர்கள். என்னை மன்னித்து விடுங்கள். இனி உங்களை ஒருக்காலும் அலட்சியப் படுத்த மாட்டேன்! முட்டாள்தனமாக இது வரையில் நடந்துகொண்டு விட்டேன்" என்று அவர் காலில் விழுந்தான். வெளியில் கொட்டிக் கொண்டிருந்த மழையுடன் போட்டியிட்டுக்கொண்டு அவன் கண்களில் கண்ணீர் மழை பொழிந்து கொண்டிருந்தது!

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இனிமையான நறுமணத்தை
நீங்களும் அனுபவியுங்கள்
Himalaya Bouquet
Himalaya Bouquet
இரண்டு
நேர்த்தியான
தயாரிப்புகள்
HBP. 6-X30 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

